# கலைக்கதிர்

ஏப்ரல் '56





# உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

# DPF பம்புகள்

**'DPF' பம்புகளின் விசேஷ அம்சங்கள்**

குறைந்த செலவில் அதிக தண்ணீர்

★ நீடித்த உழைப்பு

★ நிசப்தமான ஓட்டம்

★ குறைந்த கவனிப்பு



மோட்டாருடன் இணைக்கப்பட்ட 'DPF பம்பு

பால் பேரிங்குகள் பொருத்தப்பட்ட 'DPF' பம்புகள் 2″ முதல் 8″ வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.



DPF பெல்ட் டிரைவ் பம்பு

## தண்டாயுதபாணி பவுண்டரி லிட்.,

பாப்பநாயக்கன்பாளையம்,

கோயமுத்தூர்.

போன்: 219

தந்தி: மோட்டார்பம்பு.

# குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

●

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்
ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

●

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்
இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல
டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

●

*Managing Agents :—*
N. APPUSWAMY NAIDU & CO.

*Managing Director :—*
G. V. MUTHUSWAMY, B. Sc.

# இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விபரங்களுக்கு எழுதவும்.

# பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி : "PROTECTION" போன் : "121"

# "கலைக்கதிர்"

கலையின் களஞ்சியம்
சிந்தனைச் செல்வம்

* கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்து

** கலைநலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது

*** பார்த்தால் படிக்கத் தூண்டும்

**** படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்

ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்டு. கோயமுத்தூர்.

# கலைக்கதிர்

மலர்—8 ★ ஏப்ரல் – 1956 ★ இதழ்—4

ஆசிரியர் :

**ஜி. ஆர். தாமோதரன்,**

B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London),
A. M. I. E. (India) M. P.

✲

## இந்த இதழில்:

| | | | |
|---|---|---|---|
| காற்றும் கலமும் | ... | திரு. K. S. மகாதேவன் | 2 |
| காதலும் கடமையும் | ... | ,, அ. ச. ஞானசம்பந்தம் | 7 |
| வானநூல் அறிவு | ... | ,, பி. சவரிமுத்து | 15 |
| உலகப் பொது மொழி | ... | ,, மு. சண்முகன் | 19 |
| மழை வேண்டுமா? | ... | ,, இரா. இருசு | 23 |
| அவள் ஒரு பைத்தியம் | ... | ,, 'சிந்தனை' | 26 |
| விந்தை ரேடார் (அட்டை) | ... | ,, தி. அ. கறுப்பண்ணன் | 29 |
| புரட்சிமணி-புத்ததாஸ் (பாட்டு) | ... | ,, 'நையாண்டியார்' | 37 |
| குழந்தைமையும் விளையாட்டும் | ... | ,, G. R. பரமேஷ் | 38 |
| தேவர் கண்ட திருநாடு | ... | ,, தா. ஏ. ஞானமூர்த்தி | 42 |
| வினுக்களும் விடைகளும் | ... | ... | 47 |
| மக்கள் கை | ... | ,, ம. ரா. செயா பூபதி | 48 |
| உள்ளத்தின் உண்மை | ... | ,, தா. ஏ. சண்முகம் | 52 |
| கல்லறைக்குள் | ... | ,, வ. தண்டபாணி | 54 |
| நூல் அரங்கு | ... | ... | 58 |
| இது செய்தி | ... | ... | 60 |
| பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | | டாக்டர் மு. வரதராசன் , | 61 |

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

# காற்றும் கலமும்

திரு. K. S. மகாதேவன், M.A., B.Sc.

நாங்கள் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலம். ஒரு நாள் காலை, கடலாடிவிட்டுத் திரும்பலாம் என்ற திட்டத்துடன் பக்கத்தில் உள்ள பறங்கிப் பேட்டைக்குச் சென்றோம். ஆனால் அங்குச் சென்ற பின்னர்தான் எங்களுக்கு உண்மை தெரிய வந்தது. கடற்கரையை அடைய வேண்டுமானால், நேர் கிழக்கே மூன்று மைல் தொலைவு சென்றாகவேண்டும்! நடந்து போகலாமா என்று எண்ணும் போதே சிலருக்கு முகம் வெளுத்து விட்டது! வண்டிகள் போய் வருவதற்கும் ஒழுங்கான வழி இருப்பதாகத் தெரிய வில்லை! இந்த நிலையில் மாணவர் ஒருவரின் மூளை திடீர் என்று வியக்கும் வகையில் வேலை செய்தது! ஊரிலிருந்து கடற்கரை வரையில் நீண்டு கிடக்கும் உப்பங்கழி ஒன்று அங்கு உண்டு. மீன் பிடிக்கும் படகுகள் அங்கும் இங்கும் ஓயாமல் நகர்ந்துகொண் டிருப்பதைக் கண்ட அவர், ''ஏன் நாமும் ஒரு படகில் ஏறிக்கொண்டு கடற்கரையை அடையக்கூடாது?'' என்று கேட்டார். ''ஆம்; ஆம்! அதுவே நல்ல வழி!'' என்று எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம்.

படகில் ஏறி நாங்கள் அமர்ந்ததும், படகோட்டி, கம்பத்தின் மீது பாய்ச்சீலையை உயர்த்திக் கட்டினான். மேற்கிலிருந்து வீசிய காற்று, படகை மிக விரைவாகக் கடலை நோக்கி நகர்த்திச் சென்றது. அன்று வரை, படகில் ஏறியே அறியாத எங்களில் சிலருக்கு எவ்வித முயற்சியும் இன்றி, நீரைக் கிழித்துக்கொண்டு படகு முன்னேறுவது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது! 'ஆ, ஊ' என்ற ஆரவாரம் அடங்கிய பிறகு சிலர் பாடத் தொடங்கினர். பாட்டிற்குப் பின்னர் அரசியல் வம்பு எழுந்து அடங்கிற்று. பின்னர் அமைதி நிலவிற்று! எங்களிடை இருந்த தமிழ் மாணவர் ஒருவர் ''ஓடம் ஏறினும் பாடம் கைவிட விரும்பாதவராய்க் கையோடு ஒரு புறநானூற்றுப் புத்தகத்தையும் கொண்டுவந்திருந்தார்! அருகில் இருந்த மாணவர் ஒருவர் அப்புத்தகத்தைக் கை நீட்டி வாங்கி விரித்தார்! அவர் கண்ணில் பட்ட

*''நளி இரு முந்நீர்*
*நாவாய் ஓட்டி*
*வளி தொழில் ஆண்ட*
*உரவோன் மருக''*

என்ற இரண்டு அடிகளைச் சற்று இசை கலந்த குரலில் படித்து நிறுத்தினார்.

''அப்படி என்றால் பொருள் என்ன'' என்று ஒரு கேள்வியைப் போட்டார், வகுப்பில் பதவுரை கூறும்படி கேட்டுக் கேட்டுப் பழகிப்போன ஒரு மாணவர்.

''நீர் செறிந்த பெரிய கடலின் கண்ணே ...... காற்றின்றி நாவாய் ஓடாததாக, ஆண்டு வளிச் செல்வனை அழைத்து ஏவல் கொண்ட வலியோன் மரபினுள்ளானே'' என்ற உரைப்பகுதி உடனே படிக்கப் பட்டது.

''மேல் நாட்டில் காற்றைக் கிழித்துக் கொண்டு பறக்கிருர்கள்; நாமோ, இன்னும் காற்றுக் கடவுளைக் கெஞ்சிக் காற்று அழைத்த கதை கேட்டே காலந்தள்ளி வருகிறேம்!'' என்று சலிப்புடன் குரல் கொடுத்தார், எப்பொழுதும் முன்னேற்றத் தைப் பேச்சிலேயே காணுகிற ஒரு நண்பர்!

அதுவரையில் பேசாது இருந்த தமிழ் மாணவர் மெல்லக் கனைத்து விட்டுப் பேசத் தொடங்கினுர்.

''உரையினை வைத்துக்கொண்டு மூலத் தை மதிப்பிடும் செய்கை முதலில் ஒழிந் தால்தான் நூல்களின் உண்மைக் கருத்துப் புலனுகும்! புற நாநூற்றுப் பாடலின் இந்த வரிகளுக்கு விளக்கந் தருவதற்குக் காற்றுக் கடவுளை இழுக்கவே வேண்டுவ தில்லை; ''வளி தொழில் ஆண்ட உரவோன் என் பதற்கு வெளிப்படையாகக் ''காற்றின் இயல்பு அறிந்து அதனைப் பயன்படுத்திக் கொண்ட வலியோன் வழியில் வந்தவன்'' என்றே பொருள் கொள்ளலாம். ஏனெ னின் கிரேக்கரும் உரோமர்களும் காற்றின் இயல்பு அறிந்து அதனைப் பயன் படுத்திக் கப்பல் விடக் கற்றுக் கொள்வதற்கு முன்னரே, தமிழர்கள் அந்தக் கலையில் தனிச் சிறப்புப் பெற்றிருந்தனர்'' என்று சொன்னுர்.

''இப்படிச் சொல்வதற்குச் சான்று வேண்டுமே!'' என்றுர் இடையில் அமர்ந் திருந்த வரலாற்று மாணவர்.

தமிழ் மாணவர் மீண்டும் தொடர்ந்தார்.

''தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும் கடல்கள் அமைந்து இருப்பதுடன், நான்கு திசைகளில் இருந்து காற்றும் வீசுகின்றது. இந்த இயற்கைச் சூழ்நிலைகள்தாம் காற்றுப் பற்றிய இயல்புகளை அறிந்து கடலிலே கலம் செலுத்தும் கலையில் தமிழனை வல்ல வனுக்கின. இவ்வுண்மை, தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளினின்றும் வெவ்வேறு காலங்களில் வீசும் காற்றுக்கு முறையே தென்றல், வாடை, கொண்டல் கோடை என்று தனித்தனிப் பெயர்கள் இட்டுத் தமிழன் அழைத்ததிலிருந்து தெரிகின்றது'' என்றுர்.

அது வரையில், தமிழ் இலக்கியம் என்பது 'தலைவன் தலைவியர்' நாடகமே என்ற தவருன எண்ணம் கொண்டிருந்த மாணவர்களும் வியப்பு மேலிட, வாய் பேசாது கேட்கத் தொடங்கினர்.

தமிழ் மாணவர் மேலும் தொடர்ந்து பேசினுர்.

''திரை கடல் ஓடுவதற்கென்று தமிழர் வகுத்துக்கொண்ட கலங்கள் பல வகைப் பட்டன. பரிசல், ஓடம், தோணி, படகு, திமில் போன்ற சிறு கலங்களும், நாவாய், கப்பல், வங்கம் என்ற பெருங் கலங்களும் அக் காலத்தில் இருந்தன. எகிப்து, பாபி லோனியா, அசீரியா ஆகிய இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்கள், தமிழர்தம் கடல் வாணிபத்தின் சிறப்பினை வலியுறுத்துகின்றன. கப்பல்களின் தலைவன் நாய்கன் என அழைக்கப்பட் டான். கண்ணகியின் தந்தையின் பெயர் மாநாய்கன் என்பதை இங்கு நினைவிற் கொள்ளவேண்டும்.

பழங்காலத்துத் துறைமுகங்களாகிய முசிரி, கொற்கை, பூம்புகார் ஆகியவற்றின் பெருமையை எண்ணும் பொழுது, இக் காலத்துத் துறைமுகங்கட்கும் அத்தகைய சிறப்பு உண்டோ என்ற ஐயம் எழு கின்றது! வெளி நாட்டுக் கடற் கரையை முத்தமிட்டுத் தமிழ் நாடு திரும்பும் கப்பல்கள், விரித்த பாய் களையாமல், நிறைத்திருந்த பண்டங்களைக் குறைக் காமல், துறைமுகத்தினுள் புகுந்த காட்சி யைப் புற நானூற்றின்

*''மீப்பாய் களையாது*
*மிசைப்பரந் தோண்டாது*
*புகார்ப் புகுந்த பெருங்கலம்...''*

என்ற அடிகளால் காணலாம். இன்று

கூடக் கப்பல்கள் துறைமுகத்துள் நுழையும் போது இயந்திரத்தை நிறுத்தி விடுகின்றனர்; தரை தட்டாமல் இருப்பதற்காக அதிகமாக இருக்கும் பாரத்தை முன் கூட்டியே குறைத்து விடுகின்றனர்!

கலத்தினின்றும் இனி இறக்கப்பட்டு உள்நாடு செல்லக் காத்துக் கிடக்கும் பொருள்களும், கடல் வழிச் செல்லக் கலத்தின் வரவிற்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொருள்களும் துறைமுகத்தருகே மலைபோல் குவிந்து கிடந்த காட்சியைப் பட்டினப்பாலை,

*"நீரின் நின்று நிலத் தேற்றவும்*
*நிலத்தின் நின்று நீர் பரப்பவும்*
*அளந்தறியா பல பண்டம்*
*வரம்பு அறியாமை வந்து ஈண்டி"*

என்ற அடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

பழங்காலத்துக் கலங்கரை விளக்கத்தை (Light House) எப்படி வருணிப்பது! ஏணி சாத்தப்பட் டிருப்பினும் எவரும் எளிதில் அடைய முடியாத உயரத்திற்கு எழுந்து நின்ற அது, வானத்தைத் தாங்குவதற்கென்று நிறுத்திவைத்த நெடுந்தூண் போலக் காட்சி தந்தது. இரவு முழுதும் அதன் உச்சியில் நின்று எரியும் பெரு விளக்கு அலை கடலிலே வழி தவறும் கலங்களைத் துறை முகத்திற்கு அழைத்த படி இருந்தது. கல்லாலும், காறையாலும் கட்டப்பட்ட அத்தகைய கலங்கரை விளக்கத்தை

*"வானம் ஊன்றிய*
*மதலை போல*
*ஏணி சாத்திய*
*ஏற்றருஞ் சென்னி*
*விண்பொர நிவந்த*
*வேயா மாடத்து*
*இரவின் மாட்டிய*
*இலங்குசுடர் ஞெகிழி*
*உரவுநீர் அழுவத்து*
*ஓடு கலங்கரை"*

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகளால் காணலாம்.

இன்று போல அன்றும் தமிழகத்தின் கீழைக் கடலிலே புயல் உருவாகிப் பேயாட்டம் ஆடி வந்தது! கப்பலின் கயிறுகள் அவிழ்ந்து, பாய்ச்சீலை கிழிந்து போனதுடன் பாய்மரமே அடியோடு முறிந்து போதலும் உண்டு; அத்தகைய இரக்கத்திற்கு உரிய கலங்கள், தலைவன் நடுங்கும் படி, திக்குத் திசை தெரியாமல் நாட் கணக்கில் அலைகடலில் ஓடிக்கொண்டிருப்பதும் உண்டு. இந்நிகழ்ச்சிகளைக்

*"கூம்புமுதல் முறிய*
*வீங்குபிணி அவிழ்ந்து*
*கயிறு கால்பரிய*
*வயிறு பாழ்பட்டாங்கு*
*இதைசிதைந்து ஆர்ப்பத்*
*திரைபொரு முந்நீர்*
*இயங்குதிசை அறியாது*
*யாங்கணும் ஓடி"*

என்பன போன்ற (மணிமேகலை) அடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

காற்றுல் அலைக்கப்பட்ட அத்தகைய கலத்திலிருந்தவரின் நிலையை எப்படிச் சொல்வது! இரங்கினர்; ஏங்கினர்; அழுதனர்; தொழுதனர்; உற்றார் உறவினர் பெயரை எல்லாம் சொல்லிக் கூப்பிட்டுக் கதறினர்; கப்பல் தலைவனைக் காப்பாற்றும் படி கைகூப்பி நின்றனர் என்ற நெஞ்சம் உடைக்கும் செய்தியை "ஆ, ஆ என்றே அஞ்சினர் ஆழ்ந்தார்—ஒரு சாரார், கூ, கூ என்றே கூவிளி கொண்டார்—ஒரு சாரார், மாமா என்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒரு சாரார், ஏகீர் நாய்கீர் என் செய்தும் என்றார்- ஒரு சாரார்" என்ற பாடலால் அறியலாம்!

கலங் கவிழ்ந்த காலத்தில் இறந்தவர்கள் போக, எஞ்சியவர்கள் அலைகளால் சுமந்து

செல்லப்பட்டுக் காட்டு மக்கள் வாழ்ந்து வரும் கண் காணுத் தீவுகளிலே ஒதுக்கப் பட்டனர்! அத்தகைய மக்களுடன் கலந்து வாழ்ந்து, அவர்களைப் பண்பாடு பெறும்படி செய்த தமிழ் ராபின்சன் குரூசோக்களை (Robinson Crusoe)

*''நளிஇரு முந்நீர்*
*வளிகலன் வௌவ .*
*ஓடிமரம் பற்றி*
*ஊர்திரை உதைப்ப*
*நக்க சாரணர் .*
*நாகர் வாழ்மலைப்*
*பக்கம் சார்ந்துஅவர்*
*பான்மையன் ஆயினன்''*

என்ற மணிமேகலை அடிகளால் காணலாம்! என்று சொல்லி நிறுத்தினார்.

தமிழ் மாணவரின் பேச்சு முடிவதற்கும் படகு கடற்கரைக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. எதிரில் புரண்டு கொண்டிருக் கும் நீலக்கடல், எங்களை அலைக் கைகள் காட்டி அழைத்தது! வழி வழியாகக் கட லில் தவழ்ந்து விளையாடிய தமிழினத்தின் குழந்தைகள் நாங்கள் என்று எண்ணிய போது அதுவரை அறிந்திராத உணர்ச்சி எங்களுக்கு உண்டாகியது; அலை கடலில் அங்கும் இங்கும் ஆடி மகிழ்ந்தபின்னர் திரும்புவதற்கு ஆயுத்தமானோம்.

திடீரெனத் திடுக்கிடும் கேள்வி ஒன்றை ஒரு மாணவர் தூக்கி எங்கள் முன்னால் போட்டார்!

இப்பொழுது காற்று மேற்கிலிருந்து கிழக்கில் வீசுகிறது; நாமோ கிழக்கிலி ருந்து மேற்கே செல்ல வேண்டும்! இது எப்படி முடியும்?

''அனைவரும் சேர்ந்து துடுப்பு வலித்தால் ஒழிய படகு மேற்கில் ஓர் அடிகூட நகராது!'' என்றார் மற்றொரு மாணவர்.

''ஏன், நாமெல்லாரும் வளி தொழில் ஆண்ட உரவோன் வழி வந்தவர்தாமே! ஏன் காற்றின் திசையை மாற்றிக் கொள்ளக்கூடாது ?'' என்று கிண்டல் செய்தார். மேல் நாட்டினர் காற்றைக் கிழித் துப் பறப்பது பற்றி முதலில் குறிப்பிட்ட நண்பர்! எல்லோரும் அதை ஒரு நகைச் சுவையாகக்கொண்டு சிரித்தனர். ஆனால் தமிழ் மாணவரின் முகம் சற்று வாடத்தான் செய்தது.

படகில் இருந்த துடுப்புக்களை ஆளுக் கொன்றாக எடுத்துக்கொண்டு படகின் இருபுறமும் பயிற்சி பெற்றவர்கள் போலச் சில மாணவர்கள் அமர்ந்தனர்.

தமிழ் மாணவருக்குத் துடுப்புக் கிடைக்க வில்லை; அதைக் கண்ட ஒரு நண்பர் ''அவ ருக்குத் துடுப்பு எதற்கு? வளி தொழில் ஆண்ட உரவோன் மருகன்; காற்றைக் கூப்பிட்டே காரியத்தை முடித்துவிடுவார்'' என்றார் !

படகோட்டி, படகிலே ஏறியதும் எங் களை ஒருமுறை புன்சிரிப்புடன் பார்த்தான்.

''ஐயா, இந்த மேல்காற்றை எதிர்த்து உங்களாலே பத்து அடிகூடத் துடுப்புப் போட முடியாது'' என்றான்.

''அப்புறம் என்ன செய்வது?'' இக் கேள்வியை எல்லோரும் ஒரே குரலில் கேட்டோம்.

''நீங்கள் எல்லோரும் படகில் போய்ப் பேசாமல் உட்காருங்கள்; படகு தானாக மேற்கே போகும்!'' என்றான்.

எங்களுக்குப் புரியவே இல்லை! காற்று மேற்கி லிருந்து விரைந்து வீசுகிறது; படகு எப்படிக் கிழக்கி லிருந்து மேற்கே போகும்? அவன் எங்களைக் கேலி செய் கிறான் என்று முடிவுசெய்து கொண்டோம்! படகோட்டி பாய்ச்சீலையை உயர்த்திக் கட்டினான்; படகு நிலை பெயர்ந்து ஆடிப் பின்னால் நகர்ந்தது !

''ஐயோ! கடலுக்குப் போகிறதே!'' என்று நாங்கள் கத்திவிட்டோம். படகோட்டி, எங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சுக்கானைப் (rudder) பிடித்து இலகுவாகத் திருப்பினான். படகு தென்மேற்குத் திசை யைப் பார்த்தபடி திரும்பியது; பாய்ச்சீலையும்




காற்றை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு கோணத்தில் சாய்ந்து நின்றது! ஆ! என்ன வியப்பு! படகு இப்பொழுது தென் மேற்குத் திசையில் முன்னேறத் தொடங்கியது!

காற்று மேற்கி லிருந்து வீசுகிறது. ஆனால் படகோ தென்மேற்குத் திசையில் முன்னேறுகிறது! இந்தப் புதிர் எங்கள் ஒருவருக்கும் விளங்க வில்லை! படகோட்டியையே "இது எப்படி" என்று கேட்டோம். படகோட்டி கூறினான்.

"காற்று, படகை மேற்கி லிருந்து கிழக்கே தள்ளுகிறது. ஆனால் தண்ணீரோ படகை உதைந்து மேற்கே தள்ளுகிறது..."

"ஆமாம் ஆமாம்! ஒவ்வொரு முயற்சிக்கும் நேரான, எதிரான முயற்சி தோன்றும் என்பது நியூட்டனின் மூன்றும் விதி" என்று அறிவியல் மாணவர் ஒருவர் விழித்துக் கொண்டு கத்தினார்!

"உன் விதி இருக்கட்டும் அப்பா அவன் சொல்லுவதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்கக் கூடாதா?" என்றார் தமிழ் மாணவர். பெரும் ஆரவாரமும் சிரிப்பொலியும் எழுந்து அடங்கின. படகோட்டி தொடர்ந்து கூறினான்.

"காற்று இப்படி ஒருபக்கம் தள்ள, தண்ணீர் மற்றொரு பக்கம் உதைய, படகு இரண்டு பக்கமும் போகமுடியாமல் இப்படிச் சாய்வாக முன்னே போகிறது என்று விளக்கினான்.

ஆம்! எதிர்ப்புக் குறைவாக இருக்கும் திசையில் (in a direction where there is least resistance)முன்னேறுகிறது" என்று அறிவியல்மொழிப் படுத்தினார் எங்கள் அறிவியல்துறை நண்பர்.

இதற்குள் படகு உப்பங் கழியின் தென் கரையைத் தொடுவதுபோல் வந்துவிட்டது. இதற்குமேல் என்ன செய்வது என்று எங்களுக்குத் தெரிய வில்லை!

படகோட்டி சுக்கானை இடதுபுறமாகத் திருப்பினான். படகு அழகாகத் திரும்பி வடமேற்குத்திசையைப் பார்த்தது; அதற்கு ஏற்ற முறையில் பாய்ச்சீலையும் தானாகத் திரும்பிக் காற்றைத் தடுத்துக்கொண்டிருந்தது! படகு இப்பொழுது வடமேற்குத் திசையில் முன்னேறத் தொடங்கியது! ஆனால் காற்று எப்பொழுதும்போல மேற்கிலிருந்து வீசிக்கொண்டிருந்தது!! சற்று நேரத்திற் கெல்லாம் படகு வடகரை ஓரமாக வந்து சேர்ந்தது. படகோட்டி மீண்டும் சுக்கானைத் திருப்பப் படகு மீண்டும் தென் மேற்குத் திசையில் செல்லத் தொடங்கியது. இப்படியாக மாறி மாறி வளைந்த (Zig-Zag) பாதையில் சென்ற படகு ஒரு மணி நேரத்திற்குள் நாங்கள் காலையில் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டது!

"காற்று மேற்கி லிருந்து கிழக்கே வீசும் போது, நீ எங்களைக் கிழக்கி லிருந்து மேற்கே கொண்டுவந்து விட்டாயே! என்றோம் வியப்பை அடக்கமுடியாத நாங்கள்.

"இது என்ன ஐயா பெரிய செய்தி!" என்றான் படகோட்டி. இன்னும் என்னென்ன பெரிய செய்திகள் இருக்குமோ, யாருக்குத் தெரியும்?

நாங்கள் பேசிய வாடகைப் பணம் மூன்று ரூபாயை அவன் கையில் கொடுத்தோம். எங்கள் தமிழ் அன்பர் தன் பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்தார்!

"கொடை வள்ளலே, வாழ்க!" என்று கூறி நாங்கள் சிரித்தோம். அவரோ "இவன் நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உரவோன் மருகன்; இவன் நீடுழி வாழ்க!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.



# காதலும் கடமையும்

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M. A.

சுமந்திரன் இராமன்மாட்டுக் கொண்டிருந்த அன்பு ஒரு தந்தை மைந்தனிடம் கொண்டிருந்த அன்பை ஒத்ததாகும். தசரதன் இராமன்மேல் கொண்டிருந்த காதலுக்குச் சோதனை வந்தது போலவே சுமந்திரனுடைய அன்புக்கும் சோதனை வந்துவிட்டது. இருவரும் கடமையை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருப்பவர்கள். ஒருவன் மன்னவன்; மற்றவன் அவனுடைய அமைச்சன். மன்னவனும் அமைச்சனும் கடமையை மறந்து அன்பின் வழிச் சென்றுவிட்டால் இவ்வுலகம் என்ன ஆவது? தனிப்பட்ட தங்களுடைய அன்பை மறந்து கடமையை நிறைவேற்றக் கூடியவர்கள்மட்டுமே அரசராகவும் அமைச்சராகவும் இருக்கத் தகுதி வாய்ந்தவர்கள். எனினும் அரசனும் அமைச்சனும் மனிதர்கள்தாம். அவர்கட்கும் விருப்பு வெறுப்புக்களும் மகிழ்ச்சி துயரங்களும் உண்டு. ஆனால் இந்த விருப்பு வெறுப்புக்கள் அவர்களுடைய கடமையில் தலையிடுதல் கூடாது. துயரம் வந்தபொழுது அவர்களும் அது தாளாமல் கண்ணீர் விட்டுக் கதற உரிமை உண்டு. துயரத்தைப் போக்கிக்கொள்ள மற்றவர்போல் முயற்சி செய்யவும் உரிமை உண்டு. ஆனால் துயர் போக்கும் முயற்சியில் கடமைக்கு ஊறு நேர்வதாயின் அவர்கள் துயர்போக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடாது. தனி மனிதன் வேண்டுமானால் இவ்வாறு கடமையை மறந்தும் துயர் துடைக்கும் முயற்சியில் ஈடுபடலாம். அது தவறே யாயினும் மன்னிக்கக் கூடிய தவறாகும். ஆனால் காவற் சாகாடு உகைக்கும் மன்னவர்க்கும், அமைச்சர்க்கும் இப்பொழுதுச் சட்டம் செல்லுபடி ஆவதில்லை. அவர்கள் தாங்கும் பொறுப்புக் காரணமாக அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்துக்கொண்டுதான் கடமையை நிறைவேற்ற வேண்டும். சுமந்திரனாகிய அமைச்சனும் தன் தலைவனாகிய தசரதனைப் போலவே துயரைப் பொறுத்துக் கொண்டு கடமையை நிறைவேற்ற முற்படுகிறான்.

இறைவனின் சோதனை பல சந்தருப்பங்களில் மிக வியக்கத் தகுந்த முறையில் வந்து சேரும். மனைவியுடனும் தம்பியுடனும் மிக இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த இராமனை முதலிற் சென்று கண்டவன் சுமந்திரனாவான். தசரதன் ஏவலால் இராமனை மந்திர சபைக்கு அழைத்து வரச்சென்ற நிலை அது. அங்கே அவர்கள் மூவரும் இருந்த நிலையைக் கண்ணும் மனமும் களிதுளும்பக் கண்டு பேரின்ப முற்றவனும் சுமந்திரனே. இராமனை நோக்கி, "ஐயனே! மன்னவன் ஆணை நின்னை வருமாறு பணித்துளது" என்று கூறினவனும் சுமந்திரனே. மன்னவன் ஏவல் என்ற சொற்களைக் கேட்ட

வுடன் மறுபேச்சு இன்றி உடனே புறப்பட்டு விட்டான் தந்தை சொல் காக்கும் அத் தனயன். இராமன் ஏறிய தேரைச் சுமந்திரனே செலுத்தினுன். இராமன் தெருவில் .பொன் தேரில் ஏறி வரும் காட்சியைக் காணப் பெண்களும் ஆண் களும் சூழ்ந்து நிற்கின்றனர்.

*"வாள் அரத்தவேல் வண்டொடு*
*கெண்டைகள் மறுகச்*
*சாள ரத்தினும் பூத்தன*
*தாமரை மலர்கள்* (மங். 56)

என்று கவிஞன் கூறும்பொழுது அயோத்தி மாநகரத்து மாதர்கள் அந்த அழகனைக் காணச் சாளரந்தொறும் எட்டிப் பார்த்து நின்ற காட்சி நம் மனக்கண் முன்னர் வருகிறது. உலகெலாம் புகழும் இராமனைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு வருவதால் சுமந்திரனுக்குத்தான் எத்தனை இன்பமும் செருக்கும் இருந்திருக்கும்? முடிசூட்டிக் கொள்ளப் போகும் மன்னனை— தான் மகன்போல் அன்பு பாராட்டும் குமரனைத் தன் தேரில் இந்த நல்ல செய்தியை அறிவித்தற்காக ஏற்றிச் செல்லும் எந்தத் தேர்வலான் தான் மகிழாமல் இருக்க முடியும்? எனவே மகிழ்ச்சிக் கடலில் திளைத்த வண்ணம் தேரை ஓட்டிச் செல்லும் சுமந்திரன், இன்னும் சில நேரத்தில் இதே இராமனை இதே தேரில் ஏற்றிக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டு செல்லப் போகிறோம் என்று நினைத்துத் தான் இருப்பானு? யாரேனும் ஒருவர் அவன் எதிரில் தோன்றி 'இப்பொழுது நடைபெறும் தேர் ஓட்டம் இன்னும் சிறிது நேரத்தில் வேறு பொருளுடன் நடைபெறப் போகிறது' என்று கூறி இருப்பின் சுமந்திரன் அக்கூற்றை நம்பி யிருப்பானு? அவ்வாறு கூறியவனைச் சும்மா விட்டிருப் பானு? ஒருக்காலும் விட்டிருக்கமாட்டான். என்றாலும் என்ன? நினைக்காதது நடப்பது தானே இவ்வுலக இயற்கை?

மறுநாள் பொழுது விடிந்ததும், மயங் கிக்கிடக்கும் மன்னவன் பெயரால் ஆணை பிறக்கிறது. சுமந்திரனுக்கு! கைகேயியே அந்த ஆணையையும் இட்டிருக்கலாம். என்ன வியப்பான ஆணை? எந்த இராமனை முதல் நாள் மாலை எல்லையற்ற மகிழ்ச்சி யுடன் தேரில் ஏற்றிவந்தானே, அந்த இராமனைத்தான் இப்பொழுதும் ஏற்றிச் செல்லவேண்டும். அம்மட்டா? இல்லை. இராமனை மணந்த செயலுக்காகச் சீதை யையும், அவனை நிழல்போல் பிரியாது நின்ற செயலுக்காக இலக்குவனையும் அல்லவா சேர்த்து அழைத்துச் செல்ல வேண்டும்? என்ன கொடுமையான ஆணை? அயோத்தியிலேயே வேறு தேர் வல்லான் அகப்படவில்லையா? முதல் அமைச்சன்தானு இந்தக் கொடிய செயலை நிறைவேற்ற அகப்பட்டான்? ஆம்! அன்புக்கும் கடமைக்கும் போராட்டம்! எது வெற்றி பெறப்போகிறது? ஏன்? ஐயம் என்ன? கடமைதான்! அறுபதினுயிரம் ஆண்டுகள் வாழ்ந்த கிழவன் தானுகக் காடு போகிறேன் என்று கூறினுன். ஆனுல் சுமந்திரன் அந்தச் சொற்களைத் தன் வாயாற்கூடக் கூறக்கூடாது என்று அஞ்சி மங்கலமான, மறைமுகமான சொற்களால் பேசினுன் அல்லனே? அதே சுமந்திரனுக் குக் கிழவன் காடு செல்வதை வாயாலும் கூற அஞ்சிய சுமந்திரனுக்கு, இளங்காளை கள் இருவரையும், பேதைப் பெண் ஒருத்தி யையும், காட்டில் நேரே கொண்டு விட வேண்டிய தண்டனை வந்துவிட்டது. என்ன செய்வான்? அன்பை அவித்துக் கடமை மேல் எழவேண்டிய நிலைமையில் சுமந்திரன் முதல் அமைச்சன் என்பதற்கு ஏற்பக் கடமையைச் செய்தேவிட்டான்.

இராம இலக்குவர்கள் காட்டிற்குப் புறப்பட்டவுடன் அவர்களுடன் தொடர்ந்து ஒரு மக்கட் கடலும் உடன் சென்றது. இரவில் ஒரு சோலையில் இராமன் தங்கவே அக்கூட்டமும் உடன் தங்கிவிட்டது. அவர்களை எவ்வாறேனும் திருப்பி அனுப்பி

விட எண்ணிய இராமன் சூழ்ச்சி ஒன்று செய்தான். சுமந்திரனை இரவோடு இரவாகத் தேரை ஊர்நோக்கிச் செலுத்தச் செய்துவிட்டுத் தானும் அந்தக் காரிருளில் புறப்பட்டுவிட்டால் என்ன? விடிந்ததும் மக்கட் கூட்டம் இராமனைக் காணாமல் தவிக்கும். ஆனால் தேர்த் தடம் ஊர் நோக்கிச் செல்லுவதால் இராமனும் மீண்டு விட்டான் என்று கருதி அக் கூட்டமும் அயோத்தி மீண்டுவிடும். இவ்வாறு கருதிய இராமன் அந்தச் சோலையில் சுமந்திரனை ஒரு தனி இடத்தில் அழைத்துத் தன் கருத்தை வெளியிட்டான். இராமனுடைய இந்தச் சூழ்ச்சி முறையானது என்பதைச் சுமந்திரன் நன்கு அறிந்துகொண்டான் எனினும் தான் அந்த இரவு நேரத்தில் அருமை மைந்தனை விட்டுவிட்டு மீளவேண்டும் என்று நினைத்தவுடன் அவன் இதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் ஆறாகப் பெருகி விட்டது.

எல்லையற்ற துயரக்கடலில் ஆழ்ந்து விட்ட சுமந்திரன் தன்னுடைய வெறுக்கத் தகுந்த நிலையை உன்னி நைகிறான். இராமனைக் காடு செல்க என்று கட்டளையிட்ட கைகேயியையும், அக்கட்டளையைச் செயலில் நிறைவேற்றி வைத்த தன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். ஒரு கொடுமையான செயலைக் கட்டளை இட்டுவிடுவது எவ்வளவு எளிதானது? உயர்ந்த இடத்தில் இருந்துகொண்டு, ''உனக்கு தூக்குத் தண்டனை விதிக்கிறேன்'' என்று ஆணையிட்டு விடலாம். ஆனால் அதனைச் செயலளவில் நிறைவேற்றுபவன் எத்தனை மனவேதனை அடைகிறான்! தூக்கில் இடுபவனுக்கும் இடப்படுபவனுக்கும் எவ்வித மான பகைமையும் இல்லை. ஆனால் இடப்படுபவன் இடுபவன் மேல் சினம் கொள்ளக் காரணந்தான் உண்டா? அதுவும் இல்லை. இடுபவன் எதற்காக இத்தண்டனையைத் தருகின்றோம் என்று கூட அறியாமல்தானே அதனை நிறைவேற்றுகின்றான்? அவன் மனத்தில் கருணை நிரம்பி இருக்கலாம். என்றாலும் என்ன? இட்ட கட்டளையைச் செயலளவில் நிறைவேற்றி வைக்கும் அவனைக் கண்டு விரும்புவார் யாருளர்? அவன்மேல் யாதொரு குற்றமும் இல்லை என்று உலகம் அவனைப் புகழ்கிறதா? இல்லையே! அதே போலத்தான் சுமந்திரனுடைய நிலையும் இருக்கிறது. 'கட்டளை இட்ட கைகேயி இந்தக் கொடிய காட்சியைப் பார்க்கும் தீமை புரியவில்லையே? அதனைக் கண்டும் உயிரை வைத்திருக்கும் கொடுமை சுமந்திரனை யன்றோ சென்று சேர்கிறது? 'ஐயனே! உன்னை இக்காட்டிலே விட்டு விட்டு வெறும் தேரையும் என் உயிரையும் கொண்டு சென்று அயோத்தியை அடைவேனாயின், இக்கொடிய கட்டளையைப் பிறப்பித்த, அத்தாயினும், அவளைத் தூண்டிய விதியினும், கொடுமையில் யானே மேம்பட்டவன் என்ற கருத்துப்பட,

*''செவ்விய குரிசில் கூறத்*
*தேர்வலான் உணர்த்துவான் அவ்*
*வெவ்விய தாயின் தீய*
*விதியினின் மேலன் போலாம்''*

(தைலமாட்டு-20)

என்று கூறி வருந்துகிறான். கைகேயியை விடத் தான் கொடியவனாக ஆயின நிலைமையை நினைக்கும்பொழுது சுமந்திரன் பாகாய் உருகுகிறான். தீமையை நினைந்து செய்த கைகேயி எங்கே? நலமே புரிய வேண்டும் என்று நினைத்திருந்தும் சந்தருப்பங் காரணமாக இக் கொடிய செயலைச் செய்ய நேரிட்ட தான் எங்கே? இதனை நினையுந்தோறும் அவன் மனம் எல்லையற்ற துயரக்கடலில் தவிக்கிறது.

இத் துயரம் நீங்குவதன்முன் மற்றொரு துயரம் அவனைப் பிடித்துக்கொள்கிறது. மீண்டு சென்றவுடன் தன் வரவை எதிர் நோக்கி உயிரை வைத்துக்கொண்டிருக்கும் மன்னனுக்கு யாது விடை கூறுவது!

''பூங்கொடி போன்ற மிதிலைப் பொன்னை யும், தம்பியையும், இராமனையும் கானகத்தில் செலுத்தினேன் என்று கூறட்டுமா? உடன் அவர்களையும் அழைத்து வந்துவிட்டேன் என்று கூறட்டுமா?மெல்லிய பாதங்களை உடையவர்களை வலிய பரற் கற்கள் நிறைந்த காட்டில் நடக்குமாறு ஏவிவிட்டு யானமட்டும் இனிய தேரில் ஏறி நலத்துடன் வந்துற்றேன் என்று கூறட்டுமா?'' என்று அரற்றுகிறான் அத்தேர்வலான்.

*''தாருடை மலரினும் ஒதுங்கத் தக்கிலா*
*வாருடை முலையொடு மதுகை மைந்தரை*
*பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்*
*தேரிடை வந்தனன் தீதிலேன் என்கோ* (தைலம்- 22)

தசரதன்மாட்டும், இராமன்மாட்டும் தான்கொண்ட நட்பையும் அதன் பழைமையையும் நினைந்து பார்க்கிறான் சுமந்திரன். இந்த நள்ளிருளில் நடுக்காட்டில், நட்புடையார்கள் இவ்வாறு செய்வார்களா? அதிலும் பழமையான நட்புடையவர்கள் இவ்வாறு நினைக்கவும் துணிவார்களா? ''சாவில் சாதல், நோவில் நோதல், ஒண்பொருள் கொடுத்தல்,பிரிவு நனி வருந்தல்'' என்பவை அல்லவோ நட்பின் இலக்கணம்? நட்புடையார்கள் தம்மால் அன்பு செய்யப்பட்டவரை நட்ட நடுநிசியில் காட்டில் நடக்குமாறு விட்டுவிட்டுத் தாம்மட்டும் தேரில் ஊர்ந்து சென்ற வரலாற்றை இதுவரை எங்கேனும் கண்டதுண்டா? கேட்டதுதான் உண்டா? அரண்மனைக்குள் சென்றவுடன் தசரதன் முகத்தில் விழிக்க வேண்டாமா? மைந்தர்கள் எங்கே என்று மன்னவன் கேட்கும்பொழுது என்ன விடை கூறுவது? - என்று வருந்துகிறான் சுமந்திரன்.

ஆனால் தசரதனிடம் கூறுவாயாக என்று இராமன் சில சொற்களைக் கூறி விடுக்கிறான். மைந்தன் மீண்டு வந்தான் என்று கூறும் சொற்கள் தவிர வேறு எந்தச் சொற்களையும் ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் மன்னன் இருக்கமாட்டான் என்பதைச் சுமந்திரன் நன்கு அறிவான். அதிலும் இராமன் உறுதியாகக் காட்டில் சென்றுவிட்டான் என்று கூறினால், அச்சொற்களின் விளைவு என்ன என்பது பற்றியும் சுமந்திரன் அறிவான். அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தசரதனை, சம்பராசுரனைப் போர் தொலைத்த தசரதனைக் கொல்வது என்பது எளிதான செயல் அன்று. போரில் அவ்வேந்தனைக் கொல்லல் இயலாதேனும் ஓர் எளிய வழி உண்டு என்பதனை அவனிடம் பழகியவர்கள் அனைவருமே அறிவர். கிழவேந்தனுடைய உயிர் நாடி அவன் மைந்தனாகிய இராமனிடம் அன்றோ இருக்கிறது. எனவே இராமனைப் பிரித்துவிட்டால் தசரதனுடைய உயிர் பிரிவது உறுதி. மற்றொரு வகையாகக் கூறுமிடத்துத் தென்திசைக் கோனாகிய எமன் தசரதனை அணுகும் பொழுது இராமனைப் பிரிப்பதினையே ஒரு சூழ்ச்சியாகக் கொள்வான். இப்பொழுது சுமந்திரன் அரண்மனையுட் சென்று இராமன் காட்டினுள் சென்றுவிட்டான் என்று கூறும் சொற்கள் எமனுடைய தூதாக அமைந்துவிடும் மன்னனுக்கு. இதுவே அமைச்சனின் அச்சம். ''ஐயனே எமனுடைய தூதுவனாக யான் செல்லட்டுமா?'' என்ற கருத்தில்,

*''தென்புலக் கோமகன்*
*தூதிற் செல்கென்னோ?''*

(தைலம்—23)

என்று பேசத்தொடங்கிய சுமந்திரன் அடுத்த பாடலில் மற்றுமொரு படி மேற் சென்று விடுகிறான்.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம்—195) என்பது பழந்தமிழர் கண்ட அறம். இயலு

மாயின் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் இயலாக் காலத்து ஒன்றும் செய்யாமல் இருப்பதை யாரும் தவறு என்று கூறமாட்டார்கள். அவ்வாறு உதவி செய்யாமலும், சும்மா இராமலும் தீமை புரிகின்றவர்களை என்னவென்று கூறுவது? பிறருக்குத் தீமை செய்வதனையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்ட 'பெரியோர்'களும் உண்டு. இத்தகையவர்களை நோக்கித்தான் பழந்தமிழன் மேற்கூறிய பாடலைப் பாடினான் போலும். தீமை செய்தலினும் பலவகை உண்டு. தமக்குச் செய்யப்பட்ட தீமைக்கு எதிராகத் தீமை செய்பவர் ஒரு சாரார். இத்தகைய நிலையில் தீமை செய்யப்பட்டவர் செய்தாரிடம் அதிகம் வருந்தவேண்டுவ தின்று, ஏன்எனில் தாம் செய்ததற்கு எதிராகத்தானே இப்பொழுது தீமை செய்யப்படுகிறது என்று நினைத்து மனத்தில் அமைதி அடையலாம். ஆனால் தனக்கு ஒரு தீமையும் செய்யாத ஒருவனுக்குத் தீமை செய்தல் மிகவும் கொடியது. இதனைக் காட்டிலும் கொடியது தனக்கு நன்மையே புரிந்த ஒருவருக்குத் தான் தீமை செய்தல். இதனைத்தான் மனத்திற் கொண்டு பொதுமறை பாடிய பெரியார்,

*''எந்நன்றி கொன்றார்க்கும்*
*உய்வுஉண்டாம்; உய்வுஇல்லை*
*செய்ந்நன்றி கொன்ற*
*மகற்கு''*

(குறள்—110)

என்று கூறிச் சென்றார். இந்த மூன்றாவது வகையைச் சார்ந்தவனாகவே தன்னைக் கருதிக்கொள்ளுகிறான் சுமந்திரன். 'தசரதன் எனக்கு நன்மையே புரிந்தான். இப்பொழுது அவன் இறக்குந் தறுவாயில் இருக்கிறான். நகர மக்கள் அனைவருங் கூடி அவனைத் தேற்றி உயிரைப் பிடித்து வைத்துள்ளனர். இராமனை எவ்வாற்றானும் சுமந்திரன் கொணர்ந்துவிடுவான் என்ற நம்பிக்கையால் உயிரை வைத்துக் கொண்டு இருக்கிறான் மன்னவன். அத்தகையவனிடம் சென்று, 'அரசே உன் மகனைக் காட்டில் விட்டு வந்து விட்டேன்' என்று கூறுதலும், ஒரு வாளால் அவன் கழுத்தை வெட்டிக் கொன்றுவிடுதலும் ஒன்றுதான் - என்று இவ்வாறு நினைந்து அழுகிறான் அமைச்சர் பெருமகன்.

*''நால்திசை மாந்தரும்*
*நகர' மாக்களும்*
*தேற்றினர் கொணர்வர்உன்*
*சிறுவன் தன்னைஎன்று*
*ஆற்றின அரசனை*
*ஐய வெய்யஎம்*
*கூற்றுஅன சொல்லினால்*
*கொலைசெய் வேன்கொலோ!''*

(தைலம்–24)

மறுபடியும் எண்ணம் கைகேயியிடம் செல்லுகிறது. அரசனுடைய சீர் அழிவுக்கு அவளே காரணமாவாள். அவள் செய்த தீமையால் தசரதன் பெருந்துன்பம் அடைந்தது உண்மைதான். ஆனால் அவனுடைய உயிரை அவளோ, அவளுடைய சொற்களோ போக்கவு மில்லை; போக்க முடியவு மில்லை. இப்பொழுது சுமந்திரன் சென்று 'இராமன் போய்விட்டான்' என்று இரண்டு சொற்களைக் கூறிய மாத்திரையில் அரசன் இறந்துவிடுவான் எனில் சுமந்திரன் கைகேயியைவிடத் தீயவன் என்று கருதப்படமாட்டானா? பிறர் அவ்வாறு நினைக்காவிடினும் சுமந்திரன் தன்னைப் பற்றி அவ்வாறு நினைந்துகொள்ளுகிறான். அவன் நண்பனாக இதுவரை இருந்து இப்பொழுது தன்னுடைய சொற்களால் அரசன் உயிர் குடிக்கப் போகிறான். கைகேயி அரசனுடைய பகையாளியாக இருந்தும் அவன் உயிரைப் போக்கவில்லை. ஆராய்ந்து பார்த்தால் அவளுடைய புறப்பகையைக் காட்டிலும் சுமந்திரனுடைய அகப்பகை மிகவும் கொடுமை உடையதாகக் காட்சி யளிக்கிறது அவ்வமைச்சனுக்கு.

"வாள்போல் பகைவரை
அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர்
தொடர்பு" (குறள்- 882)

எனவே தன்னைத் தசரதனுடைய அகப் பகையாகவே மதித்த அமைச்சன் இதோ பேசுகிறான்:

"அரசே! தீயை மூட்டி நீ வேள்வி செய்து பெற்று வளர்த்த சிங்கக் குட்டியாகிய இராமன் அகன்றான்" என்று கூறட்டுமா? அவ்வாறு கூறினால் தசரதனுக்கு என்னைவிடக் கைகேயியே சிறந்தவள் போலும்" என்ற கருத்தில்,

"அங்கிமேல் வேள்விசெய்து
அரிதில் நீபெற்ற
சிங்கஏறு அகன்றதுஎன்று
உணர்த்தச் செல்கெனோ
எங்கள்கோ மகற்குஇனி
எண்ணில் கேகயன்
நங்கையே கடைமுறை
நல்லள் போலுமால்"

(தைலம்- 25)

காட்டிற்குச் செல்க என்று ஆணையிட்ட அவனைக்காட்டிலும் காட்டில் கொண்டு செலுத்திய தான் தீயவனே என்று நினைக்கிறான் அவன்.

இவ்வாறு பலவும் கூறி வருந்திய சுமந்திரனை இராமன் மார்புறப் புல்லிப் பலவாய நீதிகளையும் எடுத்துக் கூறி மனம் தேற்றினான். ஒருவாறு மனந்தேறிய சுமந்திரன் அம்மூவரையும் என்ன செய்தி சொல்லியனுப்புகிறார்கள் என்று வினவினான். இராமன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்ட பிறகு சீதையை நோக்கி 'நீவிர் யாது கூறுகிறீர்?' என்று கேட்டான்.

"அன்னவள் கூறுவாள்
அரசற்கு அத்தையர்க்கு
என்னுடை வணக்கமுன்
இயம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையும்
கிளியும் போற்றுகஎன்று
என்னுடை எங்கையர்க்கு
உணர்த்துவாய் என்னுள்"

"தேர்வலான் அவ்வுரை
கேட்டுத் தீங்குரு
ஆர்வலார் உயிர்துறப்பு
'எளிதன் றேயெனப்
போர்வலான் தடுக்கவும்
பொருமி விம்மினன்
சோர்விலாள் அறிவிலாத்
துயர்க்குச் சோர்கின்றான்"

(தைலம்–40, 41)

பெரியதொரு தீமை ஏற்பட்டிருக்கும் பொழுது அத் தீமையின் ஆழத்தையும் அகலத்தையும் அறிந்துகொள்ள முடியாத இளங்குழந்தைகள் விளையாட்டு முறையில் ஏதேனும் பேசிவிடுவதைக் காணுகிறோம். அத்தகைய சந்தர்ப்பங்களில் உடன் இருப்பவர்கள் குழந்தையின் பேச்சைக் கேட்டு நகைப்பதற்கு மறுதலையாக அழுவதையும் காண்கிறோம். நடைபெற்றுள்ள தீமையை அறிந்துகொள்ளச் சக்தி அற்ற குழந்தைகளின் எளிய தன்மையைக் கண்டு இவ்வாறு அவர்கள் வருந்துகிறார்கள். இதே போலத்தான் இப்பொழுது சீதை பேசுகிறாள். இராமன் காடு வந்ததால் ஏற்பட்ட விளைவைச் சற்றும் ஆராயாதவளாய் 'என்னுடைய மைனாப் பறவையையும், கிளியையும் நன்கு கவனித்துக்கொள்ளுமாறு கூறுக' என்று கூறுகிறாள். தான் காட்டில் வந்ததால் சிறிதும் கவலை கொள்ளாமல் இவ்வாறு பேசுகிறாளே என்று நினைத்தவுடன் சுமந்திரனுடைய துயரம் பீறிட்டுக்கொண்டு வெளிவருகிறது. சீதைக்குத் தந்தைபோல இருக்கின்ற அவன் அவளது பேதைமையையும், இதனால் அவள் அனுபவிக்கப் போகின்ற தீமைகளையும் நினைந்து இவ்வாறு அரற்றுகிறான்.

இவை அனைத்தும் முடிந்த பின்னர் இராமனையும் அவனுடைய துணைவரையும் காட்டில் விட்டு மீள்வது, தவிர வேறு வழியில்லை என்பதனை அறிந்த சுமந்திரன் புறப்பட்டுவிட்டான்.

*"................... தன்*
*கல்வி மாட்சியால்*
*ஓட்டினன் ஒருவரும்*
*உணர்வு ருமலே"*

(தைலம்–47)

என்று கம்பநாடன் கூறும்பொழுது சுமந்திரனுடைய தேரோட்டும் சிறப்பை நன்கு அறிகிரும்.

இதனை அடுத்து நாம் சுமந்திரனைக் காண்பது தசரதன் இறந்துவிட்ட பின்னர் ஆகும். வசிட்டமுனி தசரதன் இறந்த பின்னர்ப் பரதன் கேகயத்தி லிருந்து வருகிறவரை சுமந்திரனே அரசியலை நடத்த வேண்டும் என்று தன் விருப்பத்தைக் கூறிவிட்டுத் தன் பன்னசாலை சென்றுவிட்டான். எனவே தேர்வலானுகிய சுமந்திரன் அரசியலாகிய தேரையும் ஓட்டும் வன்மை படைத்தவனுக இப்பொழுது காட்சியளிக்கிருன். ஒரு பெரிய நாட்டின் அரசன் திடீரென்று இறந்து விட்டான். பட்டத்திற்கு உரியவன் காடு சென்று விட்டான். பட்டத்தைப் பெற்றவன் நாட்டுக்கு வந்துசேர இன்னும் எத்துணை நாட்கள் ஆகுமோ தெரியாது. இந்த நிலையில் யார் ஆட்சியை மேற்கொண்டாலும், அது மிகவும் தொல்லை தருவது என்று கூறத் தேவை இல்லை. எனினும் சுமந்திரனே இப்பொழுது ஆட்சி செய்யத் தக்கவன் என்று முனிவன் அவனிடம் ஆட்சியை ஒப்பிப்பதானுல் சுமந்திரனுடைய திறமைக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு என்ன வேண்டும்?

மரம் எவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது என்று வியப்படைகிரும். சாதாரண காலங்களில் மரத்தைப் பற்றி வியப்படைவதைக் காட்டிலும், பெருங் காற்று அடித்து அப்பொழுதும் அம்மரம் தீங்கடையாமல் இருந்தால், அப்பொழுது மிகவும் வியப்படைகிரும். ஏன்? பெருங் காற்றிலும் மரம் விழாமல் இருக்கிறது என்றுல் அதனுடைய வேர்கள் மிக ஆழமாகவும், அழுத்தமாகவும் உள்ளன என்பது தானே கருத்து? அதுபோலத் தசரதன் இறந்து இராமன் காடு சென்ற காலத்தும் அயோத்தி அரசியல் குழப்பம் இன்றி இருந்தது என்றுல், அதன் பெருமை யாரைச் சேர்ந்தது? கண் காணுத வேர்கள் மரத்தைக் காப்பதுபோலப் பிறர் கண்ணில் மிகுதியும் படாத சுமந்திரனே அயோத்தி அரசைக் காவல் புரிந்தான் என்பதே தேற்றம்.

பரதன் தமையனைக் கொணர வேண்டும் என்ற கருத்துடன் வந்துள்ளான். அவனைத் தொடர்ந்து அயோத்தி நகரமே வந்துள்ளது என்றுகூடக் கூறலாம். ஆனுல் அனைவரும் கங்கையின் வடகரையில்தான் தங்கி யுள்ளனர். குகனுடைய உதவி இல்லாமல் ஆற்றைக் கடத்தல் ஆகாத செயல். ஆனுல் குகனே இலக்குவனுடைய சொற்களை நம்பிக்கொண்டு, பரதன் படையெடுத்து வந்ததாகக் கருதிப் பெருஞ் சீற்றத்துடன் இருக்கிருன் எதிர்க் கரையில். இந்நிலையில் வடகரையில் நிற்கும் பரதனுக்குத் தென்கரையில் இருக்கும் குகனைப் பற்றிச் சில சொற்கள் கூறி அறிமுகம் செய்து வைக்கிருன் அமைச்சர் பெருந்தகை சுமந்திரன். இதோ குகனைப் பற்றிச் சுமந்திரன் பேசுகிருன்:

*"கங்கையிரு கரையுடையான்*
*கணக்கிறந்த நாவாயான்*
*உங்கள்குலத் தனிநாதற்கு*
*உயிர்த்தோழன் உயர்தோளான்*
*வெங்கரியின் ஏறனையான்*
*வில்பிடித்த வேலையினுன்*

*கொங்குஅலரும் நறும்தண்தார்க்*
*குகன்என்னும் பெயருடையான்.*
*கல்காணும் திண்மையான்*
*கரைகாணுக் காதலான்*
*அல்காணில் கண்டனைய*
*அழகமைந்த மேனியான்*
*மல்காணும் திருநெடுந்தோள்*
*மழைகாணும் மணிநிறத்தாய்*
*நின்காணும் உள்ளத்தான்*
*நெறிஎதிர்நின் றனன்என்றுன்"*

(கங்கை காண்- 25, 26)

நாம் அறிந்த வரையில் இராமனை நடு இரவில் சோலையில் விட்டுப்போன சுமந்திரன் மீண்டும் இப்பக்கம் இப்பொழுது தான் வந்துள்ளான். குகன் இராமனுடன் பழகியதை அவன் கண்டிருக்க நியாயம் இல்லை. அவ்வாறு இருந்தும் இராமன் மாட்டுக் குகன் கொண்டிருந்த காதலைச் சுமந்திரன் இவ்வளவு விரிவாக எவ்வாறு எடுத்துக் கூற முடிந்தது? இராமனும் குகனும் சந்தித்ததைச் சுமந்திரன் தன்னுடைய கண்களாற் காணவில்லை என்பது மெய்ம்மைதான். ஆனல் அமைச்சனுகிய அவன் ஏனையோர்போலக் கண்களால் மட்டுமா காண்கிருன்? 'செவியிற் காணும்' திறம் படைத்தவனல்லனே அமைச்சன் என்று கூறப்படுவான்? எனவே சிறந்த அமைச்சனுகிய சுமந்திரன் இராமனைக் காட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டாலும், அவ்விராமனுடைய நலம் தீங்குகளில் பெருங் கருத்துடையவனுய் இராமனும் அறியாமல் தான்மட்டும் தன் ஒற்றர் மூலம் அவனைக் கவனித்துவந்துள்ளான் என்றுதான் கருதவேண்டியுளது. இங்ஙனம் குகனைப்பற்றிச் சுமந்திரன் அறிந்திருப்பதில் இரண்டு வகை நன்மை உண்டு. ஒன்று அருமை மன்னனுகிய இராமனுடைய நண்பர்கள் எத்தகையவர் என்று அறிவது. இரண்டாவது அயோத்தி நகரின் எல்லையில் வாழும் குகன் அயோத்தி மன்னனிடத்தில் எந்த மனப்பான்மையுடன் பழகுகிருன் என்பதை அறிவது. எனவே தலையாய அமைச்சன் கடமையை நிறைவேற்றுமுகமாகவே உளது சுமந்திரன் குகனைப்பற்றி அறிந்திருப்பது.

மூரிய தேர்வலா னுகிய சுமந்திரன் தசரதனுக்குச் செல்வக் காலத்தும் அல்லற் காலத்தும் சிறந்த நண்பனுயும், இராமனிடம் கழிபெரும் காதல்கொண்ட நண்பினனுயும், பரதனுடைய பெருந் தன்மையை அறிந்து பழகும் பண்புடையாளனுகவும், அயோத்தி அரசை நன்கு காத்துக் கடமைபுரியும் அமைச்சனுகவும் இருந்தான் என்பது வெளிப்படை. சுமந்திரனைப் பற்றிப் பேசும் முகமாகக் கம்பநாடன் தன்னுடைய அரசியல் அறிவின் ஒரு பகுதியை நமக்கு எடுத்துக் காட்டுகிருன்.


*தமிழகத்தின் அறிவுப்பணி முன்னணியில் முன்னிற்பது*

# கலைக்கதிர்

**ஆண்டுச் சந்தா ரூ. 5-0-0**

(அரையாண்டுச் சந்தா ஏற்பதில்லை)

*விவரங்கட்கு:*

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

வான நூல் அறிவு:

# சூரிய குடும்பம்

திரு. பி. சவரிமுத்து, M. A.

## புதன்

சூரியனுக்கு வெகு சமீபமாகவுள்ள கிரகம் புதன். இது இவ்வாறு சமீபமாக அமைந்திருப்பதாலேயே பகல் நேரத்தில் சூரியனின் பிரகாசத்தினால் தென்படுகிற தில்லை. சூரிய அஸ்தமனத்திற்குப் பின் சிறிது நேரம் மேற்கே அடிவானத்தில் தோன்றி உடனே மறைந்து விடும்; சூரிய உதயத்திற்குச் சிறிது முன்னரும் கிழக்கு அடிவானத்தில் தோன்றும்; சூரியன் உதய மான பிறகு தென்படாது. இரவில் இதைக் குறிப்பிட்ட காலங்களில் தான் பார்க்க முடியும். **கொப்பர்னிக்கஸ்** என்ற வானி யல் அறிஞர் தம் வாழ்நாளில் புதனை ஒரு நாள் கூடப் பார்த்த தில்லையாம்.

நம் பூமியைப் போன்று புதன் கெட்டி யாக அமைந்துள்ளது. இது கிரகங்கள் யாவற்றிலும் சிறியது. இதன் குறுக்களவு 3100 மைல். இருபது புதன்களை ஒன்று சேர்த்து உருட்டித் திரட்டினால் நம் பூமி அளவு இருக்கும்; அவ்வளவு சிறியது இந்த புதன் கிரகம். இதன் எடை பூமியின் எடையில் $\frac{1}{25}$ பாகந்தான் இருக்கும்.

புதன் சூரியனுக்குச் சமீபமாக இருப்ப தால், இதைப்பற்றிய புள்ளி விவரங்கள் அதிகம் பெற முடியவில்லை. இக்கிரகம் எடையில் மிகக் குறைவாக இருப்பதால், இதன் ஆகர்ஷண விசையும் குறைவாக இருப்பது இயல்பே. கிரகங்கள் தோன்றிய காலங்களில் குளிர்ந்து, உறைந்து கெட்டி யாகாத வாயுப்பொருட்களே அவற்றைச் சுற்றி வாயு மண்டலங்களாகச் சூழ்ந்து நிற்கும்; இவ்வாயு மண்டலம் கிரகத்தைச் சூழ்ந்து நிலைத்து நிற்பதற்கு, அக்கிரகம் போதிய ஆகர்ஷண விசை உள்ளதாக அமைய வேண்டும். இல்லாவிடில் வாயு மண்டலம் கிரகத்தை விட்டோடிவிடும். ஆகர்ஷண விசையானது கிரகத்தின் எடையைப் பொறுத்தது. நம் பூமி போதிய எடையும் ஆகர்ஷண விசையும் கொண் டிருப்பதால், பூமியைச் சுற்றி நிலைத்த காற்று மண்டலம் வியாபித் திருக்கிறது. இதிலுள்ள பிராணவாயுதான் உயிர்வாழ்க் கைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. புதன் சொற்ப எடையுள்ளதாக இருப் பதால், இதைச்சுற்றி எவ்வித வாயுமண்ட லமும் கிடையாது. இதனால் புதனில் உயிர் வாழ்க்கைக்கு இடமே யில்லை.

புதன் சூரியனை 88 நட்களில் ஒருமுறை சுற்றிவருகிறது. சூரியனின் ஆகர்ஷண விசை எவ்வளவு அதிகமென்றால், புதன் கிரகம் இந்த அபார ஆகர்ஷண விசை யினின்று விடுபடமுடியாமல், இதன் ஒரு பாதி சதா சூரியன் பக்கமாகத் திரும்பிய வண்ணமே சுற்றிவருகிறது! புதனின் மறுபாதியோ எப்போதும் சூரியனுக்கு எட்டி எதிர்ப்புறமாக இருந்து வருகிறது; அப்பாதியில் சூரியவெளிச்சம் எக்காலமும் படாது. சதா காலமும் சூரியனை நோக்கி யுள்ள புதனின் பாதி பாகம் அதிக உஷ்ண மாக இருப்பதில் வியப்பில்லை யல்லவா ?

ஈயமே உருகிவிடும் உஷ்ணங்கொண்டது. அப்பக்கம். அதன் உஷ்ண நிலை 400° C! மறுபக்கமோ பனிக்கட்டியின் உஷ்ண நிலைக்கு மிகத் தாழ்ந்த உஷ்ண நிலை உடையது. இவ்வாறு காற்று மண்டலமின்றிப் பாதி நிரந்தர கோர உஷ்ணமும், பாதி நிலைபெற்ற கொடிய குளிரும் உள்ள புதன் கிரகத்தில் **உயிர் வாழ்க்கை உண்டா?** என்ற கேள்விக்கு இடமே யில்லை.

புதன் சூரியனைச் சுற்றி வருங்கால் சில தடவை பூமிக்குச் சமீபமாகவும் சில தடவை பூமிக்குத் தொலைவில் சூரியனின் மறுபக்கமும் வரும். சூரியனுக்கும், பூமிக்கும் நடுவில் வரும்போது சூரியனுக்கு எதிர்ப்புறம் இருக்கும் புதனின் பாதிதான் பூமியை நோக்கி இருக்கும். அப்போது புதன் கரிய வட்டத் தகடுபோலத் தோன்றும். அன்றியும், சூரியனின் பிரகாசமான வட்டத்தின் மேலாகப் புதனின் சிறு கரிய வட்டம் நகர்ந்து செல்லுவதையும் பார்க்கலாம். சூரியனுக்கும், பூமிக்கும் எதிரில் வரும்போது, புதனின் முழு வட்டமும் பிரகாசமாகத் தோன்றும். இவ்வாறு சுற்றி வரும்போது, புதன் சந்திரனைப் போன்று பிறைகளுடன் வளர்ந்தும் தேய்ந்தும் காணப்படும்.

சூரிய ஒளிபடாத பாதிப்பகுதி கறுப்பாய் இருப்பதிலிருந்து புதன் கிரகத்திற்குச் சுய ஒளி கிடையாது என்பது தெரியவருகிறது. சூரிய ஒளியைப் பெற்றே பிரகாசமாகத் தோன்றுகிறது என்று அறியலாம். இதைப்போன்று எல்லாக் கிரகங்களுமே சூரிய ஒளியைப் பெற்றுத்தான் பிரகாசமுடையனவாகக் காணப் படுகின்றன. நட்சத்திரங்களைவிடப் புதன் பிரகாசமாகக் காணப்படும். புதனைவிடப் பிரகாசமாகத் தென்படுவது வெள்ளி என்னும் கிரகம் ஒன்றே.

## வெள்ளி

பலரகக் கடிகாரங்கள் மலிந்துள்ள தற்காலத்திலுங்கூட நாட்டுப்புறங்களிலுள்ள விவசாயிகள் "வெள்ளி முளைப்பதை" இரவில் நேரந்தெரிந்து கொள்ளும் சாதனமாகக் கையாண்டு வருகிறார்கள் அல்லவா? சூரிய உதயத்திற்குச் சுமார் 3 மணிக்கு முன் கிழக்கில் அடிவானத்தில் வெள்ளி பிரகாசமாகத் தோன்றும். வான வெளியில் சூரிய சந்திரர்க்கு அடுத்தபடியாக அதிகப் பிரகாசத்துடன் தோன்றுவது வெள்ளியே. விடியற்காலையில் தோன்றுவதால் இதற்கு "**விடி வெள்ளி**" (Morning Star) என்று பெயர். சூரிய அஸ்தமனத்திற்குப்பின்னும் இது மேற்கில் அடிவானத்தில் தோன்றும். அப்போது அதை, மாலை நட்சத்திரம், **சுக்கிர வெள்ளி** என்றும் சொல்வதுண்டு.

புதனுக்கு அடுத்தபடியாக அமைந்துள்ள கிரகம் வெள்ளி. சூரியனிலிருந்து வெள்ளியின் தூரம் புதனின் தூரத்தைவிட இருமடங்காக இருந்த போதிலும், இது சூரியனுக்கு அடுத்தே காணப்படுகிறது. சூரியனுக்குப் பக்கத்திலிருக்கும் காரணத்தால் இதை இரவில் காணமுடியாது. சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பும் சிறிது நேரமே தோன்றும். வெள்ளியைப் பூமியுடன் பிறந்த தம்பி என்றே சொல்லலாம். ஏனெனில், இவ்விரண்டு கோளங்களின் எடையும், பருமனும், சராசரி அடர்த்தியும் ஏறக்குறைய அடுத்தடுத்தே இருக்கின்றன. வெள்ளியின் குறுக்களவு 7700 மைல்; பூமியின் குறுக்களவு 7930 மைல். வெள்ளியின் எடை பூமியின் எடையில் $\frac{4}{5}$ பாகம் இருக்கும். வெள்ளியின் அடர்த்தி (density) 5; பூமியின் அடர்த்தி $5\frac{1}{2}$. பூமியைச் சுற்றிக் காற்றுமண்டலம் இருப்பதுபோல், வெள்ளியைச் சுற்றிலும் அடர்த்தியான வாயுக் கவசம் வியாபித் திருக்கிறது. இவ்வாறு, பலவகைகளிலும் வெள்ளி பூமியை ஒத்திருக்கிறது.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும்போது, இந்த வெள்ளி கிரகம் பூமிக்கு

வெகு சமீபமாக இருக்கும். இங்குச் சமீப மென்பது 2,60,00,000(இரண்டு கோடியே அறுபது லட்சம்)மைல் தூரத்தைக் குறிப்ப தாகும். சந்திரன் நீங்கலாக, பூமிக்கு அதிகச் சமீபமாக வரக்கூடிய கிரகம் இதைவிட வேறு எதுவுங் கிடையாது. சூரியனுக்கு மறுபுறமாக இது செல்லும் போது பூமிக்கு வெகு தூரத்தில் இருக் கிறது. அப்போது இதன் தொலைவு 16,00,00,000 (பதினாறு கோடி)மைல்கள்; அதாவது பூமிக்குச் சமீபமாக வரும் தூரத் தைப்போல் ஆறு மடங்கு அதிக தூரமா கும். இதனால், பூமிக்குச் சமீபமாக வரும் போது இது பெரியதாகவும், எட்டிச் செல் லும்போது வெகு சிறியதாகவும் காணப் படுவது இயல்பு.

வெள்ளி சூரியனைச் சுற்றிவர 225 நாட் கள் ஆகின்றன. வெள்ளியைப் பற்றிய மற்றொரு வியத்தற்குரிய உண்மை என்ன வென்றால், சந்திரன், புதன் இவைகளைப் போல இதற்கும் பல கலைகள் உண்டு. அதன்படி, சில காலம் வளர்வது பின்னர் தேய்வது இதற்கு இயல்பாக உள்ளது. இக் கலைகளை நாம் நேராகப் பார்த்தால் தெரியாது. தொலைநோக்கி (telescope) மூலமாகத்தான் காணமுடியும். 1610-ம் ஆண்டில் கலீலியோ என்ற விஞ்ஞானி வெள்ளி கிரகத்தின் கலைகளைத் தொலை நோக்கி மூலம் கண்டு, பிறர்க்கும் காட்டி னார். வெள்ளியின் கலைகள் வளர்ந்து பூரணமாவதற்கு 112 நாட்கள் ஆகின்றன. ஆகவே, வெள்ளிக்கு வளர்பிறை காலம் 112 நாட்கள்; தேய்பிறை காலம் 112 நாட்கள்.

வெள்ளியைச் சுற்றி வெகு அடர்த்தி யான வாயு மண்டலம் வியாபித் திருக் கிறது. அதன் அடர்த்தி எவ்வள வென் றால், வெகு நுட்பமான தொலைநோக்கி மூலம் பார்த்தாலும், அதன் வாயு மண்ட லத்தை ஊடுருவிச் சென்று வெள்ளியின் மேற்பரப்பைக் காணமுடியாத வகையில் அவ்வளவுச் செறிவாக அது அமைந்துள் ளது. இதனால், வெள்ளி கிரகத்தினது மேற்பரப்பின் தன்மைகளை விஞ்ஞானிகள் அறிய முடியவில்லை. ஒளி ஊடுருவிச் செல்லமுடியாத இந்த வாயு மண்டலத்தில் எப்பேர்ப்பட்ட வாயுக்கள் அமைந்துள்ளன? 1932-ல் **ஆடம்ஸ், தூஷ்மான்** என்ற இரு வானியல் அறிஞர்கள் அமெரிக்காவி லுள்ள வில்சன் மலையில் அமைக்கப்பட் டுள்ள 100 அங்குலத் தொலைநோக்கியின் மூலம் பார்த்துப் புள்ளிவிவரங்கள் சில சேகரித்தார்கள். வெள்ளியைச் சுற்றி யுள்ள வாயுமண்டலத்தில் உயிர்களுக்கு அவசியமான பிராணவாயு, துளிக்கூடக் கிடையாது; கரியமில வாயுதான் உள்ளது என்பதை அவர்கள் கண்டார்கள்.

பிராணவாயு இல்லாததால் வெள்ளியில் எவ்வித உயிரினமும் இருக்கமுடியாது என் பதில் சந்தேமில்லை. ஆனால், தாவர வர்க் கங்கள் இருக்கலாமோ என்று ஐயுறலாம்; தாவர வர்க்கங்கள் கரியமில வாயுவை உண்டு பிராண வாயுவை வெளிவிடுகின் றன. வெள்ளியில் தாவர வர்க்கங்கள் இருக்குமானால், அதைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலத்தில் பிராணவாயு நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும். ஆனால் அங்கு பிராண வாயு மருந்துக்குக்கூட இல்லை என்ற முடிவானது ஆராய்ச்சி வாயிலாக ஏற்பட் டிருப்பதால், வெள்ளியில் தாவரங் களும் இல்லையென்றே சொல்லவேண்டும். புதிய ஆராய்ச்சிகளால் எதிர்காலத்தில் இந்த முடிவை மாற்ற நேரிடுமோ, என் னவோ தெரியாது.

வெள்ளியின் மேற்பரப்பைப் பார்க்கமுடி யாததால், அது தன்னைத்தான் சுற்றிக் கொள்ளும் வேகமும் இவ்வள வென்று திட்டமாகக் கூறுவது கடினமா யுள்ளது. சூரியன் பக்கமாக வுள்ள பாகத்தின் உஷ்ண நிலை 50°C; எதிர்ப் பாகத்தின் உஷ்ண நிலை - 20°C. புதனைப் போன்று வெள்ளியின் ஒருமுகம் சதா சூரியன் பக்க

மாகத் திரும்பி யிருக்குமாஞல், சூரியன் பக்கமாக வுள்ள பாகம் இன்னும் வெகு அதிக உஷ்ண நிலேயை அடைந்திருக்க வேண்டும். உஷ்ணநிலே குறைவாக இருப் பதிலிருந்து, அது தன்னைத்தான் சுற்றிக் கொள்ளுகிற தென்று ஏற்படுகிறது. சுமார் நாலேந்து வாரங்களில் வெள்ளி தன்னைத் தான் ஒருமுறை சுற்றிவிடுகிறது என்று கருதுகிருர்கள். வெள்ளி சூரியனைச் சுற்றி வர 225 நாட்க ளாகின்றன. ஆக, சூரி யனை ஒருமுறை பவனிவரும் கால அள விற்குள், வெள்ளி தன்னைத்தான் ஆறேழு தடவைகள் சுற்றி விடுகின்றது என ஊகிக்கலாம்.

—✻—

# நேயர்களே!

கலேக்கதிர் நேயர்கள் பலர் முன் இதழ்கள் வேண்டிக் கடிதம் எழுதுகிருர்கள்.

எம்மிடம் கீழ்க்காணும் இதழ்களைத் தவிரப் பிற இதழ் கள் உள்ளன. அவற்றை வேண்டுவோர் இதழ் ஒன்றுக்கு அஞ்சல் செலவுட்பட அணு பத்து அனுப்ப வேண்டுகிறேம்.

கீழ்க்காணும் இதழ்கள் இல்லே.

| | | | |
|---|---|---|---|
| 1949 | — | மே முதல் டிசம்பர் | வரை |
| 1950 | — | ஏப்ரல், நவம்பர் ... | ... |
| 1951 | — | மார்ச்சு, டிசம்பர் ... | ... |
| 1952 | — | செப்டம்பர் ... ... | ... |
| 1953 | — | செப்டம்பர் ... ... | ... |
| 1954 | — | ஜுன் ... ... | ... |
| 1955 | — | செப்டம்பர் ... ... | ... |

சந்தா நேயர்கள் அலுவலகத்திற்குக் கடிதம் எழுதும் போது தவருமல் சந்தா எண்களைக் குறிக்க வேண்டுகிறேம்.

# உலகப் பொது மொழி

திரு. மு. சண்முகன், B. Sc., M. A., M. Litt.

கிறித்தவர்களுடைய வேத நூலில் கதையொன்றுண்டு; பழைய ஏற்பாட்டில் காண்பது. ஆதாம் காலத்தில் உலக மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசினர். நிம்ரோட் (Nimrod) என்பான் விண்ணுலகை அடைய நினைத்தான்; நினைத்தவன் அதனை அடைவதற்கு உயர்ந்த கோபுரம் ஒன்றைக் கட்டத் தொடங்கினன். கடவுளுக்கு அது பொறுக்கவில்லை. அக் கோபுரத்தைக் கட்டுவதில் முயன்ற மக்களெல்லாரும் பல்வேறு மொழிகளைப் பேசுமாறு சபித்தார்; ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாமல் போயிற்று. நிம்ரோடின் முயற்சி பயனளிக்கவில்லை. இது ஒரு கதை. ஆனால் அடிப்படையில் சில உண்மைகள் இருக்கின்றன. ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்து கொள்வதற்குப் பயன்படுவது மொழி. அப் பழங்காலந்தொட்டே மனிதன் உலகிலுள்ள மக்களெல்லாரும் ஒரே மொழியைப் பேச வேண்டும் என்று நினைத்தான். இவ் வெண்ணம் இன்றும் அகலவில்லை. கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகப் பலர் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். உலக மக்கள் அனைவருக்கும் பொது மொழி ஒன்றை—உலகப் பொதுமொழி ஒன்றைக் காணும் முயற்சியில் இவர்கள் ஈடுபடுகின்றனர். "ஒருவரை மற்றொருவர் தவறுதலாக உணர்ந்து கொள்வதற்கு மொழி வேறுபாடே காரணம்," என்கின்றனர். "இம் மொழி வேறுபாட்டால் உலகில் பூசலும் போரும் எழுகின்றன. உலகப் பொது மொழி இவைகளைத் தவிர்க்கலாம் அல்லவா?"—இது இவர்களுடைய எண்ணம்.

இத் துறையில் மக்கள் முயல்வதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. இடைக் காலத்தில் (middle ages) மேற்கு ஐரோப்பாவின் பொது மொழி இலத்தீன். இலத்தீன் மொழியை இம் மக்கள் அனைவரும் தினசரி வாழ்க்கையில் பேசியதாகக் கூறுவதற்கில்லை. இது சிசரோவின் (Cicero) தூய செவ்விய இலத்தீனும் அன்று. கிறித்தவப் பள்ளிகளில் இடம் பெற்ற இலத்தீனே அக் காலத்தில் பொது மொழியாக ஆட்சி புரிந்தது. கற்றவர், சிந்தனையாளர், எழுத்தாளர், பாதிரிமார், வழக்கறிஞர் இவர்களே இந்த இலத்தீன் மொழியைப் பயன்படுத்தினர். பரம்பரையாக இம் மொழியில் தோய்ந்து ஊறியவர்களும், இலக்கண ஆசிரியர்களும் இம் மொழிக்கு உயிரை ஊட்டிக் காத்தனர். அக்கால மக்களுக்குத் தேவையான, போதுமான இலக்கியங்கள், சிறப்பாக மத இலக்கியங்கள் அம் மொழியில் மிகுந்திருந்தன. இலத்தீனிலிருந்து பல்வேறு ரொமான்ஸ் மொழிகள் கிளைத்தன. கிளைத்த பின்பும் அப் பல்வேறு மொழிகளையும் தாய் மொழியாகக் கொண்டவர்களில் கற்றவர் முதலியோர் இலத்தீனையே பொது மொழியாகக் கொண்டனர்; தற்கால இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி புரிவதைப் போல- ஆனல் இரண்டிற்கும் வேறுபாடுகள் பல உள. இலத்தீனே வழக்கிழந்த—இறந்த மொழி. இறந்த மொழியை இத்தகைய செயற்கை முறையில் வாழவைக்க வேண்டுமாயின், இரண்டு இன்றியமையா இயல்புகள் அதன்கண் இருத்தல் வேண்டும். (1) கற்றுத் தேர்ந்த, பழமையையே

விரும்பும், எத்தகைய மாற்றத்திற்கும் இடங்கொடுக்காத, ஒரு சிறு குழுவினர் அம் மொழியைப் பேசுதல் வேண்டும். (2) அம் மக்கள் உள்ளத்தைக் கவரும் சிறந்த இலக்கியம்—இலக்கியப் பரம்பரை, அம் மொழியில் இருத்தல் வேண்டும்.

தற்கால மக்களில் சிலர் இந்த இடைக் காலம் போய்விட்டதே என்று ஏங்குகின்றனர். இவ்விடைக் காலத்தைப் போலத் தற்காலத்திலும் அந்த இலத்தீன் மொழியே பொது மொழியாக வேண்டும் என்று முயன்றனர். இலக்கிய இலத்தீன் மொழியின் இலக்கண அமைப்பு சிக்கல் நிறைந்தது. தற்கால மொழிகளின் அமைப்புக் களிலிருந்து இது வேறுபட்டது. அதனால் இலத்தீனைத் திரும்பவும் பொதுமொழியாகக் கொண்டுவருதல் இயலாது என்று கண்டசிலர், எளிமையாகத் திருத்தப்பட்ட இலத்தீன் ஒன்றைப் பொதுமொழியாகக் கொண்டுவர முயன்றனர். அதுவே வேற்றுமை ஆக்கம் பெறாத (without inflexions) இலத்தீன் மொழி — "Latino sine flexions"—என்பது. இம் முயற்சியும் தோல்வியடைந்தது. இத் துறையில் ஈடுபட்டவர்க ளெல்லாரும் வெவ்வேறு துறையினர்; வெவ்வேறு போக்கினையுடையர்; பழமையை அப்படியே போற்றும் இயல்பினர் அல்லர். அன்றியும் இன்றைய உலகம் விரும்பும் கலைகளெல்லாம் இலத்தீன் மொழியில் இல்லை. எனவே இலத்தீன் இன்று உலகப் பொதுமொழியாக இயலாமற் போயிற்று. இறந்த மொழிக்கு உயிர் கொடுத்து, உலகப் பொது மொழியாக்கும் முயற்சி பயனற்றுப் போயிற்று. இந்த உண்மையை உணராதவர் இன்று இந்தியாவின் பொது மொழி வடமொழியே ஆதல் வேண்டும் என்று கூக்குரல் இடுகின்றனர்.

இறந்த மொழி பயனற்றுப் போகவே, வழக்கி லிருக்கும் ஒரு மொழியை உலகப் பொது மொழியாக ஆக்குவதே இரண்டாவது முயற்சி: இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரஞ்சு நாடுதான் அரசியல், அறிவியல், பொருளாதாரம் முதலிய துறைகளில் எல்லாம் முன்னணியில் நின்றது. உலக அரங்கில் பிரஞ்சு மக்களின் செல்வாக்கு மிகவே, அவர்களுடைய மொழியும் உலகப் பொது மொழி ஆயது. உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச் சிறப்பு எதுவும் இம் மொழிக்கு இல்லை. உலகில் எத்தனையோ மொழிகளில் பிரஞ்சு மொழியும் ஒன்று. ஆனால் அது உலகப் பொதுமொழியானதும் அதற்குத் தனிச் சிறப்புக்கள் பலவற்றைக் கற்பித்தனர்—அல்லது கண்டுபிடித்தனர். அறிவியற் களஞ்சியம் எனவும், தெளிவு மிக்கது எனவும், இசையோடு இரண்டறக் கலந்தது எனவும், பலவாறு புகழ்ந்தனர். ஆனால் கடந்த 200 ஆண்டுகளாக ஆங்கிலம் பிரஞ்சு மொழியை ஓட்டிவிட்டு அதன் இடத்தில் தான் அமர்ந்து வருகிறது. வியாபாரம், அரசியல், விஞ்ஞானம், கைத்தொழில் ஆகிய இவற்றிலெல்லாம் ஆங்கிலேயரும், அமெரிக்கரும் முன்னணியில் நிற்பதே இதற்குக் காரணம். மொழி பரவுதற்குரிய காரணமும் இதுவேயன்றோ? தங்களுக்கு அதிக சலுகைகள், நன்மைகள், பயன்கள் இவைகளைக் கொடுக்கும் மொழிகளைப் பிறர் தூண்டாமலேயே கற்கின்றனர். ஆனால் பிரஞ்சோ அல்லது ஆங்கிலமோ பொது மொழியாவதற்கு வேறு ஒரு தடை தோன்றியது. இதனையே தற்காலத் தேசீயம் அல்லதுநாட்டுப் பற்று என்கிறோம். பிரஞ்சுப் புரட்சியின் பின்பு-நெப்போலியன் போர்களின் பின்பு, எந்தச் சிறு நாடாயினும் அந் நாட்டு மக்களிடையே தம் நாடு, தம் மொழி என்ற உணர்ச்சி வலுத்தது. தங்கள் நாட்டின் பண்பாட்டை விளக்கும் சாதனமாகத் தங்கள் மொழியையே எடுத்துக் கூறுவர். இதனை எவரும் விட்டுக் கொடுக்க இணங்குவதில்லை. எனவே பிரஞ்சோ அல்லது ஆங்கிலமோ உலகப்

பொது மொழியாவதற்கு இத்தகைய பெருந்தடை ஒன்று எழுந்தது. வழக்கில் இருக்கும் மொழி ஒன்றை உலகப் பொது மொழியாக்குவதாயின், மற்ற மொழியினர் ஏற்க மறுக்கின்றனர். எனவே இவ் விரண்டாம் முயற்சியும் பயனற்றுப் போயிற்று.

இவ் விரண்டாம் முயற்சியும் பயனற்றுப் போகவே, உலகில் எங்குமே வழங்காத மொழி ஒன்றைப் படைத்து, அதனை உலகப் பொதுமொழி ஆக்குவோம் என்று சிலர் எழுந்தனர்; இதுவரை சராசரி ஆண்டுக்கொரு மொழியாகச் சுமார் நூறு மொழிகளைப் படைத்திருப்பர். அவைகளுக்குப் பல்வேறு பெயர்களைக் கொடுத்தனர்: (1) இண்டர்லிங்குவா (Inter lingua) (2) கோஸ்மாஸ் (Kosmas), (3) ஆக்ஸிடென்றல்(Occidental), (4) பர்லா(Parla), (5) ஸ்போகில் (Spokil), (6) யூனிவர்சாலா (Universala) என்பன அவற்றுள் சில. ஆனால் சிறந்தவை இவை தவிர வேறு மூன்று; வலாபூக் (Volapuk), எஸ்பராண்டோ (Esperanto), ஐடோ (Ido) என்பன. இவற்றுள்ளும் இரண்டாவது கூறப்பட்ட எஸ்பராண்டோவையே மக்கள் நன்கு அறிவர். ஜெ. எம். ஸ்கிலேயர் (Schleyer) என்பார் 1879-ல், உலகப் பொது மொழியாதல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு, வலாபூக் மொழியைப் படைத்து வெளியிட்டார். ஜெர்மன் சொற்களைக் குறுக்கி, உச்சரிப்பதற்கு எளியனவாக்கி இதன் சொற்களாக அமைத்தார். வலாபூக் என்பது உலகப் பொது மொழி என்னும் பொருளது. சிலர் இம் மொழியைக் கற்றனர். இதற்குச் சிறிது மதிப்பும் ஏற்பட்டது. ஆனால் டாக்டர் சாமன்ஹாப் (Dr. Zamenhof) என்ற போலந்து நாட்டவர் படைத்து, 1887-ல் வெளியிட்ட எஸ்பராண்டோ மொழி, வலாபூக்கின்செல்வாக்கைச் சிதைத்து விட்டது. எஸ்பர் (esper) என்னும் சொல் 'நம்பு' என்னும் பொருளுடையது. இதன் சொற்களையும், இலக்கண அமைதிகளையும், இலத்தீன் மொழியையும் அதிலிருந்து கிளைத்த மற்ற மொழிகளையும் அடிப்படையாகக்கொண்டு அமைத்தார். ஜெர்மன் மொழியிலிருந்தும் சில சொற்களை எடுத்துக் கொண்டார். இம் மொழியின் இலக்கண அமைதிகளை எளியன வாக்கினார். பெயர்ச் சொற்கள் எல்லாம் ஒகரத்தில் முடியும். பெயர் உரிச் சொற்கள் எல்லாம் அகரத்தில் முடியும். எஸ்பராண்டோவை ஆதரித்த உலகில் உள்ள மொழிநூல் வல்லுநர்களெல்லாரும் தம்முள்ளே கலந்து ஆலோசித்ததில் சிலர் அம் மொழியில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்றனர். ஆனால் டாக்டர் சாமன்ஹாப் அவற்றை ஏற்க மறுத்து விட்டார். எனவே இவர்கள் இரு குழுவினராகப் பிரிந்தனர், சாமன்ஹாபைப் பின்பற்றியவர்கள் ஒரு பிரிவினர். திருத்தங்களோடுகூடிய எஸ்பராண்டோவை 'ஐடோ' என்று பெயரிட்டு ஆதரித்து வந்தவர் மற்றொரு பிரிவினர்.

எஸ்பராண்டோ போன்ற படைப்பு மொழிகளும் பயனற்றுப் போயின. இலத்தீன் மொழிகளும் வெற்றி யடையாமைக்குக் கூறிய காரணங்களே இவற்றிற்கும் பொருந்தும். ஒரு கூட்டத்தினர் அம் மொழியைப் பேசத் தொடங்கியதும் அம் மொழி தானாகவே மாறிவிடுகிறது. இம் மாற்றம் பேசுகின்ற மக்களும் உணராமலே எழுகின்றது. அவரவர் பேசும் தாய் மொழியும், உடற்கூறும் அம் மொழியின் போக்கை மாற்றுகின்றன. ஐடோ மொழியைப் படைத்தவர்களைப் போல எளிமையாக்கும் பொருட்டு வேண்டுமென்றே மாற்றங்களைப் புகுத்திப் பேசுவோரும் உண்டு. இப்பொழுதும் எஸ்பராண்டோ மொழியைப் பேசும் மக்கள் இருக்கின்றனர். இவர்களுடைய தாய் தந்தையர்களும் எஸ்பராண்டோக்களே. எனவே பிறப்பிலிருந்தே இம் மொழியைப் பேசுபவரும் இருக்கின்றனர். எனினும் இவர்களுடைய தாய்மொழி வேறாக இருப்பதால், எஸ்ப

ராண்டோ இவர்களுக்கு இரண்டாம் மொழியே ஆகும். அதனுல் எஸ்பராண்டோவில் இப்பொழுதே வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. எஸ்பராண்டோவைத் தாய் மொழியாகக் கொண்டோர் மிகச் சிலர். ஆகையால் இதன் செம்மொழி (Standard Language) எது என்று அறுதி இடுவதும் அருமையாகவே இருக்கிறது. இவற்றைவிடப் பெரும் இடர்ப்பாடு இம் மொழியில் மக்கள் உள்ளத்தைக் கவரும் தற்கால இலக்கியங்களும், கலைகளும், விஞ்ஞானங்களும் இல்லாமையே ஆகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு உலகத் துணை மொழிக்குழு (International Auxiliary Language Association - I ALA) வேருெரு உலகப் பொது மொழியைப் படைக்க முயன்றது. மொழி நூல் வல்லுநர் பலர் இதில் ஈடுபட்டனர். மக்கள் வெளியிடும் கருத்துக்கள், அவற்றின் அளவு, சொற்களின் ஆட்சி அளவு இவைகளை எல்லாம் ஆராய்ந்தனர். இன்றியமையாது வேண்டும் அடிப்படைச் சொற்களின் வேர்களை ஆராய்ந்தனர். இம் மொழியும், மற்ற உலகப் பொதுமொழிகள் அடைந்த அதே கதியைத் தான் அடையும் என்பதில் ஐயம் இல்லை.

இப் படைப்பு மொழிகளில் வேருெரு குறையும் உளது. இவைகளெல்லாம் மேற்கத்திய ஐரோப்பியர்களுக்கு அவர்களாலேயே படைக்கப்பட்டவை. எஸ்பராண்டோ ஐரோப்பிய மொழிகளின் இலக்கண அமைதிகளை அடிப்படையாகக் கொண்டது. தமிழோ, சீனமோ அல்லது சில அமெரிக்க மொழிகளையோ பேசுபவனுக்கு இது ஆங்கில மொழியையோ, பிரஞ்சு மொழியையோ கற்பதைப்போன்று மிகுந்த இடர்ப்பாடுகளையும், துன்பங்களையும் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை. உலகிலுள்ள மொழிகளை ஆயுந்தோறும், அம் மொழிகளிடையே வேறுபாடுகளே மிகுந்து தோன்றுகின்றன. உலக மொழிகளுக்கெல்லாம் பொதுவான இலக்கண அமைதிகளைக்கொண்ட, அம் மொழிகளுக்கெல்லாம் பொதுவான ஒலி அமைதிகளைக் கொண்ட உலகப் பொதுமொழி ஒன்றைப் படைப்பது மிக அருமையே ஆகும். சிறந்த மொழிநூல் வல்லுநராகிய ட்ருபெட்ஸ்காய் (Trubetzkoy) என்பவர் இத் துறையில் முயன்றிருக்கின்ருர். இந்தோ ஐரோப்பிய இலக்கண அமைதிகளைக் கொண்டோ, செமிட்டிக் மொழிகளின் இலக்கண அமைதிகளைக் கொண்டோ பொது மொழி ஒன்றைப் படைப்பதாயின், மற்ற மொழிகளைவிட இவற்றைச் சிறப்பாகக் கருதுகிருேம் என்பது தானே பொருள்? இதனை மற்றையோர் ஏற்றுக்கொள்வார்களா ?

(தொடரும்)

## சூரிய சக்தி



சூரியன் பல பொருள்களின் வாயிலாக நமக்கு அதன் சக்தியை உதவி வருகிறது.

அணுவில் சூரியனுடைய வியத்தகு சக்தி அடங்கிக் கிடப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்து, மக்கள் ஆக்கத்திற்கு அதன் அளவற்ற சக்தியைப் பயன்படுத்த முயன்று வருகின்றனர். ****

# மழை வேண்டுமா?

திரு. இரா. இருசு, B. A. (Hons.)

உயிர்த் தொகுதிகள் வாழ மழை வேண்டும். உயிரினும் மேலான ஒழுக்கம் நிலைபெற மழை வேண்டும். மழை தவறின் ஒழுக்கம் தவறும் என்பதனை வள்ளுவர் "நீர்இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும் — வான்இன்று அமையாது ஒழுக்கு," எனக் கூறுகிறார். அவ்வளவு அரிய மழை பெய்தற்கு நல்ல உற்ற துணையாய் அமைவன மரங்கள், செடி கொடிகள், காடுகள்.

இந்தக் கூற்று கேட்பதற்கு வியப்பாகத் தான் இருக்கும். ஆனால் உண்மை! மரங்கள் மழையை மட்டும் பெருக்குவதில்லை; ஆற்றங் கரைகளிலே இருந்து ஆற்றின் அரிப்பினைத் தடுக்கின்றன. "ஆற்றைக் கெடுக்க ஒரு நாணல்......" என்ற பழமொழியினை நாம் நன்கு அறிவோம். ஆற்றின் ஓரங்களிலே நாணலை வைத்துப் பயிர் செய்து விட்டால் ஆற்றுள் கரைபுரளும் நீர்ப் பெருக்கு ஏற்படினும், நாணல் உள்ள பகுதியினை வெள்ளத்தால் அரித்து எடுத்துச் செல்ல முடிவது இல்லை. மரங்களின் வேர்கள் பூமியுள் ஓடித் தண்ணீரின் வேகத்தால் அரிப்பு எற்படாமல் தடுக்கின்றன. வேர்கள் ஆற்றின் வேகத்தையும் தடுக்கின்றன. மேலும் குளம் குட்டைகளில் நீர் தேங்கிக் கிடந்தால் கொசுவும், புழுவும் ஏற்பட்டு இன்னல் பல தரும். அவ்வாறு நீர் தேங்கி நசுப்பினை உண்டு பண்ணிக் கொசு, புழு உற்பத்தியைத் தடுக்க மரங்கள் செடிகள் அக்குளம் குட்டைகள் முதலியவைகளின் அருகே பயிரிடப் பெற்றால் நசிப்புத் தன்மை போய்க் கொசுக்கள் உற்பத்தித் தடுக்கப் படுகிறது. அந்த நீரானது மரங்களால் உறிஞ்சப்படுகிறது. மரங்களின் பணிகளை எண்ணினால், அவை மிகப்பல. மரம் அடர்ந்த காடுகளைக் கடல் என்னலாம்; அணைகள் என அறையலாம்; இயற்கை அன்னையின் செயல்கள் அனைத்திலும் பங்கு கொள்ளும் பெருநிதியம் என்று கூறலாம். வேனிற் காலத்தே வெயிலவன் கொடுமைமிக்க மதிய நேரத்தில் புல் பூண்டற்ற வெற்று வழியாய் நடந்து வந்த ஒருவன் புற்களால் மூடப்பட்ட இடத்திற்குச் சென்றால், ஓர் அளவு குளிர்ச்சியினைப் பெறுகின்றான். காரணம் என்ன? அடியால் உண்ட நீரைத் தலையால் வெளி விடுகின்ற பண்பு இச்சிறிய புல் பூண்டுகளிடத்தும் நாம் காணுகின்றோம். நீர் ஆவியாகிக் குளிர்ச்சியை உண்டு பண்ணுகிறது. இப்படியே எல்லாச் செடி கொடிகளும், மரங்களும் தாளால் உண்ட நீரைத் தலையால் ஆவியாக வெளியே அனுப்புகின்றன. இதனுடைய அளவினை ஒருவாறு அளவிட்டு உள்ளனர். அதாவது 1 வீசை தானியத்தை விளைவிக்க 235 வீசை நீரினையும், ஏழு வீசை கிழங்கு உண்டாக்க 910 வீசை நீரினையும் ஒரு செடியானது பூமியிலிருந்து உறிஞ்சி நீராவியாக வெளியிட வேண்டி உள்ளது.

உண்ட நீரை வெளி விட்டுச் சூழ்நிலையைத் தண்மையாக்குகிறது என்பதனை

மற்ருேர் ஒரு எடுத்துக் காட்டு மூலமும் காணலாம். உலகில் காடு நிறைந்த பகுதி அமெரிக்க நாட்டின் அமேசான் காட்டுப் பகுதியாகும். அப்பகுதியோ கடல்களுக்கு மிகச் செய்மையிலும் நிலநடுக் கோட்டிற்கு (Equator) மிக அண்மையிலும் உள்ளது. இந்த நிலையில் சாதாரணமாக மிக மிகக் கடுமையான வெப்பத்தினைத்தான் நாம் அங்கு எதிர்பார்க்க முடியும். ஆனுல் உண்மை வேறு விதமாக இருக்கிறது. அங்கே நிலவும் தட்ப வெப்ப நிலை கடற்கரை ஓர தட்ப வெப்ப நிலையை ஏறக்குறைய ஒத்து உள்ளது. மழையும் மிக்குப் பெய்கிறது. காரணம்? நீர் ஆவியாகித் தண்மையை உண்டாக்குவதே.

மழை பெய்கிறது; பனி உண்டாகிறது; பனிக்கட்டி விழுகிறது. இவைகள் எங்கிருந்து வருகின்றன? இவைகள் மேகம் தந்த செல்வங்கள். வெண்மையாக விண்ணின் வழி ஓடும் மேகங்களைக் கார் மேகமாக மாற்றுவது எது? அவைகளை மழையாகப் பெய்விப்பது எது? விண்ணின் வழி இயங்கும் வெண் மேகங்கள் குளிர்ச்சி தடையால் இவ்வா றெல்லாம் செயல் படுகின்றன. புல் பூண்டற்றுப் பரந்து கிடக்கும் வெளி வழியே செல்லும் போதும் மரங்கள் அடர்ந்த காடுகள் வந்தவுடன் தன் கருணை மழையைப் பெய்வித்துச் செல்வானேன்? மலைகளைக் கண்டவுடன் வாரிவழங்கு வானேன்? மலைகள் மேகங்களின் ஓட்டத்தினைத் தடுக்கின்றன. மேகம் மேலே எழும்புகின்றது. உயரச் செல்ல செல்ல வெப்பம் குறைந்து குளிர்ச்சி ஏற்பட மேகம் நீராக மாறும் அளவு குளிர்ச்சி அடைந்தவுடன் மழையாக மலைமீது பெய்கிறது அதே அடிப்படையில் தான் காடுகளிலும் மழை பெய்கிறது. மரங்களால் வெளி விடப்பட்ட நீரானது ஆவியாக அக்காட் டினிடை உலவி வரும். மேகங்கள் அவ் ஆவியுடன் ஒன்று சேர்ந்து குளிர்ச்சி பெற்று நீராகி மழையாகப் பெய்கின்றன. மலைகளில் கூட மரம் செடி கொடிகள் அடர்ந்த மலைகள் மொட்டை மலைகளைவிட அதிக மழையினைப் பெறுவது கண்கூடு. ஒரு பேர் அறிஞர் ஆராய்ச்சி மூலமாக ஓர் உண்மையினைக் கூறுகிருர். 650 அடி உயரம் உள்ள மலையில் எவ்வளவு மழை ஆண்டு ஒன்றுக்குப் பெய்கின்றதோ, அவ்வளவு மழையைத் தரை மட்டத்தில் காடுகள் நிறைந்த பகுதி பெறுகிறது. அதாவது மழை வேண்டுமாயின் ஒன்று காட்டினை வளர்க்க வேண்டும் அல்லது மழை வேண்டும் பகுதியை உயர்த்த வேண்டும் என்பது வெளியாகிறது அல்லவா.

பேர் அறிஞர் ''சோன்'' என்பார் ஆராய்ச்சி மூலமாகப் பெய்கின்ற மழையில் 9-ல் 7 பாகம் நிலத்தின் மீது உள்ள புல் பூண்டுகளால் ஏற்படுவதுதான் என்று கூறுகின்ருர். கடல் நீர் ஆவியாகி மழையாகப் பெய்வதனைக் காட்டிலும், மழைக்கு உறுதுணையாய் இருப்பன நிலத்தில் உள்ள மரம் செடி கொடிகளே என்பது ஆராய்ச்சி மூலம் கண்ட உண்மை. அவைகள் தாம் நிலத்தில் உள்ள நீரை உறிஞ்சிக் கதிரவன் வெப்பத்தால் உறிஞ்சிய நீரை ஆவியாக்குகின்றன. அப்பகுதியில் வெண் மேகம் வந்ததும், சூல் உற்றுக் கருமையாய்த் தண் மழை பொழிய ஏதுவாகிறது. ஓர் இடத்தில் பெய்கின்ற மழையின் அளவு, அவ்விடத்தில் மரம் செடி கொடிகளால் எவ்வளவு நீர் ஆவியாக்கப் பட்டதோ அவ்வளவில் 80 பாகம் எனவும் அறிஞர் ''சோன்'' வலியுறுத்து கின்ருர்.

நிலத்தின் மீது பெய்யும் மழையின் நீரானது நேரே சென்று கடலை அடைவது இல்லை. பெய்கின்ற மழையில் 20 பாகமே கடலுக்குச் செல்கின்றது. இப்படியே கணக்கிட்டுப் பார்த்தால் பெய்கின்ற மழை கடலை அடைவதற்கு முன்பு 5 தடவை நிலத்தில் மழையாகப் பெய்ய வேண்டி உள்ளது. இந்த உண்மையினை அறிஞர் 'பியர்ஸன்'' என்பார் கூறுகிருர். இதுவும்,

அறிஞர் "சோன்" அவர்களின் கூற்றை வலியுறுத்துவ தாகிறது.

இப்படி அறிஞர்கள் கூறும் செய்திகளையும் நடை முறையினையும் காணும் போது, மரங்கள் அடர்ந்த காடுகளின் பெருமை விளங்குகிறது. மரங்கள் சுய நலம் பிடித்தவைகள் அல்ல. அவைகள் வானுற ஓங்கி வளர்ந்துள்ள காரணத்தால் அவைகளால் ஆவியாக்கப்படும் நீர் காற்றால் பல்வேறு இடங்கட்கும் அடித்துச் செல்லப்பட்டு அவ்விடத்தே வரும் மேகத்தோடு சேர்ந்து மழையாகப் பெய்கிறது. இதனால்தான் மரமற்ற வெளிகளிலும் சில காலங்களில் மழையானது பெய்கிறது.

இதை எல்லாம் பார்த்த பின்பு நமக்கு ஓர் உண்மை புலப்படும். சில பத்து ஆண்டுகட்கு முன்னர் தமிழ் நாட்டில் நல்ல மழை பெய்து வந்தது. ஆனால் தற்போது அப்படிப் பெய்வது இல்லை. காரணம் வேறு எதுவாக இருக்க முடியும். மரங்கள் காடுகள் ஊரருகே மிகுதியாக இருந்தன. பல இடங்களிலும் கண் கவர் வனப்புடைப் பெருங் காடுகள் காணப்பட்டன. மேலும் மேலும் அக்காலத்தவர் மரங்கள் வைத்து உண்டாக்கினர். ஆகையல் மழையும் இருந்தது. இப்போதோ, மரங்களை வெட்டுவதும் காடுகளை அழிப்பதுந் தான் தலையாய வேலையாய் அமைந்துள்ளது. ஒரு பக்கம் அழித்தாலும் இன்னொரு பக்கம் மரங்களை வைத்து உண்டாக்கு கிறார்களா என்றால் அதுதான் இல்லை. அழிக்கும் சக்தி உண்டே தவிர ஆக்கும் சக்தி அறவே தொலைந்து போய் விட்டது. இனியாயினும் இதனை நன்கு உணர்ந்து போற்றுவார்களாக.

அரசியலாரும் மக்கள் மரங்களின் பெருமையினை அறியும் வண்ணம் அறிவு விளக்கப் படங்களைப் போட்டுக் காட்ட முனைவார்களாக. பயிர் செய்ய இயலாத இடங்களிலும், சதுப்பு நிலங்களிலும் மரங்களை, செடிகளை வைத்து வளர்க்க ஏற்ற வழிவகைகளைச் செய்வார்களாக. இருக்கும் காடுகளையும் அழிக்காமலிருக்க ஏற்பாடு செய்வார்களாக. காடுகள் வளர்ந்து வாழ்க்கை வளமாகும் மாரியினைப் பெறுவோமாக. மழை வேண்டுமா? மரங்களை நடு.

oooooooooo



## டெமொகிரிடஸ் அணுக் கொள்கை

தற்காலத்து அணுச் சக்தி விந்தை நெடுங்கால ஆராய்ச்சியின் விளைவேயாகும். பழங் கிரேக்க நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே டெமொகிரிடஸ் அணுவினை ஆராய்ந்து அதன் உண்மையை உரைத்தார். எல்லாப் பொருள்களும்—தங்கம் உள்பட — கண்களுக்குப் புலனாகாத சிறு துகள்களால் ஆக்கப்பட்டவை என்று அவர் கூறினார். ஆனால் அவருக்கு அப்போது முட்டாள் பட்டமே கிடைத்தது!

# அவள் ஒரு பைத்தியம்!

'சிந்தனை'

என்ன, அவள் பைத்தியமா? இல்லை இல்லை. அவள் பைத்தியமாக இருந்தாள். எப்பொழுது? சில ஆண்டுகளுக்கு முன். என்ஞல் நம்பவே முடியவில்லை. எவ்வளவு சிறந்த அழகியாக இருக்கின்ருள்! அவள் நடை, உடை, அவளின் பிறைநுதல், விற் புருவம், கயல் விழி, எடுப்பான மூக்கு, கொவ்வைக் கனி அதரம், முல்லை முறுவல் யாவும் பேசுகின்றனவே! அவைகளின் தேன்மொழி உண்டு களித்தற்கு ஏற்ற கணவன், I. A. S. அதிகாரி; அதிகாரத்திற் கேற்ற ஆற்றல், ஆற்றலுக் கேற்ற தோற்றம். பொருத்தமான காதலர்களா யிற்றே. தொல்காப்பியர் கதாலர்களுக்குக் கூறும் பத்துப் பொருத்தமும் அவர்களிடம் தஞ்சம் புகுந்திருக்கின்றன போல் தெரி கிறதே! அன்றியும், அக்காதலர்களை இன் புறச் செய்யும் பொற்சிலை அவள் கையில். காற்று வாங்கக் கடற் கரைக்குச் செல்லும் போது, அப்பேசும் பொற்சிலையை ஒருவர் மாற்றி ஒருவர் அணைத்துச் செல்கின்றனர். சேவகன் குழந்தையைத் தூக்குவதை அவர்கள் விரும்புவதில்லை.

இவையெல்லாம் உனக்குத் தெரிந்தவை தானே? ஆமாம். பின் எவ்வாறு பைத்திய மாக இருத்திருக்க முடியும்? பைத்தியம் என்று சொல்கின்ற உனக்குத்தான் பைத் தியமோ என்று சந்தேகப்பட வேண்டி யிருக்கிறது.

கீழ்ப்பாக்கத்தில் இருப்பவர்கள் பேசு வது போல் தோன்றுதாக்கும். யான் சொல்வதை முழுதும் மனதில் வாங்கிய பின் பைத்தியம் யாருக்கு என்பதை முடிவு செய். காதலில் ஏமாற்றம் ஏற்பட்டால் பைத்தியம் பிடிக்கலாம்; வாழ்க்கை முன் னேற்றத்தில் ஏமாற்றம் ஏற்பட்டால் பைத் தியம் ஏற்படலாம்; பெரும் பொருளை இழக்க நேரிடின் மூளை கலங்கலாம்; ஆழ்ந்த படிப்பினுல் மூளைக்கோளாறு உண்டாக லாம்; ஆழ்ந்த சிந்தனையாலும் பைத்தியம் பிடிக்கலாம். இந்த வகைகளைச் சேர்ந்த பைத்தியந்தான் தெளியவுங்கூடும்.

அதை எண்ணியே பைத்தியம் உனக்கா அவளுக்கா என்ற சந்தேகம் எனக்கு. மேலே சொன்ன வகையில் அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்காது. உனக்கு... என்பதுதான் என் முடிவு.

இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் நிச்சயம் நீ கீழ்ப்பாக்கம் போக வேண்டியது தான்.

அவளுக்குப் பைத்தியம் ஏற்பட்டதென் பதில் ஏதாவது உண்மை யிருந்தால் சொல். வீணுக நம் இருவருக்கும் பைத்தியம் பிடிக்க வேண்டாம்.

அப்படிவா. அவள் மண்ணிலே மாணிக் கம், சேற்றிலே செந்தாமரை. குப்பத்துக் குடிசையிலே தோன்றிஞள். குப்பத்தி லுள்ள சத்திரத்து வேலைக்கார வேலாயுதத் தின் மகள். சத்திரத்து ஒரு மூலையில் உள்ள குடிசைதான் அவர்களின் இன்ப மாளிகை. அன்ருட வயிற்றுப் பிழைப்பே பெரியபாடு. ஏழைக் குடும்பத்திலே இவ் வளவு சிறந்த அழகி ஏன் தோன்றிஞள்? ஏழைக் குடும்பத்தில் தோன்றும் அழகு எப்போதும் ஆபத்தாக முடியுமே என்று கலங்கிக் கொண்டிருந்தான் வேலாயுதம். கலக்கம் ஒரு புறம் இருந்தாலும், உள்ளூர்ப் பள்ளியில் எட்டாவது வரை படிக்க வைத்

தான். படிப்பும் முடிந்தது, மங்கை பருவமும் அடைந்தாள். இப்பொழுது வேலாயுதத்தின் கலக்கம் இன்னும் மிகுந்துவிட்டது; பொறுப்பும் அதிகரித்து விட்டது.

வேலாயுதம் இப்படி வேதனையோடு குடும்பத்தை நடத்திய சமயந்தான் அந்த I. A. S. குட்டி அதிகாரி குப்பத்தைப் பார்வையிட்டார். அங்குள்ள ஒரு வழக்கு விசாரணையின் போது, அக்குப்பத்துச் சத்திரத்தில் மூன்று நாட்கள் தங்கவேண்டியதாயிற்று. மூன்று நாட்கள் ஏழு நாட்களாயின. அதிலிருந்து மூன்று மாதம் அச்சத்திரத்தில் அடிக்கடி தங்க ஆரம்பித்தார். பின் அந்த அதிகாரியும் அப்பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றப்பட்டார். வேலாயுதத்தின் குடும்பமும் அவ்வூரை விட்டுப் போய்விட்டது. அடுத்த மாதமே I. A. S. அதிகாரி வேலாயுதத்தின் மருமகனாய் விட்டார்.

என்னப்பா, கதையா சொல்லச் சொன்னேன்? பைத்தியம் யாருக்கென்று முடிவு செய்ய வேண்டும் சீக்கிரம் சொல்லு,

இதோ...... அவர்கள் காதல் வாழ்க்கை ஓராண்டு இன்பமாக ஓடிவிட்டது. அவள் தாய்மை நிலை அடையத் தொடங்கினாள். வாந்தி, மயக்கம். அதிகாரி அகமகிழ்ந்து தமக்கு மகன் பிறக்கப் போகிறான் என்று எண்ணினார். மூன்று மாதம், நான்கு மாதம், ஐந்து மாதம் என்று மாதங்கள் ஆக ஆக, வாந்தியும் அதிகரித்தது. மயக்கமும் அப்படியே. வயிறும் பெரிதாக வளர்ந்தது. வயிறு பெரிதாக பெரிதாக பைத்தியமும் பிடித்துவிட்டது; துணிகளைக் கிழிக்கத் தொடங்கி விட்டாள். நாளடைவில் அரை நிர்வாண நிலை அடைந்து விட்டாள். டாக்டர்களோ குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாய்விடும் என்றனர். பைத்தியத்திற்குரிய காரணத்தை எந்த டாக்டரும் அவ்வளவாக ஆராயவில்லை. மாதங்களோ வெகுவிரைவில் முடிந்து விட்டன. பத்தாம் மாதம் குழந்தையை ஆவலோடு எதிர்பார்த்தார் அதிகாரி. அடைந்தது ஏமாற்றந்தான் மேலும் ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. இந்த ஐந்து மாதங்களில் பைத்தியம் முற்றி விட்டது. வயிறும் பெரும்பானை போன்று உப்பிவிட்டது. பல நாட்கள் சாப்பிடமாட்டாள்; பல நாள் உணவை ஒரே வேளையில் சாப்பிடுவாள். இதற்குள் அதிகாரி பட்ட அவதி சொல்லுந்தரமன்று; அவர் பொறுமை வெகுவாகச் சோதிக்கப்பட்டு விட்டது. காதல் கசந்து விட்டது; மண விலக்குதான் கடைசி கட்டம். அதற்கிம் மூன்று டாக்டர்கள் பைத்தியம் என்று அத்தாட்சிப் பத்திரம் தரவேண்டும். இரண்டு டாக்டர்கள் அதிகாரியின் விருப்பப்படி கொடுத்து விட்டார்கள். மூன்றாவதாக ஒரு டாக்டரிடம் அதிகாரி சென்றார்.

அந்த டாக்டருக்கு வயது அறுபது இருக்கும். எந்த நோயாளிக்கும் அவசரப்பட்டு மருந்து கொடுக்கமாட்டார். நோயாளியின் பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குத் தாமதித்துப் பரிசோதிப்பார். ஆதலால், அதிகாரியின் அவசரத்திற்கு அந்த டாக்டர் இசையவில்லை. அன்றி இதற்கு முன் இந்தப் பயித்தியத்தையும் அதிகாரியையும் பார்த்ததில்லை. பைத்தியத்தைத் தம்மருத்துவ விடுதியில் வைத்துப் பரிசோதிக்கத் தொடங்கினார். இரத்தம், கோழை (சளி), சிறுநீர், மலம் ஒவ்வொன்றாகச் சோதித்தார். மலத்தில் நாக்குப் பூச்சிகள் நெளிவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்; ஐயமுங்கொண்டார். அவள் வயிற்றில் 15 மாதங்களாக இருப்பது குழந்தையா நாக்குப் பூச்சிகளா என ஆராயலானார். எக்ஸ்ரே எடுக்கும் எண்ணமும் தோன்றிற்று. அதற்குள் நாக்குப் பூச்சிகள் வெளியில் வருவதற் கேற்ற முறையில் நன்கு பேதியாகும்படி மருந்து கொடுத்தார். நூற்றுக் கணக்கான நாக்குப் பூச்சிகளும், ஆயிரக்கணக்கான முட்டைகளும் வெளிவந்தன. இவ்வாறு பன்முறை செய்தார். பூச்சிகளும் முட்டைகளும் வெளிப்பட்டு விட்டன. 15மாத கர்ப்பம் இருந்தவிடம்

தெரியவில்லை. வயிறு சுருங்கிவிட்டது. எக்ஸ்ரேய்க்கும் அவுசியமில்லை. பைத்தியமும் தெளிந்துவிட்டது.

நாக்குப் பூச்சியைப் டாக்டர்கள் 'Round worm' என்றும் (Ascais Lumbricoides) என்றும் கூறுகின்றனர். அப்பூச்சியின் உருவம் சிறுபாம்பு போன்றிருப்பதால், சில மருத்துவர்கள் 'நாகப்பூச்சி' என்றும், பட்டைப் பாம்பு என்றும் கூறுகின்றனர். இப்பூச்சி பெரும்பாலும் தண்ணீர் வழியாகவும், சிறுபான்மை மலத்தின் வழியாகவும் உடலில் பரவி, மக்களைப் பலவழியிலும் துன்புறுத்துகின்றது. அவள் வயிற்றில் குடிகொண்டு முட்டையுங் குஞ்சுமாய்ப் பெருகி, அவளைப் பைத்தியமாக்கி அவள் வாழ்வை ஓராண்டு காலம் பாழ்படுத்தியது. கடைசியாகச் சந்தித்த டர்க்டர் பொறுமைசாலியாக இல்லாதிருந்தால், அப்பூச்சிகள் அவளைக் காலப் போக்கில் அழிப்பதற்கு முன், அவளைக் காதலித்த அதிகாரியே கைவிட்டிருப்பார். அவளை நம்பிய அவள் பெற்றோர்களும் தெருவில் நின்றிருப்பர்.

ஆதலால் நாக்குப் பூச்சியை நஞ்சினுங் கொடியதாக எண்ண வேண்டும். சிவப்பு கலந்த பழுப்பு நிறமான இப்பூச்சி, பார்வைக்கு மண்புழு (Earth worm) எனப்படும் நாங்கூழ் புழுவைப் போன்றே இருக்கும். இங்குள்ள படத்தில் அவ்வுண்மையைக் காணலாம். பெண்பூச்சி இருமுனையும் கூர் உருளை போன்று பருத்து, ஆண் பூச்சியை விட சிறிது பெரிதாக இருக்கும். ஆண் பூச்சியின் ஒரு முனைதான் பருத்திருக்கும். சாதாரணமாக இப்பூச்சி 6முதல் 8அங்குல நீளம் வளரும் இயல்பு வாய்ந்தது. சில பூச்சிகள் இன்னும் நீண்டு வளர்வதுண்டாம். இப் பூச்சிகள் முட்டையிட்டுப் பொரிப்பவை. முட்டைகளின் ஓரம் ஓரணு பணம் போன்றும், நடுவிடம் பல்பதித்த நகை போன்றும் இருக்கும்.

இப்பூச்சிகள் பெரும்பாலும் மக்களின் சிறுகுடலில் தங்கி மக்களை உயிருடன்




உண்கின்றன. முதலில் பசியை மந்தப் படுத்தும்; சிலசமயம் வயிற்றில் சிறு சிறு கட்டிகள் ஏற்படும்; பைத்தியம் ஏற்படுவதை மேலே பார்த்தோம். சிறுகுடலுக்கு உணவு வரும் வழியையும், பெருங்குடலுக்குச் செல்லும் வழியையும் அடைத்துவிடுமாம். அவ்வாறு செய்துவிட்டால் அவ்வளவுதான்......... இப்பூச்சிகள் குழந்தைகளை எளிதில் தாக்குகின்றன. ஆகையால் குழந்தைகளை மிக்க கவனத்தோடு காப்பாற்ற வேண்டும். இப்பூச்சிகள் மக்களின் உடலிலிருந்து தம் இனத்தைப் பெருக்கிக் கொண்டு மக்களையே அழிப்பதால் இப் பூச்சிகளைப் புல்லுருவி (Parasite) என்றும் கூறுகின்றனர்.

இப் புல்லுருவிகளின் கொடுமையிலிருந்து தப்ப ஒரு முக்கியமான வழியைப் பின்பற்றுவது மிகவும் பாதுகாவலான வழியாகும். முறைப்படி வடித்துக் குழாய்களின் வழியாக அனுப்பப்படும் தண்ணீரையே குடிக்கவேண்டும். சில இடங்களில் குழாய்த் தண்ணீரையும் நம்புவதற்கில்லை. நல்ல முறையில் வடிகட்டிய தண்ணீர் கிடைப்பது அரிது. ஆதலால் குடிப்பதற்கு வேண்டிய நீரை நன்ருகக் காய்ச்சி வடிகட்டிப் பானையில் ஊற்றி வைத்துக் கொள்வதே நல்லது. இவ்வாறு தயார் செய்த நீரைக் குடிப்பதால், நாக்குப் பூச்சியால் ஏற்படும் நோயிலிருந்து தப்புவதோடு வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு, டைஃபாயிட் காய்ச்சல் முதலிய நோய்களினின்றும் தப்பலாம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.'

அட்டைப் படம்:

# விந்தை ரேடார்

திரு. தி. அ. கறுப்பண்ணன், B. Sc., (Hons.)

முதலாவது உலகப் போரில் ஆங்கிலேயர் எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களினுல், தம் போர்க் கப்பல்கள் பலவற்றைப் பறிகொடுத்துத் தவித்தனர். இப்பெரும் தொல்லையி லிருந்து விடுபட அவர்கள் ஒரு யுக்தி செய்தனர். கடற் சிங்கங்களைக் (Sea lions) கொண்டு எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடிக்க முற்பட்டனர். அவைகளைத் தங்களது நீர்மூழ்கிக் கப்பலின் அடியில் இருக்கச்செய்தனர். அவைகளுக்கு மிக நுண்ணிய காதுகள் உண்டு. தூரத்தில் எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கும்போதே, அதை ஒலி வாயிலாக உணர்ந்து அவ் வொலியைத் தங்களது உணவிற்காக அடிக்கப்படும் மணிதான் என்று எண்ணி, அவ்வொலி வரும் திக்கு நோக்கி விரைவாக நீந்திச் செல்லும். உடனே ஆங்கிலேயர்கள் இந்தக் கடற் சிங்கங்களைத் தொடர்ந்து சென்று எதிரி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து, அவர்களை அழித்தனர். ஆனுல் இம்முறையில் மிகவும் நேரம் செலவாகும். மேலும் கடற் சிங்கங்களை முழுதும் நம்ப முடியாது. பின்பு இரண்டாம் உலகப் பெரும் போரின் போதும், எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களினுலும், விமானங்களினுலும் தொல்லைகள் இன்னும் அதிகமாயின. "அவசியமே ஆராய்ச்சியின் அன்னை" என்பதற் கிணங்க இங்கிலாந்தும், அமெரிக்காவும் தங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், எதிர்த் தாக்குதலுக்கும் பயன்படக் கூடியதுமான 'ரேடாரைக்' கண்டுபிடித்தன. இது ஓர் அரிய சாதனை. போர்க்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இந்தச் சாதனையானது படிப் படியாக முன்னேற்றமடைந்து இன்று போரில் மட்டுமல்லாமல், சமாதான காலத்திலும் பெரும் பயனை அளிக்கக்கூடிய முறைகளில் பயன்பட்டு வருகின்றது! அழிக்கும் வேலைக்கென்றே கண்டுபிடிக்கப் பட்ட அணுச் சக்தியானது எப்படி இன்று ஆக்க வேலைக்கும் பயன்பட்டு வருகின்றதோ அதேபோல்தான் "ரேடாரும்" உலகப்பெரும் போரினின்றும் வந்த வரப் பிரசாதமாகும்!

"ரேடார்" என்ற பெயரை இச்சாதனத் திற்கு அளித்தவர்கள் அமெரிக்கர்களே யாவர். 'ரேடார்' என்ற சொல்லுக்கு வானெலி அலைகளைப் பயன்படுத்தித் தொலைவில் இருக்கும் பொருள்களைக் கண்டுபிடித்தல் என்பது பொருள். இது ஒரு சுருக்கப் பெயராகும். எப்படி நாம் ஐக்கிய நாடுகள் சபையை "ஐ. நா. சபை" என்று சுருக்கிக் கூறுகிறேமோ அதேபோல் "Radio detection and ranging" -அதாவது "ரேடியோ கண்டுபிடிப்பும் தூரமும்" என்ற பல சொற்களைக் குறுக்கி ஆங்கிலத்திலுள்ள சொற்களின் முதல் எழுத்துக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு

RADAR என்ற ஒரே சொல்லாக ஆக்கி யுள்ளனர்.

## வேலை செய்யும் விதம்:

ரேடாரானது வானொலி அலைகளை அனுப்புகின்றது. சாதாரணமான நமது வீடுகளில் இருக்கும் வானொலிப் பெட்டிகளைப் போலல்லாமல், வானொலி அலைகளை அனுப்புகின்ற அதே வேளையில் அது வானொலி அலைகளை ஏற்கின்றது. இவ்விரண்டு சாதனங்களும் ரேடாரிலேயே பொருத்தப்பட் டிருக்கின்றன. பொதுவாக, அலைகளை அனுப்புவதற்கும் ஏற்பதற்கும் ஒரே வானவலை (aerial) தான் பயன் படுத்தப்படுகின்றது.

ரேடாரில் மிகக் குறுகிய நீளமே யுள்ள வானொலி அலைகள் உற்பத்திச் செய்யப் படுகின்றன. பின்பு அனுப்பும் கருவியின் மூலம் வானொலி அலைகள் ஒரே சமயத்தில் எல்லாப் பக்கங்களிலும் அனுப்பப்படு கின்றன. எப்படி நாம் செங்குத்தான குன்றின் முன் நின்று கொண்டு பலமாக ஒலியிட்டால், சற்று நேரத்தில் நாம் எதிரொலியைக் கேட்கின்ருேமோ, அதேபோல் ரேடாரினுல் அனுப்பப்பட்ட வானொலி அலைகள் நேரே சென்று பொருளில் பட்டு எதிரொலியாகத் திரும்பிவரும். வானொலி அலைகள், ஒளி அலைகள் போன்றே ஒரு குறிப்பிட்ட வேகத்தில் தான், அதாவது விஞடிக்கு 1,86,000 மைல்கள் வேகத்தில் செல்கின்றன. ஆகவே வானொலி அலைகள் அனுப்பப்பட்ட வேளையிலிந்து, அவை சென்று எதிரொலித்துத் திரும்பி ஏற்கும் கருவியை அடையும் வரை உள்ள இடைவேளையைக் கணக்கிட்டு அதன் மூலம் ஒரு பொருளானது எவ்வளவு தூரத்தி லிருக்கின்றது என்பதை எளிதில் ரேடாரின் மூலம் கண்டுபிடித்து விடலாம். இவ்வாறு ஒரு பொருளின் தூரத்தை மட்டும் கண்டு பிடித்தால் போதாது. அது இருக்கும் திசையையும் கண்டுபிடிக்க வேண்டும். இதற்காக, வானொலி அலைத்தொகுதிகள் அனுப்பப் பட்ட உடனே வானவலை எல்லாத் திசைகளிலும் சுற்றிக்கொண்டே யிருக்கும். எப்போது வானவலை பொருள் இருக்கும் திசையை நோக்கி யிருக்கின்றதோ, அப்போது ஏற்கும் கருவியில் எதிரொலி யினுல் ஏற்படும் மாறுபாடுகள் மிகவும் வலிமையுற்றுக் காணப்படும். இதைக் கொண்டு பொருள் இருக்கும் திசையைக் காணலாம். ஆகவே ரேடாரைக் கொண்டு, சாதாரணமாக நாம் எளிதில் கண்டு பிடித்துவிட முடியாத பொருள்களை, அவைகள் மிகத் தொலைவி லிருந்தாலும் இருட்டிலோ மூடுபனியாலோ மறைக்கப் பட்டிருந்தாலும், மழை பெய்துகொண் டிருந்தாலும், அதாவது பருவ நிலை எப்படி யிருந்தாலும் அவைகளைக் கண்டு பிடிப்பது மட்டுமன்றி அவைகளின் போக்கையும் நம்மால் கவனிக்கமுடிகிறது.

## போரில் ரேடாரின் பயன்:

போரில், விமானங்களுக்கும் விமானங்களை எதிர்த்துத் தாக்கும் பீரங்கிகளுக்கும், எதிரிகளின் விமானங்களைக் கண்டுபிடிக்க இந்த ரேடாரானது மிகவும் பயன்பட்டு வந்தது. இரண்டாவது உலகப் பெரும் போரின் போது லண்டன்மா நகரம் ஜர்மானியர்க ளுடைய விமானங்களால் கூட்டம் கூட்டமாகத் தாக்கப்படும்காலை, அந்த எதிரி விமானங்களைத் தொலைவி லேயே முன்கூட்டிக் கண்டுபிடித்து, அவைகளை, லண்டன்மா நகரை யடையும் முன்பே சுட்டு வீழ்த்திவிட இந்த ரேடாரானது பயன்பட்டது. இரவு, பனி, மழை எதுவா யிருந்தாலும் ரேடாரானது பொருள்களைக் காட்டிக் கொடுத்துவிடும். ரேடாரி னுதவியால் தொலைவிலுள்ள எதிரி விமானத்தையோ, கப்பலையோ கண்டு பிடித்துப் பின்பு வானிலிருக்கும் நேச விமானத்திற்கு அதை வானொலி மூலம் விளக்கிப் பின்பு ரேடாரி னுதவியாலேயே நேச விமானத்தைச் செலுத்தி அந்த எதிரி விமானத்தை அழிக்க இயலும்.

மேலும் ஐயத்திற்கு இடமளிக்கக்கூடிய ஏதாவது ஒரு விமானம் வானத்தில் பறந்தால், எதிரியின் விமானமா அல்லவா என்பதை இந்த ரேடாரினுதவியால் உறுதிப்படுத்த முடிகிறது.

முதன் முதலில் ரேடார் தற்காப்புக்காகத்தான் பயன்படுத்தப் பட்டது. பின்பு எதிர்த் தாக்குதல்களுக்கும் பயன் படுத்தப் பட்டுவருகிறது. ரேடாரைக் கொண்டு விமானங்களை இருட்டில் கூட எதிரியின் இருப்பிடத்திற்கு வழிதவருமல் வழி காட்டி, அதை அழிக்க இயலுகிறது.

தற்போது முன்னேற்றமடைந்த ரேடாரின் முன்பு உட்கார்ந்து கொண்டு ஒரு போர்த் தலைவன் தன்னைச் சுற்றி 200 மைல்கள் தொலைவிற்குள் என்னென்ன நடக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இது கதைகளில் நாம் படிக்கும் மாயக் கண்ணுடியைப் போன்றல்லவா இருக்கின்றது!.ஏதாவது ஒரு விமானம் வழி தவறிவிட்டால் அதைச் சரியான வழியில் செல்ல இங்கிருந்துகொண்டே வானொலி மூலம் எச்சரிக்கலாம். அன்றி ஒரு விமானம் சுடப்பட்டுப் பழுதாக்கப் பட்டால் அது நிலத்தில் இறங்கிய இடத்தை ரேடாரின் மூலம் எளிதில் காணலாம். வெகு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வழிகாட்டப்பட்ட குண்டுகளால் (Guided missiles) ரேடாரினுதவியால் வழிகாட்டப் பட்டு எதிரியின் விமானத்தையோ இருப்பிடத்தையோ அழிக்க முடிகிறது.

**கடலில்:**

கப்பலில் பொருத்தப்பட்டிருக்கும் ரேடாரைக் கொண்டு தன்னை நெருங்கிவரும் விமானத்தைக் கண்டுபிடித்து விடலாம். கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கும் பீரங்கிகள், ரேடாரினுதவியைக்கொண்டு எதிரியின் விமானம் இருக்கும் திசைக்குத் தங்களைத் தாங்களே திருப்பிக்கொண்டு, சுட்டுக் கீழே வீழ்த்துகின்றன.

எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள் ரேடாரினுதவியால் எளிதில் கண்டுபிடிக் கப்பட்டன. பொதுவாக நீர் மூழ்கிக் கப்பல்கள் இரவில் தான் நீரின் மேற்பரப்பிற்கு வரும். ஆனல் ரேடார் இரவில் கூட இவைகளின் இருப்பிடத்தைக் காட்டி விடுவதால் அவற்றை அழிப்பது மிகவும் எளிதாயிற்று. கப்பல்கள் கூட்டங் கூட்டமாகச் செல்லும் போது, இருட்டிலோ பனியிலோ ஒன்ருடொன்று மோதிக்கொள்ளாமலிருக்க ரேடார் பயன் படுகிறது. மேலும் குளிர்ந்த பிரதேசங்களில் பனி மலைகள் மிதந்துகொண்டிருப்பது இயற்கை. இவைகளின் மீதும் கப்பல்கள் தெரியாமல் மோதி அழியா வண்ணம் ரேடார் காக்கின்றது. இதனைத் தான் படம் விளக்குகிறது.

ரேடார் நிலையங்களை நிலப் பரப்பில் அநேக இடங்களில் பொருத்தி வைப்பதால், ஒரு விமானத்திற்கோ, கப்பலுக்கோ திசை தெரியாமல் தத்தளிக்கும்போது தானிருக்குமிடம் தெரிவிக்கப்படுகின்றது.





கப்பல்களில் பிரயாணம் செய்யும் போது விபத்துகள் ஏற்படுவது இயற்கை. அவ்வாறு விபத்தில் சிக்குண்டு பின்பு தப்பிக்கும் படகில் செல்லும் மாலுமிகள், கடலில் ஒருவித உதவியும் கிட்டாமல், தாங்கள் இருக்கும் இடமும் பிறருக்குத் தெரியாமல், இங்குமங்கும் தள்ளப்பட்டுத் தத்தளித்து அல்லலுறுவதை ரேடாரின் மூலம் தவிர்க்கலாம். இம்மாதிரியான தப்பிக்கும் படகில் ஒரு ரேடாரைப் பொருத்தி வைத்தால், அது எல்லாப் பங்கங்களிலும் வானொலி அலைகளை அனுப்பிக்கொண்டே யிருக்கும். தொலைவில் இருக்கும் விமானமோ கப்பலோ தனது ரேடாரின் மூலம் இந்தத் தவிக்கும் கப்பலைக் கண்டு, அவ்விடத்திற்கு விரைந்து அல்லலுற்றோரைக் காப்பாற்ற முடியும். இதைத்தான் மேலே காட்டியிருக்கும் படம் விளக்குகின்றது.

**சமர்தான காலத்தில்:**

ஆகாயத்தில் பறக்கும் விமானங்களுக்கு அவைகளின் எதிரே இருக்கும் மலைகளைக் குறித்து ரேடாரின் மூலம் எச்சரிக்கை கிடைக்கின்றது. பனி மூடிய காலங்களிலோ, இரவிலோ விமானங்கள் விபத்தின்றி விமான நிலையத்தில் இறங்க ரேடார் பெரிதும் பயன் படுகின்றது. ரேடாரினுதவியால் ஒரே சமயத்தில் நாற்பது விமானங்களை ஒருவித விபத்துமின்றி ஒரு விமான நிலையத்தில் இறக்க முடியும். விமானத்தில் இருந்து கொண்டும் தொலைவில் குமுறிக் கொண்டு வரும் புயலைக் காண இயலாத வேளைகளில் கூட ரேடாரினுதவியால் புயலை முன் கூட்டியே அறிந்து, விமானத்திற்கோ அல்லது கப்பலுக்கோ எச்சரிக்கை விடுத்து அவைகளை விபத்தினின்றும் காப்பாற்ற முடிகின்றது. இவ்வாறு ரேடார் பருவ நிலை ஆராய்ச்சிக்கும் பயன்படுகிறது. ஒரு விமானம் தன்னால் தொலைவி லிருக்கும் புயலைக் காணமுடியாத நிலையில் ரேடார் அதனைக் கண்டு விமானத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் செய்கையைத் தான் நம் **அட்டைப் படம்** சித்தரிக்கின்றது.

இவ்வாறு போரில் பாதுகாப்பின் அவசியத்திற்காகத் தோன்றிய ரேடார் இன்று படிப்படியாக முன்னேற்ற மடைந்து, போரிலும் சமாதான காலத்திலும் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.



திரு. ஆர். அரங்கராசன்

அமைதி பூத்த சூழல்



திரு. ஏ. ஆர். இராமானுஜம்

உணவிடை யோகம்



திரு. வி. ஏ. வி. இராஜன்

உல்லாச போகம்



யூசிஸ்

'பழங்காலத்து'த் திரைப் படக் கருவியைப்
டயன்படுத்துபவர்

**எடிசன்**

# புரட்சிமணி - புத்ததாஸ்

'நையாண்டியார்'

புரட்சிமணி புத்ததாஸ் பெயர்வாங்கி விட்டார்;
'போர்'கக்கும் பேச்சிலே அணுகுண்டு வீச்சு;
வறட்சியில் தொண்டையில் நீர்வற்றிப் போச்சு;
வாடகை 'ஒலிபேசி'' தான்பேச லாச்சு.

விரட்டினர் புத்ததாஸ்; வேகமாய்ச் 'சோடா'
வெடியிலே குடியிலே பேச்சைச் தொடர்ந்தார்;
புரட்டினர் வரலாற்றுப் பொன்னேட்டை மத்தாப்புப்
புஸ்வான வெடிபோலச் சொல்வானம் விட்டார்,

பாலாற்றுப் பாலத்து மேலே நடக்கும்
பாங்கான ரயில்வண்டிக் 'கடகடா'ப் போலக்
கோலாட்டம் ஆடினர்; சொல்மாரி பெய்தார்;
கொண்டாட்டப் பேச்சிலொரு திண்டாட்டம் கண்டார்;

வாலாட்டித் துள்ளுமோர் அனுமாரைப் போலே
வாட்டமாய்த் துள்ளினர்; நீட்டினர் பேச்சைத்
தாலாட்டுப் பாட்டிலே தூங்கும் மருந்தைத்
தமிழாக்கி ஊட்டிருர்; சொக்கினர் எல்லாம்.

சரியாக மேடையை ஓங்கிப் புடைத்தார்;
'சட்'டென்றே எல்லோரும் தூக்கம் கலைந்தார்;
அரியாய்க் குரைத்தார்; நரியாய் முழங்கினர்;
ஐயகோ! ஒருவரும் கைதட்ட வில்லை.

அரியதொரு நகைச்சுவைக் கதைசொல்லிப் பார்த்தார்;
ஆசைக்கு ஒருமுறை கைதட்ட வில்லை.
விரிவாய் விளக்கினர்; எல்லாரும் கூடி
வேகமாய்த் தட்டியே உட்கார வைத்தார்.

செயலாளர் போட்டதொரு செவ்வலரி மாலை
சீரான நாராகித் தோளில் கிடக்க
அயலாளர் அறியாமல் மனதும் வெதும்பி
அடுக்களைப் பூனைபோல் நீட்டினர் கம்பி!

இயலாத செயலாளர் என்னமோ சொன்னர்;
இடிவீரர் 'புத்ததாஸ்' எங்கோ மறைந்தார்;
புயலாகி வந்தவர் பூனையாய்ப் போனர்;
போட்டதொரு முதலுக்கும் வழியின்றிப் போனர்.

கைப்பணம் போனதோ அளவுக்கு மேலே;
கண்டதோர் பெருமையோ முயல்கொம்பு போலே
'தர்ப்பணம்' பண்ணினர் தானே தனக்கு;
தான்பெற்ற இன்பமோ செலவுக் கணக்கு.

ரோஜாப்பூ மாலைக்கு ரூபாய் இரண்டு;
ரொக்கமாய் 'மைக்'குக்கு இருபத்தி ரண்டு
காசாய்க் கொடுத்ததோ காந்திக் கணக்கு
'காப்பி'யும் சோடாவும் ஓட்டல் கணக்கு.

ஆசையைப் புத்ததாஸ் அறவே விடுத்தார்;
அருள்ஞானி புத்தர்க்குத் திருநாள் எடுத்தார்;
தாசராய்ப் 'பிரியாணி' கடையை விரித்தார்;
'தட்டொன்று எட்டணு!' காசைப் பறித்தார்.

# குழந்தையும் விளையாட்டும்-2

திரு. C. R. பரமேஷ், M. A.,

விளையாட்டின் அவசியத்தைப் பற்றியும், விளையாட்டின்மையால் ஏற்படும் குறைபாடுகளைப் பற்றியும் முன்பு* கவனித்தோம். குழந்தைகள் தங்கள் வயதிற்கேற்றபடியே விளையாடுகின்றன என்றும் அறிந்தோம். குழந்தைகளைச் சாதாரணமாக ஐந்தாம் ஆண்டிலேதான் பள்ளியில் சேர்க்கிறோம். அதற்குமுன் அவர்கள் படிப்பதில்லை. எனினும், விளையாட்டுகளுக்குக் குறைவில்லை. இவ்வாறு ஐந்து வயதிற்கு முற்பட்ட குழந்தையின் விளையாட்டை முக்கியமாக மூவகையாகப் பிரிக்கலாம். அவைகள் தசைவளர் விளையாட்டு, சூழ்நிலை ஆராய்வு விளையாட்டு, போலி நடிப்பு விளையாட்டு என்பன.

**தசைவளர் விளையாட்டு:**— ஈராண்டுக் குழந்தை நடக்கிறது, ஓடுகிறது, தொத்துகிறது, படி ஏறி இறங்குகிறது, தூரி ஆடுகிறது. இன்னும் இதுபோல் பல செய்கின்றது. இவையெல்லாம் சுயேச்சையாக நடைபெறுகின்றன. இதெல்லாம் ஒரு விளையாட்டு. இவ் விளையாட்டுகளால் பெறும் பயன்கள் மறைமுகமாக ஏற்படுகின்றன. பால் குடிக்கும் குழந்தை தன் கை கால்களை விளையாட்டாக ஆட்டுவதும் அம்மாள் கொடுக்கும் சாவிக் கொத்தை வாங்கி வாங்கி எறிவதும், கிலுகிலுப்பையை ஆட்டி ஆட்டிப் பார்ப்பதும் ஒன்றையே பல முறை செய்வதும் எல்லாம் குழந்தை உள்ளத்தில் தூண்டப்படும் ஓர் உணர்ச்சியின் செயல்களாம். குழந்தையின் தசைகள் ஒன்றோடொன்று இணங்கி இயங்க விளையாட்டுகள் பயன்படுகின்றன. இவ்வாறு விளையாட்டால் மறைமுகமாக உடற்பயிர்ச்சி பெற்றுவிடுகிறது. ஈராண்டுப் பருவத்தில் குழந்தை ஒரு செயலையோ விளையாட்டையோ திரும்பத் திரும்பச் செய்வதைப் பார்க்கிறோம். இது குழந்தையின் ஈராண்டுப் பருவ இயல் எனலாம்.

**சூழ்நிலை ஆராய்வு விளையாட்டு:**— குழந்தை தானாக நடக்கக் கற்றுக்கொண்டதும் தன் சூழ்நிலையில் உள்ள பொருள்களை ஆராய்கின்றான். அவைகளால் என்ன செய்யக்கூடும் என்பதையும் ஆராய்கிறான். தன் சூழ்நிலையிலுள்ள ஒவ்வொரு புதுப் பண்டமும் அவனைக் கவருகிறது. ஆனால் இவ்விளையாட்டில் குழந்தை நீண்ட காலம் கழிப்பதில்லை. ஏனெனில் இன்னது செய்ய வேண்டுமென்ற திட்டம் கிடையாது. எனவே தன் விளையாட்டிற்கு இடையூறு ஏற்பட்டாலும் அதைப் பொருட் படுத்தவதில்லை. அனுபவம் அதிகரிக்க, குழந்தையின் விருப்பங்களும் அதிகரிக்கின்றன. எனவே தக்க விளையாட்டுப் பொருள்கள் கொடுக்கப்பட்டால், குழந்தையின் அறிவு நன்கு வளரும்.

## விளையாட்டு வேலையாக மாறுகிறது

குழந்தை தன் விளையாட்டால் பல பொருள்களை ஆராய்ந்து பயிற்சி பெற்று விடுகிறான். பின்னர் விளையாட்டில் தன் நுண்ணறிவைச் செலுத்த முற்படுகிறான். விளையாடுவதற்கு முன்பே எண்ணிச் சீர்தூக்கித் திட்டமிட்டு அதன்படியே நடத்தி வைக்கிறான். இவன் வருங்கால எஞ்சினீர் ஆவான்; அணைகட்டுவான்; தொழிற்சாலை அமைப்பான்; என்ன செய்யான்!

* கலைக்கதிர் பிப்ரவரி 1956 இதழ்.

இக்கட்டத்திற்குப் பிறகு விளையாட்டுப் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவைகளை உபயோகிப்பதிலும் குழந்தை தன் கருத்துக்களையும் ஆவலையும் செலுத்துகிறான். இவ்வாறு சிந்தித்து விளையாடும் பரிசோதனை விளையாட்டில் குழந்தையின் பரந்த அனுபவம், ஞாபகம், கவனம், கற்பனை முதலியன இடம் பெறுகின்றன. இந்த விளையாட்டுகளெல்லாம் வெறும் விளையாட்டுகள் அல்ல; ஒரு நோக்குடையதாகவே (Purposeful) இருக்கின்றன.

குழந்தை மணல் வீடு கட்டும் பொழுது ஒரு திட்டத்திற்காக வேலை செய்கிறான். கட்டைகளை அடுக்கி ஒரு ரயில் வண்டித் தொடர் அமைக்கிறான். இவ்வாறு செய்யும் பொழுது பெற்றோரும் மற்றோரும் அவனுடைய ஆக்க வேலைக்கு ஒரு வித இடையூறும் விளைவிக்காமலும் இருத்தல் வேண்டும். தான் ஈடுபட்டுள்ள வேலையை நிறுத்தி வந்தவருக்கு மரியாதை வணக்கம் செய்யும்படியாகவோ, அல்லது அக்குழந்தையைக் கட்டித் தழுவி முத்தமிட்டுப் புகழ்ந்து அவனுடைய இன்ப விளையாட்டைக் கலைக்கும் படியாகவோ செய்யக் கூடாது. குழந்தையிடம் அன்பையுமா செலுத்தப்படாதென்று கேட்கலாம். அன்பைக் காட்டும் சமயம் இதன்று; முறையும் இதன்று. அவனும் அத்தகைய அன்பை இத்தருணத்தில் பெற விரும்புகிறான் இல்லை. தான் ஈடுபட்ட வேலையைப் பூர்த்தி செய்யவிடாமல் குறுக்கிடும் எந்தச் சக்தியையும் குழந்தை இயற்கையாகவே வெறுக்கிறான்.

உள இயல் கண்கொண்டு பார்ப்போமானால் "ஒரு முத்தம் தா கண்ணு" என்று அன்னை அழைக்க, செவி சாய்க்காத குழந்தைக்குத் தாயின் பேரில் அன்பில்லையே என்று எண்ணமாட்டோம். குழந்தை உள்ளத்தில் விடா முயற்சி, கவனம் முதலிய பண்புகள் வளர்ந்து உருவாகின்றன என்று மனம் மகிழ வேண்டும். இவ்வித விளையாட்டுக்களின் மூலம் குழந்தை தன்னுடைய உண்மையான வேலைக்குத் தயாராகிறான். ஒருதிட்டத்தை விடாமுயற்சியுடன் மெய்மறந்து செய்யக் கற்றுக் கொண்ட பொழுது குழந்தை பள்ளிப் பருவம் (School maturity) அடைகிறான் என்று கூறலாம். அதாவது ஒரு காரியத்தை எடுத்து முடிக்கும் திறமை பெற்று விட்டான் எனக்கொள்ளலாம். விளையாட்டில் செலுத்தும் குழந்தையின் கவனத்தை நாம் குறுக்கிட்டுத் தடுத்துக்கொண்டே இருந்தால் வருங்காலத்தில் அவன் தன் படிப்பிலும், வேலையிலும் கவனம் செலுத்தச் சக்தி யற்றவனாகி விடக்கூடும். அவ்வாறு விரும்பியா நாம் குழந்தை விளையாட்டில் குறுக்கிடுகிறோம்? இப்பருவத்தில் குழந்தையின் சூழ்நிலையில் நுண்ணறிவைத் தூண்டும் பற்பல பொருள்கள் இருந்தால் அவைகளைக் கொண்டு அவன் அதிக நேரம் விளையாடித் தன் கைத்திறத்தையும், அனுபவத்தையும் மேம்படச் செய்து கொள்வான். எட்டு அல்லது ஒன்பது வயதில் குழந்தை உள்ளத்தில் ஆக்க வேலைச் சக்தி (Creative impulse) மிகவும் அதிகமாகத் தோன்றுகிறது. இத்தருணத்தில், சூழ்நிலையில் மேற் கூறியவாறு தக்க பொருள்களிருப்பின் ஏற்கனவே பெற்ற அறிவுடனும், நுண்ணுணர்வுடனும் (Keen Perception) கலந்து ஓர் உயர்ந்த வகையான ஆக்க வேலையைச் செய்ய ஏதுவாகும். சிறு வயதில் நல் முறையில் விளையாட அவகாசம் பெறாதவன் வருங்காலத்தில் ஆக்க வேலையில் ஈடுபடுவதோ, திறம் பெறுவதோ எளிதல்ல.

## பண்டங்கள் செய்தல்
### (Making things)

சுமார் ஈராண்டு முதல் ஐந்தாண்டுவரை குழந்தைகள் சிறு கட்டைகளையும், செங்கற்களையும் வைத்துக் கொண்டு விளையாடுவதைப் பொழுது போக்கு என்று அறியாதவர்களே நினைப்பர். கூர்ந்து கவனித்தால் அக்குழந்தைகள் அப்பண்டங்களின் நீளம்,

அகலம், உயரம், பருமன், நிறை, செறிவு போன்ற பல தன்மைகளை ஆராய்ந்து தத்தம் புலன் உணர்ச்சிகளைத் தாமே கூர்மை யாக்கிக் கொள்கின்றனர் என்பது விளங் கும். இவ்வாறு தீட்டப் பெற்ற புலனறிவு, வருங்காலத்தில் பெரும் பலனளிக்கிறது. இதை அறிந்த பெற்றோர் குழந்தையின் சூழ்நிலையில் தக்க பொம்மைகள், களிமண் முதலியன வைப்பதுடன், தங்களுடைய அறிவையும், அன்பையும் தந்து ஓரளவுக்கு வழிகாட்டியாகவும் இருத்தல் வேண்டும். ஏதோ விளையாட்டுப் பண்டங்களைக் குழந் தையின் முன் எறிந்து விட்டோம்; நம்மை இனி அது தொந்தரவு செய்யாது என்று விலகி விடுவதும் கூடாது. அல்லது "இதைச் செய்", "இப்படிச் செய்யாதே", என்று குழந்தையின் இயற்கைப் போக் குச்கு இடைஞ்சலாக அடிக்கடி குறுக்கிட வும் கூடாது. இவைகளை அனுசரிக்கா விடில் வருங்காலத்தில் இக்குழந்தைகள் முரடர்களாகவும், அமைதி யற்றவர்களா கவும் ஆகின்றனர்.

குழந்தைகளுக்கு விளையாட்டுப் பண்டங் கள் தரவேண்டும் என்ற நம்பிக்கை ஒன்று மட்டும் போதாது. எப்பருவத்தில் எவ் வகைப் பண்டங்கள் தரவேண்டும் என்றும் அறிதல் வேண்டும். சில வயது வந்த குழந்தைகளின் உள்ளத்தின் போக்கையும் உடலின் சக்தியையும் உணராது ஏதோ போலி விளையாட்டுக் குகந்த(Fantasy play) பண்டங்களைத் தந்தோ மானல், அவர்கள் போலி விளையாட்டு நிலையிலிருந்து மேலேறு வதில்லை. மெய்யான வாழ்க்கையி லிருந்து தப்பிக் கொள்ளும் வழியைத் தேடுகின் றனர். கிட்டாதன வற்றுக்குப் பதிலாகப் போலி விளையாட்டில் தம துள்ளத்தைத் திருப்தி செய்து கொள்கின்றனர். அமைதி யாகவும், சாதுவாகவும், அதிக நுண்ணறி வில்லாததும் ஆன குழந்தைகள் இந்தப் போலி விளையாட்டிலே அதிக காலம் கழித்து விடுகின்றனர். சில குழந்தைகள் சூழ்நிலையி லுள்ளவரையும் வெறுத்து முரட்டுத்தனம் அதிகரித்து வம்புக்காரர் களும் ஆகின்றனர்.

## கற்பனை விளையாட்டும், போலி விளையாட்டும்:

குழந்தையின் உள்ளம் ஆழ் கடலை ஒத்தது. எளிதில் உணர்ச்சி அலைகளைக் கிளப்பிவிட முடியும். அதன் கோபதாபங் களைத் தடுப்பதும், கட்டுப் படுத்துவதும் அவர்களைச் . சமூக விரோதிகளாகத் தூண்டுவ தாகும். அவர்கள் உள்ளத்தை விளையாட்டுக்களின் மூலமாக அவர்களா லேயே பண்படுத்தல் வேண்டும். விளை யாட்டுகள் உள்ளிருந்து பொங்கும் உளச் சக்திக்கு ஒரு காப்புக் கதவு (safty valve) போன்றது. அப்பா அம்மா என்று விளையாடுவதும், "கண்ணும் பூச்சி" ஆடுவதும், பூனைக் குட்டிபோல் "மியா மியா" என்று திரிவதும், ரயில் போல் கத்துவதும், பொம்மையைக் குளிப்பாட் டுவதும், இது போன்ற பல கற்பனை விளையாட்டுகள் மூன்று, நான்கு வயது குழந்தைகளில் உச்ச நிலையை அடை கின்றன. இவை வெறும் நடிப்பு அல்ல. தம் உள்ளக் கருத்துக்களை இவைகளின் மூலம் வெளியாக்கி உள்ளத் துடிப்புகளை விடுதலை ஆக்கிக் கொள்கின்றன.

இந்த நடிப்பு விளையாட்டு எவ்வாறு தொடங்கும், எப்பொழுது தொடங்கும் என்பது விளையாட்டுணர்ச்சி(Play instinct) யைப் பொறுத்த தாகும். வளர்ச்சியுடன் விருப்பமும் அதிகரிக்கிறது. ஆண் குழந்தை ரயிலோ வண்டியோ ஓட்டுவான். பெண் குழந்தை பொம்மைக்குப் பாலூட்டு வாள். பெற்றோருடைய நடை உடை பாவனை, கோப தாபம் முதலியவற்றைக் கவனித்த குழந்தைகள் அவர்களைப் போலவே விளையாட்டிலும் நடிப்பர். எனவே சூழ்நிலையில் உள்ளோர் உயர்ந்த லட்சியங் களைக் கடைப்பிடிப்பவராக இருத்தல் வேண்டும். ஏதோ ஒன்றும் அறியாத குழந்

தைகள், நம் போக்கு அதற்கென்ன தெரியப்போகிறது என்று இருந்துவிடக்கூடாது.

குழந்தைகள் பெரியோர் ஜோடுகளைப் போட்டுக் கொண்டு 'தாட்பூட்' என்று நடப்பதையும்' கைத்தடியையோ, குடையையோ எடுத்துக் கொண்டு பெரிய மனிதனாகப் பாவிப்பதையும், உயர்ந்த நாற்காலி மேல் நின்று கொண்டு தான் அம்மா அப்பாவைப் போல் பெரியவனென்று சொல்லிக் கொள்வதையும் பார்த்திருக்கிறோம். இதற் கெல்லாம் அடிப்படைக் காரணம்யாதெனில், குழந்தை, தான் சிறியவன். பலமற்றவன் என்ற தன்னிடமுள்ள தாழ்த்தப்பட்ட உணர்ச்சியை (infiriority feeling) அறிந்து தன்னைத் தானே பெரியவனாக நடித்துக் கொள்கிறான். இச்செயல்கள் அவனுக்கு உயர் உணர்ச்சியையும் (Superiority feeling) பெருந்தன்மையையும் அளிக்கின்றன. குழந்தை தன் பொம்மையிடம் 'உன்னை அடிக்கிறேன் பார், உதைக்கிறேன் பார்' என்று சொல்லி விளையாடுவதெல்லாம் பெரியவர்களின் கண்டிப்பைப் பிரதிபலிப்பதாகும். இவ் விளையாட்டுக்களே தன்னுள் பதித்து கிடக்கும் கோபம், பழிவாங்கும் இயல் முதலியன விலகும் கழிவுக் கதவுகளாகும். குழந்தையின் விளையாட்டே அதன் மொழியாகும். நம் நடத்தை எத்தகையது என்று அறிய வேண்டின் குழந்தை விளையாட்டைக் கவனிக்க வேணடும். குழந்தைகளே நம் உள்ளத்தைக் கண்டு பிடிக்கும் அளவு கோளாகும்.

நடிப்பு விளையாட்டிலும், கற்பனை விளையாட்டிலும் ஈடுபட்டிருக்கும் குழந்தை அம்மாவைப் போலும் அப்பாவைப் போலும் நடித்துக்கொள்கிறதே ஒழிய தான் அம்மாவாகவோ அப்பாவாகவோ மாறிவிடவில்லை என்று நன்றாக அறியும். எல்லாம் நடிப்பென்றும் போலி என்றும் நன்கு உணரும். இந்தப் போலி விளையாட்டு ஐந்தாண்டு நெருங்க நெருங்கக் குறைந்து, உண்மையாகக் கிரியா சக்தியைத் தூண்டும் ஆக்க வேலை தரும் விளையாட்டுகளில் ஈடுபடுகின்றன. அதற்கு மேற்பட்ட வளர்ச்சியில் ஓவியத்தின் மூலமும், இலக்கியத்தின் மூலமும், கற்பனையும் போலி நடிப்பும் வெளிப்படுகின்றன எனலாம்.

குழந்தையின் உள்ள வளர்ச்சி ஒரு தனிப்பட்ட ஒழுங்கில் தொடர்ந்து செல்கிறது. அவ்வளர்ச்சியை ஒட்டியே விளையாட்டுகளும் பருவத்துக்குப் பருவம் மாறிக் கொண்டே இருக்கும். இவைகளை ஆசிரியரும் பெற்றோரும் கவனித்து வரவேண்டும். தக்க பருவத்தில் தக்க விளையாட்டுகளைக் கையாளாவிடில் வருங்காலத்தில் உள்ளக் கோளாறுகள் ஏற்பட்டுச் சமூகத்தையே பாதிக்கக்கூடும். ஆதலால் விளையாட்டை நாமும் 'விளையாட்டென்று' அலட்சியம் செய்யாமல் விஞ்ஞான முறை கண்டறிந்த உண்மைகளைப் பயன் படுத்திக் கொண்டால் எதிர்காலச் சமுதாய மக்களின் உள்ளம் பண்பட்டதாக அமையும்.

அடுத்த இதழில் விளையாட்டின் விதிகள் என்னென்ன என்பதைப் பல அறிஞர் எங்ஙனம் ஆராய்ந்து எடுத்துக் காட்டியிருக்கின்றன ரென்று கவனிப்போம்.



# தேவர் கண்ட

# திருநாடு

*திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, M. A.*

வளம் நிறைந்த நாடு தலைசிறந்து ஒளிர்வதாகும். வாழ்விற்குரிய இயற்கை வளனும் செயற்கை நலனும் செறிந்த நாடே சிறப்புற் றோங்கும். வேண்டிய பொருளை வேண்டியாங்குப் பெறும் ஒரு நாட்டினர் அளப்பரும் இன்பம் எய்துவ ராவர். அதனால் அவர்கள் வாழ்வு தழைக்கும்; பெருகும். அவர்கள் தம் நாட்டினை உயிரினும் போற்றி ஓம்புவர். தம் நாட்டின்பால் உண்மை அன்பும் பற்றுங் கொண்டொழுகும் மக்களை யுடைய நாடு எஞ்ஞான்றும் இந் நிலவுலகத்தில் நின்று நிலவுவ தாகும்.

*"பதியெழு அறியாப்*
*பழங்குடி கெழிஇய*
*பொதுவறு சிறப்பிற்*
*புகார்"*

என்று இளங்கோவடிகள் தம் காவியத்தில் புகார் நகரத்தைச் சிறப்பிக்கின்றார். வேற்றூர்களுக்குக் குடியேறத் தெரியாத பழங்குடிமக்கள் புகார் நகரத்தில் நிறைந்து வந்தனர். ஆகையால் அந்நகரம் தனிச் சிறப்போடு ஒப்பற்று விளங்கிய தென்பர் இளங்கோவடிகள். தமக்கு வேண்டிய பொருளும் இன்பமும் அந் நகரின்கண் நிரம்பி யிருந்தமையால் அந்நகர மாந்தர் அங்கு விரும்பி உறைந்தனர் என்பது கருத்து.

இங்ஙனமே ஏமாங்கத நாடு ஏமமுற இலங்கிய திறத்தைத் திருத்தக்க தேவர் தம் தனிப் பெருங் காவிய மாகிய சீவக சிந்தாமணியில் தெளிவு படுத்துகின்றார். அந்நாட்டின் பல்வளங்களையும் பயில்தொறும் நயம் பயக்கும் அவர்தம் பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன.

வளமிகுந்த ஏமாங்கத நாடு பொன்னுடாகவும் நன்னுடாகவும் திகழ்ந்தது. ஒரு நாடு நன்னுடாகத் திகழ்தற்கு வளம் மட்டும் நிறைந்திருந்தால் போதாது. அந்நாட்டில் உறைபவர் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். செல்வர்கள் வள்ளல்களாக விளங்குதல் வேண்டும். அறவோர் இல்லாத நாடு வளம் பல செறிந்திருப்பினும் அது நாளடைவில் அமைதி இழந்து அழிவது திண்ணம்.

*"தள்ளா விளையுளுந்*
*தக்காருந் தாழ்விலாச்*
*செல்வருஞ் சேர்வது நாடு"*

என்பது குறள். இக்குறளுக்குத் தக்க இலக்கியமாகத் திருந்தக்க தேவர் ஏமாங்கத நாட்டினை எடுத்தோதுகிறார்.

ஏமாங்கத நாட்டில் வானம் பொய்ப்பதில்லை. கற்புடைப் பெண்டிரும் பெட்புடைப் பெரியோரும் உள்ள நாட்டில் மழை பெய்தற்குரிய காலத்தில் தவறாது பெய்யும்

என்பர். ஏமாங்கத நாட்டில் மழை பெய்து எங்கும் நீர்ப் பெருக்கெடுத் தோடியது. வரைகளின்றும் அருவிகள் வெள்ளம் பொங்கி இழிந்தன. மலையினின்றும் அருவி இழிதருங் காட்சி எழில் மிகுந்ததாம். இவ் வெழிலுறுங் காட்சியைத் திருத்தக்க தேவர் காண்கிறார்; அதன்கண் கருத்தை இழக்கிறார்; கற்பனையில் ஆழ்கிறார். மலை மீது தோன்றும் அருவி மாடத்தின் மீது அசைந்தாடும் துகிற் கொடிபோல் அவருக்குத் தோன்றுகிறது; பிறகு அவ் வருவியை ஒரு வள்ளலாகக் காண்கிறார். வள்ளல் தன்னுடைய செல்வங்கள் அனைத்தையும் இல்லாதவர்களுக்கு நல்கி அவர்களை வாழ வைக்கும் பண்பினன் ஆவன். அவ்வள்ளலைப் போலவே அருவி காட்டிலுள்ள பொன்னும் மணியுமாகிய "கொழு நிதிக் குப்பை" யைக் கவர்ந்து சென்று நாட்டவர்க்கு நல்கியது என்கிறார் திருத்தக்க தேவர். நாட்டவர் அனைவருக்கும் அச் செல்வங்களை அது நல்குவதாக அவர் கூற வில்லை. அந் நாட்டில் பெரும்பாலோர் மிக்க முயற்சி யுடையவர். தம் இடையரு முயற்சியால் ஈட்டுகின்ற பொருளையே பொருளாகக் கருதும் பான்மையினர் அவர்கள். தம் முயற்சியின்றி வருவனவற்றையும் பிறரிட மிருந்து ஏற்பன வற்றையும் அவர்கள் இழிவாகக் கருதுபவர்கள். எனவே அருவி தருகின்ற பொன்னையும் மணியையும் அவர்கள் பொருட்படுத்துவ தில்லை. அவற்றைப் பெற்றுப் பயன் பெறுபவர் "உள்ளமில்லவர்" களே என்கிறார் ஆசிரியர். அந்நாட்டில் சிறிதும் முயற்சி யின்றி மடிந்து கிடந்தவர்களே அருவி தந்த பொன்னையும் மணியையும்கொண்டு வாழ்ந்தனர். அப் பொன்னையும் மணியையும் அவர்களே தேடிச் செல்வ தில்லை. அவர்கள் பெருத்த சோம்பேறிகள் அல்லவா? அவற்றைத் தேடிச் செல்வதற்குரிய சிறு முயற்சி கூட அவர்களுக்கு இல்லை. எனவே அருவியே அவர்களிடம் பொன்னையும் மணியையும் சேர்த்தது.

*"வள்ளற் கைத்தல*
*மாந்தரின் மால்வரைக்*
*கொள்ளை கொண்ட :*
*கொழுநிதிக் குப்பையை*
*உள்ளம் இல்லவர்க்(கு)*
*ஊர்தொறும் உய்த்துராய்*
*வெள்ளம் நாடு*
*மடுத்து விரைந்ததே"*

என்று தேவர் பாடுகிறார். இங்ஙனம் அருவியானது மடிந்திருப் பவர்களிடம் மிக்க செல்வங்களைச் சேர்த்து "இனியேனும் நீங்கள் சோம்பலின்றி என்னைப் போன்று முயற்சியோடு பொருளை ஈட்டி இல்லாதவர்களுக்கு உதவு வீர்களாக!" என்று அவர்களுக்கு அறிவுறுத்திச் செல்வது போல அவ்வருவி ஊரெங்கும் பரவியது என்ற குறிப்புப் பொருளும் இப் பாடலில் அமைந்துள்ளது.

இனி, ஏமாங்கத நாட்டு மக்கள் தம் முயற்சியால் பெருக்கிய வளப்பத்தைக் காண்போம். இவ்வுலகின் பல்வகைத் தொழில்களுள்ளும் உழவுத் தொழிலே தலையாயது என்பதைக் கூற வேண்டுவ தில்லை. 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றும் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றும் உழவுத் தொழிலைத் திருவள்ளுவர் சிறப்பிக்கின்றார். இடையறாது உழைத்து உணவுப் பொருள்களை உண்டாக்கி உலகைப் பரப்புவர்கள் உழவர்களே. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று மணிமேகலை பாடுகின்றது. இவ்வுலக மக்களுக்கு உண்மையில் உயிர் கொடுப்பவர்கள் உழவர்களே என்பதில் ஐயமுண்டோ?

ஏமாங்கத நாட்டில் வெள்ளக் கணக்கான மாந்தர்கள் இச்சீரிய உழு தொழிலைச் செய்தனர். மலையினின்றும் இழந்த அருவி அந்நாட்டின் ஊர்தோறும் பரவிப் பாய்ந்தது. அந்நீரின் பேரொலியும், அதைப் படலிட்டுக் காக்கும் பல்லாயிரவரின் முழக்கமும் வெள்ளப் பெருக்கைக் கண்டு உள்ள

மகிழக் கொட்டப் பெறும் பறையொலியும் இடியொலி போலவும் கடலொலி போலவும் எல்லாத் திசைகளிலும் நிறைந்தன. உழவர்கள் எருமைகளையும் எருதுகளையும் தம் ஏர்களில் பூட்டி நிலங்களை உழுது விதைத்தனர். உழத்தியர்கள் மிக்க ஆரவாரத்தோடு நாற்றுக்களை நட்டனர். அவர்களிட்ட ஓசையை மேகத்தின் முழக்கமென மயில்கள் கருதி மகிழ்ந்தன. ஆனால் குயில்கள் மாரிக்காலம் வந்து விட்டதென மயங்கிக் காதலரைப் பிரிந்த மாதரைப் போல் சோலையில் ஒடுங்கிக் கிடந்தன.

உழத்தியர்கள் தம் உழவர்களுக்கு அடிக்கடி ஊக்க மூட்டினர். அவர்கள் தம் கைகளால் மதுவை முகந்து உழவர்களுக்கு வார்த்துக் களிப்பூட்டினர். அன்பிற்குரிய மகளிர் எப்பொருளைத் தரினும் அது பெருமகிழ்வு ஊட்டுமன்றோ? அவர்கள் களிப்பூட்டும் கள்ளை வார்த்தனர் எனின் அஃது உழவர்களுக்கு எவ்வளவு இன்பத்தைத் தந்திருக்கும்! திருத்தக்க தேவர் இக்காட்சியை ஒரு பாடலில் மிக நயம்படத் தீட்டியுள்ளார். உழத்தியர்கள் வார்த்த மதுவை உழவர்கள் உண்ணுந்தோறும் சிறிதளவு கீழே சிந்தியது. இங்ஙனம் சிந்திய மது ஓரிடத்தில் தேங்கி நின்றது. அதை ஓர் இள அன்னம் பருகிற்று. பருகியதும் அதற்கு மயக்கம் மிகுந்தது. அது காம அனுபவம் மிகுந்ததொரு அன்னம். ஆதலின் அதற்கு இப்போது மது வெறியினாலே காமவெறி மிகுந்தது. அருகில் அம்மட அன்னம் ஓர் இளம் நாரையைக் கண்டது. உடனே அந்நாரையை அணுகிச் சேர்ந்து இன்பம் நுகர்ந்தது. அக்காட்சியை அங்கிருந்த பெண் மயில் ஒன்று தன் ஆண் மயிலுக்குச் சுட்டிக்காட்டி "நீ இங்ஙனம் மது அருந்தி மயங்கி இத்தகைய தவறான ஒழுக்கத்தைச் செய்தல் கூடாது" என்று அறிவுறுத்தியது;

இக்கற்பனை வாயிலாகக் கள்ளினால் ஏற்படும் தீமையைத் திருத்தக்க தேவர் விளக்குகிறார். கள் காமத்தை மிகுவிக்கும் என்றும், அது மதியை மயக்கும் தன்மையுடையது என்றும் இதன்கண் புலப்படுத்தப் படுகின்றன. அன்னத்திற்கும் நாரைக்கும் உருவத்தில் எவ்வளவு வேறுபாடு! எனினும் அன்னம் மது உண்ட மயக்கத்தால் நாரையைத் தன்னினம் எனக் கருதிச் சேர்ந்தது எனின் கள் அதை எவ்வளவு மயக்கி இருக்கவேண்டும்! மது உண்டவர்கள் அது தம்கண் விளைக்கும் விபரீதங்களை உணர முடியாது. அவர்களைக் காண்கின்றவர்களே அவற்றை வெளிப் படையாகக் காண இயலும். கள்ளுண்டு மயங்கிய அன்னத்தைக் கள்ளுண்ணாத மயில்பெடை கண்டு தன் ஆண்மயிலைத் தெருட்டியது.

> "கள்ளுண்ணுப் போழ்தில்
> களித்தானைக் காணுங்கால்
> உள்ளான்கொல் உண்டதன்
> சோர்வு"

என்ற இக்குறளின் கருத்து இக்கற்பனையில் அமைந்திருப்பதை உணரலாம்.

ஏமாங்கத நாட்டு வயல்களில் நெற்பயிர்கள் தழைத்து வளர்ந்து கருமுற்றிக் கதிர்களை ஈன்றன. கதிரீன்ற பயிர்களின் நுனிகள் நேராகவே நின்றன. நற்பண்பு இல்லாதவர்கள் பெருஞ் செல்வம் பெறுவார்களானால் அவர்கள் யாருக்கும் தலைவணங்காமல் செருக்கி இருப்பர் அல்லவா? கதிரீன்ற நெற்பயிர்கள் தம் தலையை நேரே நிறுத்தி யிருக்கும் காட்சி பண்பற்ற செல்வர்கள் செருக்கி இருப்பது போலத் தோன்றியது. கதிர்கள் முற்றியவுடன் பயிர்கள் தம் தலையைச் சாய்த்தன. சிறந்த கல்வியாராய்ச்சி யுடைய சான்றோர்கள் அடக்கமுடையவர்களா யிருப்பர். அவர்கள் யாவருக்கும் தலைவணங்கிப் பணிவுடன் ஒழுகுவர். முற்றிய கதிர்களோடு தலை சாய்ந்து நிற்கும் பயிர்கள் இங்ஙனம் அடக்கமுடைய சான்றோர் போலக் காட்சிதரும் என்பர் ஆசிரியர்.

இன்னும் கரும்புகள் திரட்சி யுடையவையாய்க் கழனிகளில் காடுபோல் அடர்ந்து

வளர்ந்தன. உழவர்கள் மதுவுண்டு பிறை போலும் வளைந்துள்ள அரிவாளைக் கையி லேந்தி முற்றிய பயிர்களை அரிவர். அறு வடை செய்த பயிர்களை இளைஞர்கள் சுமந்துசென்று களங்களில் போர்ப்போரா கக் குவிப்பர். இந் நெற்போர்கள் மிக உயர்ந்து விண்ணிலே உலாவும் முகிற் படங்களைத் தடுக்கும். பின்பு உழவர்கள் எருமைக் கடாக்களைக் கொண்டு போரடிப் பர். போரடித்து நெற்களைக் குவியலாகக் குவிப்பர். அக் குவியல் ஒரு பொன் குன்று போலக் காட்சி யளிக்கும்.

இன்னும் உழவர்கள் கரும்புகளை அரிந்து ஆலைகளில் இடுவர். ஆலை எங் கும் சாறு ஆருகப் பெருகும். வந்தவ ரெல்லாம் சாற்றை வேண்டிய அளவு பருகு வர். எஞ்சிய சாறு காய்ச்சப்படும். காய்ச்சும்போது புகை மேலெழுந்து விண் ணெங்கும் பரந்து செல்லும். அப்புகையி ஞல் கதிரவனும் சிவந்து தோன்றுவான்.

இன்னும் பல்வகை வளங்களால் ஏமாங் கத நாடு சிறந்த தென்பர் திருத்தக்க தேவர். அந் நாட்டில் நன்ருகக் காய்த்து வானுற ஓங்கி வளரும் தென்னை மரங்கள் மிகப் பல. ஒரு மரத்தி லிருந்து ஒரு தேங் காய் கீழே விழுமாயின் அது அருகே பாக்குமரத்தி லுள்ள தேனிருலைக் கீறிப் பலாமரத்தி லுள்ள பலாப் பழம் ஒன்றைப் பிளந்து, மாமரத்தி லுள்ள மாங்கனிகளைச் சிதறிப் பிறகு வாழை மரத்தின்மீது பட்டு வாழைப் பழங்களை உதிர்க்குமாம்.

*"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்*
*கமுகின் நெற்றிப்*
*பூமாண்ட தீந்தேன் தொடைகீறி*
*வருக்கை போழ்ந்து*
*தேமாங் கனிசிதறி வாழைப்*
*பழங்கள் சிந்தும்*
*ஏமாங் கதமென் றிசையால்திசை*
*போய துண்டே"*

இதனின்றும் தள்ளா விளைபொருளால் தலைசிறந்து விளங்கியது ஏமாங்கத நாடு என்பது வெள்ளிடைமலை.

இவ்வாறு உழவர்கள் பலவகையான விளைபொருள்களை உண்டாக்கி வண்டி களில் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப் பினர்.* தாம் உண்டாக்கிய உணவுப் பொருள்களைத் தாமே பெற்றுத் திளைக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கம் அவ் வுழவர்களுக்கு இல்லை. தம் உழைப்பால் உண்டான பொருள்களை உலகம் பெற்று வாழவேண்டும் என்ற உயரிய நோக்கம் உடையவர்கள் உழவர்கள். எனவே, அவர்தம் விளைபொருள்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப் பட்டன. இத ஞல் வாணிபம் வளர்ந்தது; செல்வம் பெருகியது; எங்கும் பொன்னும் மணியும் கொழித்தன. அனைவரும் வேண்டிய பொருளை வேண்டியாங்குப் பெற்று இன் பம் எய்தினர்.

நீல மலர்போலும் அழகான கண் ணுடைய அந்நாட்டு இள மகளிர் நீராடக் குளத்திற்குச் செல்வர். அவர்கள் பாலாவி யைப் போன்ற மென்மையான ஆடைகளை அணிந்தவர்கள். அதோடு பொன்ஞலும், மணியாலும் செய்யப்பட்ட விலையுயர்ந்த மேகலாபரணங்களைத் தம் இடையில்

---

* மல்லலந் தெங்கிள நீர்செய் பண்டியும்
மெல்லிலைப் பண்டியும் கமுகின் மேதகு
பல்பழுக் காய்க்குலை பெய்த பண்டியும்
ஒல்குதீம் பண்டம்பெய் தொழுகும் பண்டியும்

கருங்கடல் வளர்தரக் கரையும் பண்டியும்
நெருங்குபு முதிரையி னிறைந்த பண்டியும்
பெருங்கவிப் பண்டிகள் பிறவுஞ் செற்றுபு
திருந்தியெத் திசைகளுஞ் செறிந்த என்பவே

பூண்டவர்கள்; இவர்கள் களிப்பால் நீரில் குதித்து விளையாடுவர். இளங் காரிகையர் ஒருசிலர் விளையாட ஒன்றுகூடினால் அவர்கள் களிப்பினை அளவிட ஒல்லுமோ? அம் மகளிர் நீரில் இங்குமங்கும் குதித்து விளையாடும்போது அவர்கள் அணிந்திருந்த மேகலாபரணங்கள் அறுந்து நீரில் விழுந்து விடும். அம்மகளிர் அவற்றை எடுக்காமலேயே போய்விடுவர். அம் மேகலாபரணங்கள் அவர்களுக்குப் பெரிதல்ல; அவர்கள் அத்துணைச் செல்வம் படைத்த செல்வியர். மற்றவர்களும் நீரிலே மிதக்கும் அவ் வாபரணங்களைப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் அந்நாட்டில் அனைவரும் செல்வர்கள். எனவே வானிலே விண்மீன்கள் ஒளிர்தல் போலக் குள முழுமையும் மேகலாபரணங்கள் நிறைந்து மிளிரும்.

*''காவி யன்ன கண்ணினார்*
*கயந்தலைக் குடைதலின்*
*ஆவி யன்ன பூந்துகில்*
*அணிந்த அல்குற் பல்கலை*
*கோவை யற்(று) உதிர்ந்தன*
*கொள்ளுநீர ரின்மையின்*
*வாவி யாவும் பொன்னணிந்து*
*வானம் பூத்த தொத்தவே''*

இவ்வாறு ஆசிரியர் ஏமாங்கத நாட்டுச் செல்வச் சிறப்பினை ஓதுகின்றார்.

அந்நாட்டில் எங்கும் செல்வம் நிறைந்திருந்தமையால் அஃது ஒப்பற்ற ஓர் இன்ப நாடகமாவே திகழ்ந்தது. விண்ணுலகமே இம்மண்ணுலகில் வந்து பொருந்தியதோ என்று கண்டோர் வியக்கும் வண்ணம் ஏமாங்கத நாடு இன்பம் நிறைந்து விளங்கியது என்பர் ஆசிரியர். அந்நாட்டு மாந்தர் அனைவரும் பல்வகை இன்பங்களைச் செவ்வையாகத் துய்த்து மகிழ்ந்தனர். யாவரும் நன்னெறி நின்று ஒழுகினர். வாழ்க்கை வசதிகளில் குறைபாடு இருந்தால்தான் ஒழுக்கத்திற்கு இழுக்கு நேரக் கூடும். இன்ப வாழ்க்கைக்கு வேண்டியவை அனைத்தையும் அனைவரும் பெற்றிருந்தமையால் அவரவர் தத்தம் ஒழுக்கத்தில் தவறுது நின்று தக்காராய் ஒழுகினர். அந்நாட்டில் வீடு பேற்றை விரும்பித் தவம் மேற்கொண்டவர் தவம் செய்தனர். இல்லறம் நிகழ்த்த விரும்பியவர் இனிதே இல்லறம் நிகழ்த்தினர். நிலைத்த செல்வமாகிய கல்வியைப் பெருக்க விழைந்தவர் நன்கு கற்று அறிவைப் பெருக்கினர், நிலையாத பொருட் செல்வத்தைப் பெருக்க விரும்பியவரும் அதைப் பெருக்கினர். இங்ஙனம் எத்தகைய ஒழுக்கமுடையவர்க்கும் ஏமாங்கத நாடு தக்க இடமாக நின்று ஏனைய பல நாடுகளால் சூழப்பட்டு விளங்கியது.

*நற்றவஞ் செய்வார்க்(கு)*
*இடம்தவஞ் செய்வார்க்கு(ம்)*
*அஃதிடம்*
*நற்பொருள் செய்வார்க்கு(ம்)*
*இடம்பொருள் செய்வார்க்கு(ம்)*
*அஃதிடம்*
*வெற்ற இன்பம்*
*விழைவிப்பான் விண்ணுவந்(து)*
*வீழ்ந்தென*
*மற்ற நாடு*
*வட்டமாக வைகுமற்ற*
*நாடரோ*

ஏமாங்கத நாட்டில் அவரவர் விரும்பும் செயலையும் ஒழுக்கத்தையும் மேற்கொள்ள உரிமை இருந்தது என்பது இப்பாட்டிலிருந்து விளங்குகிறது. மக்களுக்குப் பல்வகை உரிமைகளை நல்குகின்ற நாடே நாகரிகம் சிறந்த நாடாகும். ஒருநாட்டில் அவரவர் அறிவிற்கும், கருத்துக்கும், ஆற்றலுக்கும், பண்பிற்கும் ஏற்ற செயலைகளை மேற்கொள்ள உரிமை வேண்டும். அவ்வுரிமை இருந்தாலன்றி உலகம் ஓங்காது. மக்களுக்கு உரிமைகளைக் குறைத்து அவர்களை அடக்கி, ஒடுக்கி ஆளுகின்ற நாடு நாளடைவில் அழிவு பெறுமேயன்றி ஆக்கம் பெறுது. ஏமாங்கத நாடு மக்களுக்குப் பல்வகை உரிமைகளை நல்கி ஆக்கம் பெற்று அவனியிலே ஒப்பற்ற நாகரிக நாடாக விளங்கியது.

—★—

# வினாக்களும் விடைகளும்

*பூவிலிருந்து காய் தோன்றுகிறது. ஆனல் அத்தி பூவாமல் காய்க்கும் மரம். பூவில்லாமல் காய் எங்ஙனம் தோன்றக் கூடும்?*

அத்தியின் இனத்தைச் சேர்ந்தவையே ஆலும், அரசும். அவற்றின் பழங்கள் ஒத்த அமைப்புடையவை. பழத்தின் மேற் பகுதி சதைப் பற்றுடையதாயும் அத னுள்ளே சிறு விதை போன்ற அமைப்புக் களையும் காண்கிறோம். பழத்தின் மேலே ஒரு சிறு துவாரம் இருக்கும்.

அத்தி 'காய்த்'திருக்கும் ஆரம்பத்தில் கவனித்தால் 'காயி'னுள்ளே, பல சின்னஞ் சிறு பூக்கள் இருப்பதைப் பார்க்கலாம். இவற்றுள் ஆண் பூக்கள் சில, பெண் பூக் கள் சில. சிறு பூச்சிகளின் உதவியால் மகரந்தச் சேர்க்கை ஏற்படுவதற்குச் சாதக மாக மேலே துளை இருக்கிறது. மகரந்தச் சேர்க்கைக்குப் பின்னர் பெண் பூக்கள் விதைபோன்ற அமைப்புக்களாக மாறு கின்றன. உண்மையில் இவை சிறு காய் களே. இவை அகீன்ஸ் (achenes) எனப் படும். அத்திப் பழம் பல நுண்ணிய பூக் களின் கொத்து அல்லது தொகுப்பாகும். பூங்கொத்தின் காம்பு (peduncle) சதைப் பற்றோடு கூடியதாகக் குழிந்து உருண்டு உள்ளே பூக்களை மறைத்துக்கொண் டிருக் கிற தென்பது பொருந்தும்.

** ** **

*மாங்காயின் புளிப்புக்குக் காரணம் அதிலுள்ள அமிலம். மாங்காய் பழுத் தால் இனிக்கிறது. இது எப்படி?*

மாங்காய் புளிக்கிறது. எல்லாக் காய் களும் புளிக்க வேண்டு மென்ப தில்லை. வேப்பங்காய் கசக்கிறது; சப்போட்டாக் காய் ஒரே துவர்ப்பாக இருக்கிறது. இவை யாவும் பழுத்தால் இனிக்கின்றன. புளிப்பு, கைப்பு, துவர்ப்பு இவற்றுக்குக் காரண மான பல பொருள்களும் பழம் கனியும் போது பழச் சர்க்கரையாக மாற்றப் படுவ தால் பழம் இனிக்கிறது. இதோடு பழத் திற்குப் பழம் தனி மணம் தரும் பல பொருள்கள் ஏற்றபடி அமைந்து சுவை ஊட்டுகின்றன. விதைகள் முழு வளர்ச்சி அடையும்வரை விட்டுவைக்க இயற்கை கையாளும் ஒரு உபாயமே இது.

இனிப்பாக மாறுவது கிடக்கட்டும். மண்ணிலே சில உப்புக்கள் இருக்க, நீரை யும் காற்றையும் கொண்டு மா, பலா முத லான பல்வேறு மரங்களும் அந்த அந்தக் கனிகளையே உற்பத்தி செய்கின்றன. இதே பொருள்களைக் கொண்டு சாதாரண வெப்ப, அழுத்த நிலைகளில் எந்த இயந் திரத்தாலும் மனிதன் இவற்றின் இயற் கைச் சுவைக்கு இணையாக ஒன்றைச் செய்யமுடியுமா? தாவரங்களின் உயி ரணுக்கள் சாதிக்கும் சித்துக்களை இன்னும் ஆராய்ந்துகொண்டுதா னிருக்கிறார்கள்.



# மக்கள் கை

**

*திரு. ம. ரா. செயா பூபதி, M. A.*

இயற்கையில் உருவாகி யுள்ள வியப்பூட்டும் பொருள்களுள், நம் கைகளும் ஒன்று. உலகத்தில் வாழ்க்கை நடத்தும் எல்லா உயிர்களுக்குள்ளும், மனிதனே நாகரிகம் அடைந்த பிராணியாகி விளங்குவதற்கும் இக் கைகளே காரணம்! மனிதன் கையைப் போன்று மிகமிக எளிய– ஆனல் மிகமிகத் திறமை வாய்ந்த— ஒரு பொறியைக் (Machine) கண்டு பிடிப்பது செயற்கரும் செயலாகும் என்று தற்காலப் பொறியியல் வல்லுநர் (Engineers) உரைக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக ஒன்றை நோக்குவோம். நீங்கள் இப்போது இக் கலைக் கதிர் இதழைக் கையில் ஏந்தியுள்ளீர்கள். உங்கள் கைகள் நீங்கள் படிக்கக் கூடிய நிலையில், எளிமையாக இதழைப் பிடித்துக் கொண்டு இருக்கின்றன. படிப்பதற்கு வேண்டிய வெளிச்சம், உங்கள் கண் பார்வையின் அளவு– இவற்றிற்கு ஏற்றவாறு உங்கள் கைகள் இதழைப் பிடிக்கின்றன. நீங்கள் ஓர் ஏட்டினைத் திருப்பும் போது, உங்கள் விரல்கள் அவ் ஏட்டுக்கு அடியில், கண்ணுக்குத் தெரியாமல், உங்களுக்கும் தெரியாமல், நுழைகின்றன; எவ்வளவு அழுத்தத்தைப் பயன் படுத்த வேண்டுமோ, அவ்வளவு அழுத்தத்தையே பயன் படுத்தி, வேலை முடிந்ததும் தம் பிடியை விட்டு விடுகின்றன. இவ்வளவு நுட்பமான வேலையை எந்த இயந்திரத்தால் செய்ய இயலும்?

நம் கைகள் இன்னும் எவ்வளவோ வேலைகளைச் செய்கின்றன. உடைகளுக்குப் பொத்தான்கள் பொருத்தல், பெட்டிகளைத் தூக்கல், உணவை எடுத்தல், கத்திகள் பிடித்தல், துணிகள் தைத்தல், கடிதம் எழுதல் — இப்படிப் பல வகைப் பட்ட பணிகளை நம் கைகள் நாள்தோறும் செய்து வருகின்றன. லாசு ஏஞ்செல்சல்சு (Los Angeles) கலி∴போர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூடத்தில், ஒரு சாதாரண மனிதன் தன்னுடைய கைகளைக் கொண்டு 1000 வகைப் பட்ட தனித்தனி வேலைகளைச் செய்கின்றான் என்ற உண்மை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

நம் உடம்பின் மற்ற உறுப்புக்களை விட நம் கைகளை நாம் அடிக்கடி கண்ணல் பார்க்கிறோம். என்றாலும் நம் இருதயம், மூளை, மற்ற உறுப்புக்கள் ஆகியவற்றைப் பற்றி நாம் அறிந்துள்ளதை விட, செயல் திறமை மிக்க— 27 எலும்புகளும் 19 தசைகளும் கொண்ட— நம் கைகளைப் பற்றிக் குறைவாகவே அறிந்துள்ளோம்.

இப்போது, மனிதனுடைய கைகளைப் பற்றி விஞ்ஞானியர் எவ்வளவு அறிந்துள்ளனர் என்பதைப் பார்ப்போம்.

## கையும் பண்பும்

ஒருவனுடைய கைகளைக் கொண்டு அவன் பண்புகளை ஓரளவுக்கு அறிதல் கூடும் என்று சிகாகோ நகரைச் சேர்ந்த டாக்டர் சீமன் (Dr. J. Scheimann) என்பவர் கூறுகிறார். என்றாலும் இவர் கூற்றைப் பல விஞ்ஞானியர் ஏற்றுக்கொள்ள வில்லை. நடு விரலின் நீளத்துக்கும், உள்ளங் கையின் நீளத்துக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட தொடர்பு இருக்கின்றது என்பது டாக்டர் சீமனின் கருத்து.

நம் கையின் நடுவிரலின் நீளம் உள்ளங்கை நீளத்தை விடக் குறைவாக இருந்தால், நாம் உடல் நலத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ்வோம் என்று டாக்டர் சீமன் கூறுகிறார். இத்தகைய கைகளை உடையவர்கள் திடீரென்று நினைப்பது, திடீரென்று செயலாற்றுவது என்று இருப்பார்களே ஒழியே, தீர எண்ணிப் பார்த்துச் செய்வதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். ஆனால், ஒருவருடைய நடு விரலின் நீளம், உள்ளங்கை நீளத்தை விட மிகுதியாக இருந்தால், அவர் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பவராக– உணர்ச்சி மிக்கவராக– தனிமையையும், மறைவையும் விரும்புவராக இருப்பார். நடு விரலின் நீளமும், உள்ளங்கை நீளமும் ஏறக்குறைய ஒன்றாக இருந்தால், பண்பிலும், மனப்பான்மையிலும் ஒரு வகை நடு நிலைமையைக் காணலாம்.

கை விரல்களின் வளையும் தன்மையைக் (Flexibility) கொண்டும், ஒருவனுடைய பண்புகளை அறிய முடியும் என்றும் டாக்டர் சீமன் கூறுகிறார். விறைப்பான விரல்களை உடையவர்கள் மற்றவருடன் மிகுதியாகப் பழக மாட்டார்கள்; தற்பெருமைப் பண்பு உடையவர்கள்; பிற்போக்கும், பிடிவாதமும் நிறைந்தவர்கள்; மற்றவர்க் கேற்ப மாறி யமையாதவர்கள். நன்றாக வளைந்து கொடுக்கும் விரல்களைப் பெற்றவர்கள் ஒத்துழைக்கும் மனப் பான்மையும், செயல் தந்திரமும் உடையவர்கள்.

## கையும் நோயும்

நம் கைகளின் தோற்றத்தைக் கொண்டு மருத்துவர்கள் நம்முடைய உடல் நிலையைப் பற்றி எவ்வளவோ அறிந்து கொள்ளலாம் என்று கலிஃபோனியா பல்கலைக் கழக மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் கோர்டான் இ. ஹீன் (Dr. Gordon E. Hein) என்பவர் கூறுகின்றார். அளவுக்கு மீறி வளர்ந்துள்ள கைகள் பிட்டியூட்டரி சுரப்பியில் (Pituitary - Gland) உள்ள நோய்களைக் குறிப்பன ஆகும். புறங்கையில் கொழுப்பு மிகுதியாக இருத்தல், வெளிறித் தோன்றல், வறட்சி, குளிர்ச்சி ஆகியவை தைராய்டு (Thyroid) குறைவுகளை உணர்த்துவன. உள்ளங்கை மஞ்சளாகத் தோன்றல், ஒரு புதுமையான தோல் நாற்றம், இவை இருந்தால் டைப்பாய்டின் (Typhoid) அறிகுறிகள்.

நியூ யார்க்கில் வாழும் இருதய வல்லுநரான டாக்டர் சில்வர்மன் என்பவர், கைகள் நடுங்கும் அளவைக் கொண்டும், வேர்க்கும் அளவைக் கொண்டும் இருதயத்தில் உள்ள நோயை உணரமுடியும் என்று கூறுகிறார். இவற்றைத் தெளிவாக உணர அவர் சில நுட்பமான கருவிகளையும் கண்டு பிடித்துள்ளார்.

## இடக்கை, வலக்கை

மக்களில் பலர் வலக் கையராகவும், சிலர் இடக் கையராகவும் உள்ளனர். இதற்குரிய காரணத்தை விஞ்ஞானியர் இன்னும் தெளிவாக அறிய வில்லை. வலக்கை வழக்கம், பழக்கத்தால் ஏற்படுவதே யாகும் என்று சிலர் கூறுகின்றனர். குழந்தை முதலில் வலக் கையைக் கொண்டே வேலை செய்யக் கற்றுக் கொடுக்கப் படுகிறது; வலக் கையிலேயே பந்து எறியப் பழக்கப் படுகின்றது. மற்றும் சிலர் இடக்கை, வலக்கை வழக்கம் பரம்பரையைப் பொறுத்து அமைவது என்று எண்ணுகின்றனர். பெற்றோரில் யாராவது இடக் கையராக இருந்தால், அவர்கட்குப் பிறக்கும் குழந்தை இடக்கைக் குழந்தையாக மாறலாம் என்று இவர்கள் கருதுகின்றனர்.

மக்களுக்கு இருதயம் இடப் புறத்தில் அமைந்துள்ளது. இதைச் சரி செய்ய மக்களில் பெருபாலோர் வலக் கையராக இருக்கின்றனர் என்பது வேறு சில விஞ்ஞானியர் கொள்கை. இன்றும் சிலர் தொடக்க

காலத்தில் அடிக்கடி ஏற்பட்ட போர்களின் விளைவாக மக்களில் பெரும்பாலோர் வலக் கையராகி விட்டனர் என்று காரணம் கூறுகின்றனர். தொடக்க கால வீரர்கள் இடக்கைகளில் கேடயங்களை ஏந்தித் தம் உடலில் காயங்கள் ஏற்படுவதைத் தடுத்தனர்; வலக் கைகளிலேயே தடிகள், வாள்கள், ஈட்டிகள் முதலியவற்றை உயர்த்திப் போரிட்டனர்.

உலகில் வாழும் மக்களுள், ஆண்களில் நூற்றுக்கு 6.6 பேரும், பெண்டிரில் நூற்றுக்கு 3.8 பேரும் இடக்கை வீரராக இன்று காட்சி யளிக்கின்றனர்!

## கையின் உயர்ச்சி

மனிதன் திறமை மிக்க கண்களையும், காதுகளையும், மூக்கையும் பெற்றுள்ளான் என்பது உண்மையே. ஆனால் இவற்றை நம்மைப் போலவே வேறு பிராணிகளும் பெற்றுள்ளன என்று தொல்லுயிர் ஆராய்ச்சி யாளர்கள் (Anthropologists) கூறுகின்றனர். பின், மனிதன் எப்படி மற்ற பிராணிகளை விட உயர்ந்தவன் ஆனான்? கைகளாலேயே என்று சொல்லலாம்.

கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலேயே, மனிதன் கைகளைப் பெற்று விட்டான். முன்னங் கால்களுக்கு மாறாக, அவனுக்குக் கைகள் உண்டான போது, அவன் மூளையிலும் குறிப்பிடத் தக்க வளர்ச்சி ஏற்பட்டது. சிறப்பாக, நெற்றிக்குப் பின்புறம் உள்ள பகுதி நன்றாக வளர்ந்தது.

குரங்குகளுக்கும், வாலில்லாக் குரங்குகளுக்குங் கூடக் கைகள் உள்ளன. என்றாலும் அவை எல்லாம் மதிதனுடைய கைகளைப் போன்றவை அல்ல. நாம் விலங்குகளை விட உயர்ந்து விளங்குவதற்கு இதுவும் ஒரு காரணம். மனிதன் கைகள் "எதிர்ப் பெரு விரலை"ப் பெற்றிருக்கின்றன என்று தொல்லுயிர் ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர். "எதிர்ப் பெரு விரல்" என்பதற்கு எப்படி வேண்டுமானாலும் சுழலும் பெரு விரல் என்று பொருள் கூறலாம். நம் கைப் பெரு விரல் கையில் உள்ள மற்ற நான்கு விரல்களில் எதை வேண்டுமானால் எளிதாக அழுத்திப் பிடிக்கும். இப்பண்பு, பலவகைப் பொருள்களையும் அழுத்திப் பிடிக்கவும், கையாளவும், ஆராய்ச்சி செய்யவும் நம்முடைய முன்னோர்க்குப் பெரிதும் துணை செய்தது. வாழ்வுக்குத் தேவை யான கருவிகளை அமைத்துக் கொள்ளவும், போர்க்கு வேண்டிய படைக் கலன்களைச் செய்து கொள்ளவும் இப்பண்பே அவர்களுக்குப் பெருந் துணையாக இருந்தது.

## கைகுலுக்கல்

நாகரிக உலகில் காணப்படும் பலவகைப் பட்ட வழக்கங்களில், கை குலுக்கும் வழக்கமும் ஒன்று. இவ் வழக்கம் இடைக் காலத்தில் (Middle Ages) தோன்றியது. இடைக்கால வீரர்கள் தம் பகை யின்மையை அறிவிக்க, உறை யணியாத வெறுங் கையை நீட்டிக் குலுக்கிக் கொள்வார்கள். இது அவர்கள் அமைதி விருப்பத்தை அந்நாளில் அறிவித்தது.

இன்னும், மக்கள் தலைவர்கள் ஒருநாளில் பல முறை கைகுலுக்க வேண்டி ஏற்படுகின்றது. இடை விடாமல், எண்ணற்ற முறை கைகுலுக்க வேண்டி இருப்பதால், சில சமயம் அவர்கள் கை விரல்கள் வீங்கி விடுவதும் உண்டு. சுவீடன் நாட்டு இளவரசர் கசுடா:ப் அடால்:ப் என்பவர் உலகத்திலேயே திறமை வாய்ந்த கை குலுக்கு வீரர் என்று பெயர் வாங்கி யுள்ளார். அடிக்கடி கை குலுக்கலுககும், வலிமையோடு கை குலுக்கலுக்கும் அவர் நாடு பேர் பெற்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், இச்டாக்கோமில் பன்னாட்டுத் தாவரக் கழகத்தினரைப் பெருமைப் படுத்துவதற்காகக் கொடுக்கப் பட்ட விருந்து ஒன்றில், அவ் இளவரசு 50 நிமிடங்களில் 1256 முறை கை குலுக்கினாராம்!

## கைவளர்ச்சி

கைகள் காலப் போக்கில் பெரியனவாக வளர்ந்து செல்கின்றனவா, அல்லது சிறி யனவாகக் குறைந்து வருகின்றனவா என்ற கேள்விக்குக் கையுறை (Glove) உற்பத்தியாளர்கள் விடை கூறியுள்ளனர். ஆண்களின் கைகள் முன்பு இருந்ததை விட இப்போது குறைந்துள்ளன; ஆனால், இதற்கு மாருகப் பெண்களின் கைகள் முன்பு இருந்த அளவை விட இப்போது பெரிதாக உள்ளன.

பழங்கால ஆடவர் தம் கைகளால் செய்த வேலைகளை எல்லாம், இக்கால ஆடவர் கைகளைக் கொணடு செய்யாததே அவர்கள் கைகளின் அளவு குறைந்து விட்டதற்குக் காரணம். ஆனால், முன்பு இருந்ததை விட, இக்காலத்தில் பெண் களில் பெரும்பாலோர் தொழிற் கூடங் களில் பணி செய்கின்றனர்; மேலும், வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்கின்றனர்.

கடந்த 25 ஆண்டுகளாக, ஆண்கள் கையுறைகளின் சராசரி அளவு 10-லிருந்து 9 ஆகக் குறைந்து விட்டது; ஆனால், பெண்கள் கையுறைகளின் சராசரி அளவு 6-லிருந்து 7 ஆக உயர்ந்திருக்கிறது.

## கையும் வயதும்

வயது காரணமாகக் கைகளில் மாற்றங் கள் ஏற்படுகின்றன என்று உறுதியாகக் கூறலாம். உடலின் மற்ற உறுப்புக்களை விட, கைகள் ஒருவருடைய உண்மை வயதை எளிதாக வெளிப்படுத்தி விடுகின் றன. வயதானவர்கள் தம் தலைமயிருக்கு வண்ணம் ஏற்றிக் கொள்ளலாம்; இடைக் குக் கச்சணிந்து கொள்ளலாம்; முகத்தில் வண்ணப் பொடிகளைத் தூவிச் சுருக்கங் களை மறைக்கலாம். ஆனால் அவர்கள் தம் கைகளில் உள்ள சுருங்கிய மடிப்புவிழுந்த தோலையும், மேலே எழுந்து காணப்படும் நீல நிறமான கெட்ட குருதிக் குழல்களை யும் மற்றவர்கள் பார்க்காதவாறு மறைத்து விட முடியாது.

வயதாக ஆக, கைகளின் வலிமையும் குறைந்துகொண்டே வருகின்றது. கடற் படையிலும், தொழிற்கூடங்களிலும் வேலை செய்கின்றவருள் சுமார் 1,000 பேர்களின் கைகளில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. முடிவில் 25 வயதுடைய ஒருவன் கைக்கு எவ்வளவு வலிமை இருந்ததோ, அவ் வளவு வலிமையில் நூற்றுக்கு 84 பங்கே, ஒருவனுக்கு 60 வயதாகையில் அவன் கைக்கு இருக்கின்றது என்பது விளங் கியது.

## செயற்கைக் கை?

மனிதன் விஞ்ஞான அறிவு இன்று எவ் வளவோ வளர்ந்துள்ளது; பொறிகளை அமைப்பதிலும் அவன் எவ்வளவோ ஆற் றலைப் பெற்றிருக்கிருன். இத்தகைய மனி தன், தன் கையைவிடச் சிறந்ததொரு கருவியைக் கண்டுபிடிக்க முடியுமா?

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும், பொறியியல் – உளவியல் வல்லுநரும் ஆகிய டாக்டர் கிரேக் டெய் லர் (Craig Tailer) என்பவர் இயற்கைக் கைகள், செயற்கைக் கைகள் ஆகியவற் றைப் பற்றி மிகுந்த ஆராய்ச்சிகள் நடத்தி யுள்ளார். அவர் பின்வருமாறு கூறுகிருர்.

''மணிக்கட்டின் அசைவுகள், விரல் அசைவுகள் ஆகியவற்றைக்கொண்ட ஒரு செயற்கைக் கையை உருவாக்குவது எளிய செயலாகத் தோன்றலாம். ஆனால் இன்றுவரை அத்தகைய செயற்கைக் கையை உருவாக்குவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தும் வீணுகவே போய் விட்டன. எல்லையற்ற பயன், ஆற்றல், அழகு ஆகியவற்றை உடைய மனிதனின் இயற்கைக் கைகளுக்கு முன்னுல், அவ னுல் உருவாக்கப்படும் செயற்கைக் கை கள் நிற்கவே இயலாது!''





# உள்ளத்தின் உண்மை

திரு. T.E. சண்முகம் M.A., M.Litt.

குறிப்பு:- மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனுகும். உள்ளத்தைப்பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப்பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெரு. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும், முழு முகவரியையும் குறித்து "ஆசிரியர், கலைக்கதிர், பூலைமேடு, கோயமுத்தூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்."

*திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிக் கலாமென்று திட்டமிட்டிருக்கிறேன். இதை வாழ்க்கையின் இறுதிவரையில் சிறந்த முறையில் கையாள முடியுமா? வயது 23.*

"பிரம்மச்சரிய"த்தைப் பற்றி(bachelor) ஆராய்ச்சி வாயிலாகக் கண்ட ஓரிரு உண்மைகளை ஈண்டுக் குறிப்பிடுகிறேம் திருமணம் என்பது எல்லா வித மக்களிடத்தும் இருந்துவரும் ஒரு வழக்க மாகும். மணமும் சடங்குகளும் மக்கள் வாழும் சமுதாயத்திற்குத் தக மாறுபடுகின்றன. அநாகரிக (Primitive) மக்களிடத்து மணம் என்பது காமத்தைப் பூர்த்தி செய்துகொள்ள ஆணும் பெண்ணும் தங்களுக் குள்ளேயே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு திட்ட மாகும்.

சமோவா (Samoa) சமுதாயத்தில் ஓர் ஆண் தனக்கு வேண்டிய பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிருன். ஒரு வாரம் அவளோடு இன்ப வாழ்வு வாழ்கிருன். வேட்டைக்குச் செல்லும்போதும், மீன் பிடிக்கப் போகும்போதும் அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்கிருன். அவர்கள் 'கணவன் மனைவி'யராக வாழ்கிருர்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் பிரிகிருர்கள். ஆண் மற்ருெரு பெண்ணை அடைகிருன், பெண் மற்ருெரு ஆணை அடைகிருள். இவ்வாறு அவர்களது 'இல்லற' வாழ்க்கை நடக்கிறது. இது போன்ற மக்களிடத்து மணம் என்பது காம இயல்பூக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் ஒப்பந்த மாகும். காமத்தைப் பூர்த்தி செய்து கொள்ள எந்தத் தடையும் அவர்கள் சமூகத்தில் இல்லாமையால் அம் மக்களிடத்து முன்கோபம், பொருமை, அச்சம் போன்றவைகள் இல்லை. இவ் வுண்மையை அறிஞர்கள் கண்டிருக்கிருர்கள்.

நாகரிக மனிதனிடத்து மணம் என்பது பல்வேறு கொள்கைகளும், மெய்ப்பாடுகளும் இயைந்த ஒரு சடங்கு ஆகும். அது ஆணையும் பெண்ணையும் ஒன்ருக இணைத்துக் காமத்தைப் பூர்த்தி செய்யவும், அதன் வழியாகப் பாரம்பரியம் வளரவும் ஏற்படுத்தப்படும் சடங்கு மட்டுமன்றி இரு குடும்பங்களையும் இணைத்து வைக்கும் ஒரு சடங்கு மாகும். மணமானது காதல், அன்பு, பொறுமை முதலிய விரும்பத்தக்க இயல்புகளும் மெய்ப் பாடுகளும் வளர்ச்சி அடைதற்குத் துணைபுரியும் ஒரு

நல்ல நிகழ்ச்சி யாகும். எனவே மணம் நாகரிக மனிதனுக்கு இன்றியமையாத தொன்று என்பது தெளிவு.

பிரம்மச்சரிய வாழ்க்கை பெரும்பாலும் உள்ள அமைதியைக் குலேக்கிறது. பிரம் மச்சரியர்கள் பிறழ்வான வழியில் காமத் தைப் பூர்த்தி செய்துகொள்ள முனைகிறார் கள். அதன் காரணமாக ஏற்படும் குற்ற உணர்ச்சியால் அவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டு உள்ள அமைதியை இழக்கிறார்கள். இந்த உண்மையை ஹாவ்லக் எல்லிஸ் (Havelock Ellis) சமயக் கட்டுப்பாட்டின் காரணமாக 'பிரம்மச்சரியர்'களாக இருந் தவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்தபோது கண்டார். சமீப காலத்தில் கின்ஸி(Kinsey) பல ஆயிரக் கணக்கான மக்களின் பால் (sex) வாழ்க்கையை ஆராய்ந்து பல உண் மைகளை வெளியிட்டார். அவைகளில் பிரம்மச்சரியர்களைப் பற்றிய உண்மைகள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| பால்குறியைத் தூண்டி இன்புறுவது (masturbation) | ... 44% |
| மிருகங்களோடு புணர்வது | ... 7% |
| ஆண் ஆணோடு புணர்வது | ... 6·7% |
| விபசாரிகளோடு புணர்வது | ... 3% |

கின்ஸி கொடுத்திருக்கும் புள்ளிவிவரங் கள் எவ்வாறு தீவிர பிரம்மச்சரியத்தைக் கையாண்டவர்கள் தங்களது காம வாழ்க் கையை நடத்துகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இத் துறையில் ஜீ. வாட்சன் (G. Watson)என்னும் உளநூ லறிஞர் ஆராய்ச்சி செய்தார். மணம் ஆனவர்கள், மணம் ஆகாதவர்களை விட இன்ப வாழ்க்கை வாழ்வதாகவும், அவர் கள் நீடித்தும், ஆரோக்கிய மானதுமான வாழ்க்கையை நடத்துவ தாகவும் அவர் கண்டறிந்தார்.

மேற்குறித்த புள்ளிவிவரங்களும் மற்ற ஆராய்ச்சி உண்மைகளும் ஒருவர் வாழ்க் கையின் இறுதிவரையில் பிரம்மச்சரிய வாழ்க்கையை நடத்த முயலுவது அவ் வளவு சிறந்த தாகாது என்பதைத் தெளி வுறுத்துகின்றன.

உடம்பில் தீராத நோய், உடற்கூறு பெண்மைத் தனம் (Physical impotency) முதலியவைகள் இருந்தால் பிறர் நன் மைக்காகப் பிரம்மச்சரியத்தை மேற்கொள் வதே நலம்.

## ரசவாதம்



இவ் வுலகத்தி லுள்ள எல்லாப் பொருள்களும் சில அடிப்படை யான மூலக்கூறுகளின் (Basic elements) கூட்டேயாம் என்று அரிஸ் டாட்டல் என்பவர் ஆராய்ந்து கூறி னார். அதற்குப் பிறகு பல நூற் றாண்டுகளாக ரசவாதிகள் தங்கத் தின் கூட்டுப் பொருள்களைக் கண் டறிய மிகவும் முயன்றார்கள்;முடிய வில்லை. எனினும் இன்னும் ரசவாதி கள் அம் முயற்சியைக் கைவிட வில்லை.

# கல்லறைக்குள்

திரு. வ. தண்டபாணி

கீழ்வானில் சந்திரோதயத்தின் கட்டியத்தை இரண்டொரு வெள்ளிக் கோடுகள் பாடிக்கொண் டிருந்தன. அந்த மங்கிய நிலவொளியில் சித்தூர்க் கோட்டை நன்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது. மேவார் ராஜ்யத்தின் அகண்ட பெருமையையும், புகழையும் கோட்டை மதில்கள் எதிரொலி செய்துகொண் டிருந்தன. சித்தூர்க் கோட்டையை முற்றுகையிட் டிருந்த டில்லி பாதுஷா அல வுத்தீன் சிந்தனை மூட்டத்துள் அழுந்திப் போயிருந்தான். சிறிது நாழிகைக்குள்—

"சித்தூர் தூதரே! அந்தச் சிரிக்கும் சிங்காரியை எனக்கு மணமகளாகத் தராவிடில் சித்தூர்க் கோட்டையல்ல. மேவார் ராஜ்யமே மண்மேடாகும் என்பது நினைவிருக்கட்டும்"

"பாதுஷா அவர்களே, பொறுமையோடு பேசுங்கள். ஆத்திரம் வேண்டாம். அவள் ராணு பீம்சிங்கின் மனைவியாயிற்றே. இது நீதி யாகுமா?"

"நீதியைப் போதிக்கவேண்டிய அளவுக்கு என் அறிவு பேதித்து விடவில்லை தூதரே!"

"பத்மினி, பத்மினி! அவள் நெஞ்சம் கணவனைத் தவிர பிற ஆடவரைக் கனவிலும் காண நினையாது. அவள் உம்மை மணக்க எப்படி ஒப்புவாள்?"

"ஒப்புதல்! ஹஹ்ஹா... பூவின் தேனை உறிஞ்சும் வண்டு, 'மலரே! உன் இதழின் மென்மையைத் துய்க்கப் போகிறேன்'; புதுமை மணத்தை நுகரப் போகிறேன்; சம்மதமா?' என்று கேட்கிறதா? பெண்கள் மதுக் குடங்கள். அதன் மனத்தை அறிந்தா மனிதன் பருகுகிறுன்?"

"அது மன்னர் வம்சத்து மரபா யிருக்கலாம். பெண்களை நம்மைப்போலவே இதயமும் உணர்ச்சியும் கொண்டவர்களாக மதிக்கிறோம் நாங்கள். ரஜபுத்ர மகளிரை நீங்கள் பிடிக்கும் 'ஹுக்கா' என்றெண்ணி விடாதீர்"

அந்தத் தூதன் சென்று விட்டான். சிந்தனை செய்தான் அலாவுத்தீன்.

"அழகின் களஞ்சியம் அவள். அவள் அழகை அள்ளிக்கொண்டா விடுவார்கள்? அவசரம் ஏன்? காலம் கடக்கட்டும்; காத்திருந்து அடைவோம்" என்ற தீர்மானத்திற்கு வந்தான். உடனே சென்ற தூதனைத் திரும்ப அழைத்தான். பணிந்து பேசுவதாகப் பாசாங்கு செய்தான்.

"தூதரே! பத்மினியின் அழகை ஒரே முறை பார்க்க வழிசெய்யும். என் மனத்தில் மூண்டுவிட்ட ஆவல் தீ அப்போது தான் சிறிதேனும் தணிய முடியும். முற்றுகையை இப்போதே முடித்து விடுகிறேன்"

சிறிது நேரச் சித்தனைக்குப் பின் சித்தூர்த் தூதன் ஒருமுறை — சில நிமிடங்கள் கண்ணுடியில் பத்மினியின் உருவத்தைப் பாதுஷா பார்க்க ஒப்பினுன்.

மறுநாள் கோட்டைக்குள் பாதுஷா அழைத்துச் செல்லப்பட்டான்; கண்ணுடியில் பத்மினியைப் பார்த்துத் திரும்பினுன் என்று சரித்திரம் சொல்லுகிறது. ஆனால்

உண்மையில் நடந்தது என்ன? **பாதுஷா பத்மினியைப் பார்க்கவே இல்லை.**

எப்படி என்கிறீர்களா ?

அன்று மாலை அலாவுத்தீன் தன் அவைக் கள ஓவியன் சர்தார் சிங்கைத் தன் தனி அறையில் அழைத்துச் சென்ருன். அவர் கள் என்ன பேசிஞர்கள் என்பதை நாம் அறிவதற்கு முன் சர்தார் சிங் யார் என்ப தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சர்தார் மேவார் நாட்டு ராஜ குடும்பத் தைச் சேர்ந்தவன். துள்ளித் திரிந்த பரு வம் முதல் நிலவையும் மலரையும் 'புரிந்து' கொண்ட பருவம் வரை அவனும் பத்மினி யும் இணைபிரியா நட்பினரா யிருந்தனர். அவர்கள் இருவருக்கு மிடையே களங்க மற்ற முழு அன்பு நிலவிற்று. ஆனல் பத்மினி சர்தாரிடம் கொண்டது அன்பின் காதல் பகுதி. சர்தாரோ பத்மினிபால் காட்டியது சகோதர பாசம். பத்மினியின் உள்ளத்தை, அதில் பதுங்கிக் கிடந்த காதல் உணர்வை ஒருவாறு புரிந்து கொண்ட சர்தார் ஒருநாள் அவளை நேரில் அழைத்து,

''பத்மினி! இளமையிலிருந்து இன்று வரை என் தங்கையுடன் பழகுவதுபோல் உன்னிடம் நடந்துகொண்டேன். இறந்து போன என் தங்கைக்குப் பதிலாக என் அன்பு, பாசம், உணர்வு அத்தனையும் உன் மேல் சொரிந்தேன். இத்தனை நாளாக என் தங்கையாகப் பழகிய உன்னை இப் போது மனைவியாக எப்படி ஏற்றுக்கொள் வேன். என்னை மறந்து விடு'' என்று அறிவுறுத்திஞன். பத்மினியால் பதில் ஒன்றும் பேச முடியவில்லை. அவள் கண் களில் மட்டும் தாரைதாரையாகத் தண் ணீர் வழிந்து கொண்டிருந்தது

மழையின் வருகையை வானவில் காட் டுவதுபோல மங்கைப் பருவத்தின் வரு கையை மலரும் புத்தழகு காட்டுகிறது. இயற்கைத் தேவி பத்மினிக்குப் பூட்டிய அலங்கார அழகு முழு ரோஜாவுக்கு வாடாமை வாய்த்தாற் போலிருந்தது. பருவ மெருகின் பரிபூரண சோபையில் புத்தம் புது ரோஜா மலராகத் திகழ்ந்தாள் அவள். கால தேவனின் நீண்ட ஓட்டத் தில் எத்தனையோ சம்பவங்கள் அழுந்திப் போவது உண்டு. அதில் ஒன்றுதான் பத் மினி ராணு பீம்சிங்கின் மனைவியானதுவும். இப்போது பீம்சிங்கின் இளமையில் பத் மினி ஒன்றித் திளைக்க வேண்டியவளானுள்.

பீம்சிங், பத்மினி — இவர்களது மண வாழ்க்கையின் இன்பச் சுவைகள் சர்தா ரின் தெளிந்த மனத்தில் சிற்றிரைச்சலை எழுப்பிவிட்டது. ''எத்தகைய சொர்க் கத்தை இழந்து விட்டாய்!'' என்று அவ னது மனம் அடிக்கடி குத்திக் காட்டியது. எனவே மனப் புண்ணுக்கு மாற்று மருந் தாக ஊரைவிட்டே கிளம்பினுன் சர்தார்.

சர்தார் வெறும் வீரன் மட்டுமல்ல; சிறந்த ஓவியனுங்கூட. இளமையில் கற்ற ஓவியக் கலையை அவன் அதுவரை பயன்படுத்தாவிடினும், அதை அறவே மறந்து போய்விட வில்லை. அப்போது டில்லி பாதுஷா அலாவுத்தீன் பரந்தநோக்க முள்ளவனுக இருந்தான். இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் ஒரே கண்ணுல் நோக் கும் உயரிய கொள்கையாளனுக விளங்கி ஞன். ஆகவே தன்னை அண்டிவந்த சர்தாரை அவைக்கள ஓவியனுக ஆக்கிய தில் வியப் பில்லை.

அந்த சர்தாரைத்தான் தன்னுடைய அந்தரங்க அறைக்கு அழைத்துச் சென் ருன் அலாவுத்தீன்.

''ஓவியரே! நாளை மாலை என்னைக் கோட் டையுள் அழைத்துச் செல்ல ஏற்பாடாகி யுள்ளது. பத்மினியை ஒருமுறை — சில நொடிகள் அதுவும் தொலைவி லிருந்து பார்ப்பதற்காக......... இப்போது கொஞ்ச நாட்களாக என் பார்வைச் சக்தியும்

குறைந்து வருவது உமக்குத்தான் நன்ருகத் தெரியுமே. மேலும். ஒருமுறை பார்ப்பத ஞல் என்ஞல் என்ன இன்பம் காணமுடி யும்? நண்பரே, ஆகவே நீ என்னைப்போல் உடையணிந்து எனக்குப் பதிலாகக் கோட் டைக்குள் சென்று அழகியைப் பார்த்து வர வேண்டும். அமைதியாக, ஆழ்ந்து அவளைக் கவனித்து அவள் உருவத்தை உம் உள்ளத்தில் நன்கு 'ஊன்றிப் பதிய வைத்துக்கொண்டு வரவேண்டும். வந்ததும், உமது திறனை யெல்லாம் பிரயோகித்து, உலகத்துச் சிறந்த வர்ணங்களை யெல்லாம் கூட்டிப் பத்மினியை அழியா ஓவியமாகத் தீட்டவேண்டும். அதை நான் எந்நேரமும் என் அறையில் வைத்துப் பார்த்துக்கொண் டிருப்பேன்'' என்று பேசி முடித்தான் அல்லாவுத்தீன். பாதுஷாவின் அந்த வேண்டுகோளை மறுக்கமுடிய வில்லை; சர்தார் ஒப்புக் கொண்டான்.

மறுநாள் மாலை அல்லாவுத்தீன் (அல்லாவுத்தீன் உடையணிந்த ஓவியன் சர்தார்) சித்தூர்க் கோட்டையுள் அழைத்துச் செல்லப் பட்டான் கண்ணுடியில் பத்மினியின் பேரெழிலைக் கண்டு திரும்பிஞன்.

சிறந்த திரைச்சீலை ஒன்றைத் துருக்கியி லிருந்து வரவழைத்தான் பாதுஷா. அந்தச் சீலையின் தரம் உயர்வதற்காகச் சர்தார் தான் மட்டுமே தெரிந்துவைத் திருந்த சில பச்சிலைத் திரவங்களால் அதைக் கழுவிஞன் ஆறடி உயரமுள்ள அத் திரையில் ஓவியம் படிய ஆரம்பித்தது.

வைகறையில் கதிரவன் வருமுன் கீழ் வானம் ஒளிக்கீறல்களால் நிறைகின்றதே அதுபோல் திரையில் அளவைக் கோடுகள், பின் புனையா ஓவியம், பிறகு நிழலுரு- இவை எழுந்தன. இதற்குள் இரண்டு மாதங்கள் உருண்டு மறைந்தன.

பாதுஷா அல்லாவுத்தீன் தன் இதயதேவி பத்மினியின் உருவத்தைக் காணத் துடியாய்த் துடித்தான். ஆஞல் முழுவேலையும் முடிவதற்கு முன் அரைகுறையான ஓவியத்தைப் பார்க்கப் பாதுஷாவை சர்தார் அனுமதிக்க வில்லை. ''வர்ணப் பூச்சு மட்டுமே பாக்கியுள்ளது; பாதுஷா அவர்கள் இன்னும் ஒரு மாதம் பொறுத்தருள வேண்டும்'' என்று சமாதானம் கூறிப் பாதுஷாவை அனுப்பிவிட்டான் சர்தார்.

நாட்கள் நகர்ந்தன.

ஓவியம் ஒருவாருக உருவாகியது. அடுத்த நாள் ஓவியத்தைப் பார்க்க வரப் போகிருன் அல்லாவுத்தீன். ஓவியமா அது? உயிரொளி வீசியது அதில்! பத்மினியின் முழு அழகும் திரண்டு பொலிந்தது அதில்! அவள் உடலெங்கும் சாகாத அழகு தாண்டவ மாடியது! சொல்லில் அடங்காத அழகு!

சர்தாரே மீண்டும் ஒருமுறை பார்த்தான், தான் படைத்த பத்மினியை! கார்மேகம் தவழ்ந்தது அவள் கூந்தலிலே. சிறுவர்கள் ஊதிவிட்ட சிறுசிறு காற்றுக் கொப்புளங்கள்போல் கேச அலைகள் சுருண்டு சுருண்டு அலையாடின. இவை என்ன? துள்ளித் திரியும் புள்ளிமான்களா? புரளும் கெண்டைகளா? கண்கள்தாமா? அவற்றில் தான் என்ன மலர்ச்சி! அந்தக் கன்னங்கள் கனிவின் கனி-ரோஜாச் சுவர்! அதில் நாணம் பூசும் செவ்வானச் சாறு! பட்டிதழ்கள் பனியின் மென்மைகொண்டு படைக்கப் பட்டவையோ? அதோ இந்த எள்ளுப் பூ நாசி..................

—இப்படி யெல்லாம் எண்ணியெண்ணி ஒய்ந்தான் சர்தார். ஓவிய அழகி பத்மினி அழகின் வற்ருத ஊற்ருகவே விளங்கிஞள்.

இத்தனை நாட்களும் ஓவியம் என்றெண்ணி வந்த சர்தார் இப்போதுதான் அதைப் 'பத்மினி, பெண்' என்ற முறையில் பார்த்தான். ''இதே ஓவியத்தை — இல்லை, ஓவியத்துப் பத்மினியை நானே

காலையில் மாற்ருன் பார்ப்பான்.'' என்ற எண்ணம் அவன் மனத்தை அரித்தது.

''ரஜபுத்ர மாதர் குலத்துக்கே இழுக்கல்லவா அது! கணவனுக்கே காணிக்கை ஆக்கப்பட்டு விட்ட உடலை மற்ருெருவன் காண்பதா? அதுவும் எரியும் காமக் கண்களால்! உடலைக் காட்டி உயிர்வாழ்வது வேசிகளின் செயலல்லவா? கற்பரசி பத்மினியின் உருவத்தைக் காண அனுமதிப்பதும் மானச விபசாரம் தானே! பத்மினியை நேரில் காண்பதும் ஓவியத்தில் பார்ப்பதும் ஒன்றுதானே! தெய்வத்தின் உருவமாகிய சிற்பத்தை அவமதிப்பது எவ்வளவு மிகப் பெரிய தவறு! இதை நான் அனுமதிப்பதா?'' — என்று சர்தார் என்னென்னவோ எண்ணமிட லானுன். உந்தும் உணர்ச்சிச் சூருவளியில் சிந்தை சீரழிந்தான். சுவரிலே பொருத்தப்பெற்றிருந்த எரியும் தீபத்தை எடுத்தான் சர்தார். ஓவியத் திரையடியிலே காட்டினுன். 'பிசு, பிசு, வென்று ஓவியம் முழுவதும் எரிந்தது. கரிந்த சாம்பல் திட்டுத் திட்டாய் உதிர்ந்தது.

அவன் மனத்தில் புயலின் பேயிரைச்சல் அடங்கித் தென்றல் மெல்லத் தவழ்ந்தது. அமைதியான உள்ளத்தோடு அமளியில் படுத் துறங்கினுன்.

** ** **

பின் நடந்தவை என்னவாக இருக்குமென்று நீங்கள் இப்போதே தெரிந்து கொண் டிருப்பீர்கள். இல்லை யென்ருல் இதையும் படியுங்கள்:

ஓவியத்தைக் காணப் பாதுஷா வெகு ஆவலுடன் காலையில் வந்தான். உறங்கியெழுந்த சர்தாரை நோக்கி ''எங்கே ஓவியம்'' என்று கேட்டான். அவன் ''மாற்ருனின் மனைவியை மன்னர் பார்ப்பது தவறென்றெண்ணி ஓவியத்தை அழித்துவிட்டேன். அவள் உருவை வரைந்த என் தவற்றுக்குரிய தண்டனைக்குக் காத்திருக்கிறேன்'' என்ருன். பாதுஷா கரிந்துபோன ஓவியத்தைக் கண்டான். கட்டுக்கடங்காத ஆத்திரம் பொங்கி வந்தது அவன் முகத்தில். ''நம்பிக்கைத் துரோகம் செய்தவனே! உனக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன் பார்'' என்று கொக்கரித்தான். கொதிக்கும் நெஞ்சோடு ஏவலரை அழைத்து உயிருடன் சர்தாருக்குக் கல்லறை எழுப்ப உத்திரவிட்டான்.

கல்லறை சோகச் சூழலில் எழும்பி விட்டது. உயிரோடு அதனுள் திக்குமுக்காடிய ஓவியன் சர்தார் அடைந்த 'அமைதியான சித்ரவதை' விழியைக் குளமாக்கி விடும். ஆனால் அது உடலின் வேதனை தான். அவன் உள்ளம் தங்கை பத்மினியின் கற்பைக் காப்பாற்றிவிட்டதால் எக்களித்துக்கொண்டிருந்தது. அவளின் கற்புக்கு வந்த இழுக்குத்தான் கல்லறைக்குள் புதைந்து ஒழிந்துவிட்டதே!

## புது சோதனை ராக்கெட்

ஆராய்ச்சிக்காக ஒரு புது 'ராக்கெட்' விமானம் அமைக்கப்பட்டுள்ளது. 150 பவுண்ட் எடை விஞ்ஞானக் கருவிகளைத் தாங்கிச் செல்லக் கூடியது அது. விண்ணில் ஒரே அடியில் 180 மைல் உயரம் செல்லும். 1957- 58ஆம் ஆண்டில் இந்த ஆராய்ச்சி 'ராக்கெட்டு'கள் இருபத்திரண்டு கானடாவி லுள்ள ஃபோர்ட் சர்ச்சில் என்ற இடத்திலிருந்து விண்ணில் செலுத்தப்படும். காற்று மண்டலத்தி லிருந்து சோதனைக்காக எடுக்கப்படும் காற்று எவ்வகையிலும் ராக்கெட் டி லிருந்து வெளிவரும் ஆவியால் (gas) மாசுபடாமல் இருப்பதற் கேற்ற அழுத்த அமைப்பு இந்தப் புது 'ராக்கெட்'டில் உண்டு. இவ்வாறு நேவல் ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த ஜான் டவுன்சென்ட் என்ற அறிவியல் அறிஞர் கூறுகிருர்.

# நூல் அரங்கு

★

**கலைச் சொல் ஆங்கில – தமிழ் அகராதி: இரண்டாம் புத்தகம் – பொது** *விஞ்ஞான நூல், பகுதி1: வேதி நூல் & பூதநூல். ஆசிரியர்: தெல்லியூர் செ. நடராசா அவர்கள். வெளியிடுவோர்: மு. இரத்தினசபாபதி, 2- கிரான்ட் பாஸ் வீதி, கொழும்பு 14. 103 பக்கங்கள், விலை ரூபாய் 3.*

பத்துப் பதினைந்தாண்டுகள் அரிய உழைப்பின் பயன் நான்கு புத்தகங்களாக வெளி வருகிறது. இவற்றில் இரண்டாம் புத்தகத்தின் முதற்பகுதியே இங்கு மதிப்புரைக்கு எடுத்துக் கொண்ட நூல். இப் பகுதியில் வேதி நூல், பூதநூற் சொற்கள் இடம் பெறுகின்றன.

ஒரு விஞ்ஞானக் கட்டுரையை எழுதப் புகுந்தால் ஆங்கிலக் கலைச் சொற்களைத் தமிழிலே கருத்துக் கெடாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் தருவது ஏறத்தாழ பிரசவ வேதனைக்கு ஒப்பாகும். எழுத்தாளரின் திறமைக் கேற்பக் கட்டுரையும் சுகப்பிரசவமாகவோ, கஷ்டப் பிரசவமாகவோ முடிகிறது. ஒரு ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு இடத்திற்கேற்ப பல பொருள்கள் அமைகின்றன. ஒரு நல்ல தமிழ்க் கலைச் சொல் பெற்றுவிட்டால் அந்நிலையில் ஏற்படும் மகிழ்ச்சியே அலாதிதான். இந்த நிலையில் ஒரு அகராதியின் துணை எவ்வளவு வேண்டப் படுகிற தென்பது தெரியவரும்.

அலைவுக்கும் அதிர்வுக்கும் உள்ள பேதச் சாயல், சமச்சீர், பண்பறிபகுப்பு, பிணைத் திருகு (Binding screw), வளைவு மையம், அணுப்பிணைவு போன்ற பல நல்ல கலைச் சொற்கள் எளிமையும் சுய தெளிவுமுடையவை. சில தவறுகளும் இல்லாம லில்லை. உதாரணமாக பாயிலர் விதி, இரு கரிகை (Bicarbonate), நேர் மின்வாய் ஒரு வழிக் கதவு (anode valve), தீக்கற் பளிங்கு (flint glass), சீரெடை (gramme), ஒழுகிசை (melody), வானொலி வினை (radioactivity) போன்றனவும் cotangent என்பதற்குத் திருகோண மிதிக்கோண செயற்பாடு என்பதும் வம்பை விலைக்கு வாங்குவது போலிருக்கின்றன. அச்சுப் பிழைகள் சில இடங்களில் நம்மை ஏய்க்கக்கூடும். அடுத்த பதிப்பில் அவற்றை ஒழித்துக் கட்டவேண்டும்.

வழக்காற்றின் பேரில் பல சொற்கள் திருத்தமும், தூய்மையும் அழகும் உறும். அவ்வப் போது வெளி வந்த பல பிரசுரங்கள் இதன் தயாரிப்பில் உதவியிருந்த போதிலும், ஆசிரியரின் தமிழ்ப்பணி பாராட்டுதற் குரியது.

**பொது அறிவுக் களஞ்சியம்;** **ஆக்கியோர்:** *க. சி. குலரத்தினம். வெளியிடுவோர்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். 1955. 74 பக்கங்கள், விலை 90 சதம்.*

முதலில் இலங்கையைப் பற்றிய பல உபயோகமான குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பின்னர் உலக நாடுகளைப் பற்றின குறிப்புகள் காணப்படுகின்றன. உலகில் மிகப் பெரியன எவ்வெவை, எங்கே உள்ளன,

★ மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். ★

உபயோகமான பல பொருள்கள் யார் யாரால் கண்டு பிடிக்கப்பட்டன போன்ற பல விஷயங்கள் உள்ளன. இதுபோலவே பொது அறிவுக் கேள்விகள் முதலில் இலங்கையை முக்கியமாகக் கொண்டும், பிறகு பிறநாடுகளைப் பற்றியவையாயும் உள்ளன. சுகாதாரம், இயற்கைப் பாடம் இவற்றிலும் நல்ல கேள்விகள் தரப்பட்டுள்ளன. இறுதிப் பக்கங்களில் சுருக்கமான விடைகளும் கொடுத் திருக்கிறார்கள். பொதுவாக மாணவர்களுக்குப் பயன்படும் ஒரு நல்ல சிறிய புத்தகம்.

**தாலாட்டு:** *(தொகுப்பு நூல்) தொகுப் பாசிரியர்: திரு. தமிழண்ணல்- கிடைக்குமிடம்: செல்வி பதிப்பகம், காரைக்குடி, இராமநாதபுரம். விலை: ரூபாய் இரண்டு.*

உண்மை உணர்ச்சியிலே கவிதை பிறக்கிறது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டுத் தாலாட்டு. தாலாட்டுப் பாடும் தாய்மார்கள் காரிகை கற்கவில்லை; கவிதை நயம் உணரவில்லை. ஆனால் அவர்கள் அன்பு உணர்ச்சியில் முகிழ்ந்தெழும் தாலாட்டுப் பாடல்கள் உவமை அணிபெற்று எதுகை மோனை எழில் பெற்று உள்ளத்தைத் தொடுவனவாய் அமைந்துள்ளன.

தாய்மார்கள் தங்கள் தாலாட்டுப் பாடல்களிலே எடுத்தாளும் உவமைகளும் வருணனைகளும் பெரும் புலவர் என நம்மால் போற்றப்படக் கூடியவர்கள் கையாளும் உவமைகளையும் வருணனைகளையும் ஒத்துள்ளன என்பதனை ஆசிரியர் தமது திறனாய்வுக் கட்டுரையிலே எடுத்து விளக்குகிறார்.

ஆசிரியர் அவர்கள் ஈழம், சேர, சோழ, பாண்டிய நாடு ஆகிய பகுதிகளில் வழங்கும் தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார். இந்த தொகுப்பை நோக்குகையில் தமிழ் மக்கள் அனைவரும் கவிஞர்கள்; உண்மையான, தெளிவான உணர்ச்சி ஏற்படும் போது அவர்தம் கவி உள்ளம் வெளிப்படுகிறது என்பது வெளியாகின்றது.

பழமை புதியதற்கு நல்ல அடிப்படை. அந்த நிலையில் பழமை அனைத்தையும் அழித்துப் புதுமை காண இயலாது. இதனை நன்கு உணர்ந்த பெருமகனார் தமிழண்ணல் முயன்று இடர் பல உற்றுப் பல பழைய மறைந்து பட்டு மூலை முடுக்குகளில் முணு முணுக்கப்பட்ட தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்து நமது பழம் பெருமையினை, அன்பு உள்ளங்களை எடுத்துக் காட்டுகிறார்.

இந்த நூல் ஒரு நல்ல முன் முயற்சி. இதனகண் தற்காலப் புலவர் தம் தாலாட்டுப் பாடல்கள் சிலவும் சேர்ந்துள்ளன. இன்னும் எத்தனையோ பழம் பாடல்கள் நாட்டில் உலவி வருகின்றன. அவற்றை எல்லாம் அன்பர்கள் தேடி இவ்வாறு தொகுத்துத் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்தால் நல்லது. இந்த நல்ல முதல் முயற்சியைத் தமிழர் நன்றி உணர்வோடு பாராட்டவேண்டும். அனைவரும் இந்நூலை வாங்கிப் போற்ற வேண்டும்.

**மஞ்சள் துணி:** *ஆசிரியர்: தி. ஜ. ர. - வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை 5. விலை ரூ. 2—8—0.*

'மஞ்சள் துணி' என்னும் பெயரேந்தி நிற்கும் இந்நூல் ஒன்பது சிறு கதைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். முதலாவது கதையாகிய மஞ்சள் துணி என்ற கதையின் தலைப்பே இந்நூலுக்கும் தலைப்பாய் அமைக்கப்பட்டுள்ளது.

எல்லாக் கதைகளும் சாதாரணமாகவே உள்ளன. கடவுள் பக்தி யுள்ளவர்களும் பக்தி யற்றுக் கடவுள் இல்லை எனக் கூற முன் வருகின்றனர் என்பதற்குப் பலகதைகள் வெளி வருவது போல, இளமையிலே கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவர்கள் பிற்காலத்தில் கடவுள் பக்தியை மேற்கொள்கின்றனர் என்பதாகச் சில கதைகள் உள்ளன. பொதுவாக எல்லாக் கதைகளுமே இறைவன் ஒருவன் உள்ளான் என்பதை வலியுறுத்த எழுந்த கதைகளாகக் காணப்படுகின்றன. கதைகளைப் படித்து முடித்த பின்னர், கதையில் கண்ட நிகழ்ச்சிகளும் நீதிகளும் நெஞ்சில் இடம் பெறுவதாகக் காணோம். பொழுது போக்கிற்கு ஏற்றதொரு நூலாக உள்ளது.

# இது செய்தி

பிப்ரவரி, 15. தத்தம் பகுதிகளில் தீண்டாமை ஒழிப்புக்குச் சிறந்த தொண்டு புரியும் ஊர்த் தலைவர்களுக்கும், பொது ஊழியர்களுக்கும் ரூபாய் 50 வீதம் பரிசளிக்க சென்னை அரசினர் ரூபாய் 10000 ஒதுக்கி யுள்ளனர்.

பிப், 16. சென்னை மாநிலத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் தென்னாட்டு (தட்சிண ராஜ்ய) அமைப்பை விரும்ப வில்லை என்று திரு. காமராஜர் அறிவித்தார்.

பிப், 17. தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் தமிழிலே கல்வி மொழி ஆகவேண்டும் என்ற கொள்கையைத் திரு. இராஜ கோபாலாச்சாரியார் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆதரித்துப் பேசினார்.

பிப், 18. தமிழ்ப் பேரறிஞர் திரு. வையா புரிப் பிள்ளை அவர்கள் காலமானார்.

பிப், 20. தென்னாட்டு (தட்சிண ராஜ்ய) அமைப்பை எதிர்த்தும், தமிழ் நாட்டுடன் தேவிகுளம், பீர்மேடு இணைப்பை வற்புறுத்தியும் தமிழ் நாடெங்கும் கடையடைப்பும், வேலை நிறுத்தமும் அமைதியான முறையில் நிகழ்ந்தன.

பிப், 25. குடந்தையில் மகாமக விழா நடந்தது.

பிப், 27. டில்லி பாராளு மன்றத் தலைவர் திரு. மாவலங்கர் இன்று மாரடைப்பால் காலமானார்.

பிப், 29. அமெரிக்காவுக்கு வரும்படி அமெரிக்கத் தலைவர் ஐஸன்ஹோவர் அனுப்பிய அழைப்பைத் தாம் ஏற்றிருப்பதாகவும், இந்தியாவுக்கு வரும்படி ஐஸன்ஹோவரையும் தாம் அழைத்திருப்பதாகவும் திரு. நேரு இன்று அறிவித்தார்.

இந்திய அரசின் 1956 -57 ஆம் ஆண்டு வரவு செலவுக் குறிப்பறிக்கையை நடுவரசுப் பொருள் அமைச்சர் இன்று டில்லி பாராளும் மன்றத்தில் வெளியிட்டார்,

மார்ச், 6. தென் கிழக்கு ஆசியப் பாது காப்புக் குழுவின் (சீட்டோ) இரண்டாவது கூட்டம் கராச்சியில் துவங்கியது.

மார்ச், 7. உயர்நிலைப்பள்ளி இறுதி அரசியலார் தேர்வுக்கு மாணவர்களைப் பொறுக்கி அனுப்பும் (செலக்ஷன்) முறையை ஒழிக்கும் எண்ணம் சென்னை அரசினர்க்கு இல்லை என்று சென்னைக் கல்வி அமைச்சர் அறிவித்தார்.

மார்ச், 8. திரு. எம். அனந்தசயனம் டில்லி பாராளும் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மார்ச், 9. அமெரிக்க அயல் நாட்டு அமைச்சர் திரு. டல்லஸ் இந்தியா வந்தார்; திரு. நேருவுடன் பல மணி நேரம் பேச்சு நடத்தினார்.

மார்ச், 10. அமெரிக்க உதவியினால் பலம் பெறும் பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்கினால், இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி செய்யும் என்று அமெரிக்க அயல்நாட்டு அமைச்சர் திரு. டல்லஸ் அறிவித்தார்.

மார்ச், 11. மொழிவாரி மா நிலங்கள் அமைப்பதை ஆச்சாரியா வினோபா பாவே ஆதரித்துப் பேசினார்.

மார்ச், 12. அக்டோபர் 2ஆம் நாள்முதல் டில்லியிலிருந்து, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களுக்கு மூன்றும் வகுப்புக் குளிர் அறைத் தொடர் வண்டிகள் விடப்படும்.

மார்ச், 13. திருவாங்கூர் – கொச்சி, சென்னை மாநிலங்களில் யுரேனியம் (அணுசக்தி மூலப்பொருள்) கிடைப்பதாகத் திரு. நேரு அறிவித்தார்.

காந்தி அடிகளின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் ஆகியவற்றை மூன்று தொகுப்புக்களாக வெளியிட இந்திய அரசினர் முடிவு செய்துள்ளனர்.

மார்ச், 14. உரிமை இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும், தற்போது பிரிட்டன் கடற்படையின் தலைமைத் தளபதியுமான லார்டு மவுண்ட் பேட்டனும், அவர் மனைவியும் காலை புதுடில்லி வந்து சேர்ந்தனர்.

# பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை

டாக்டர் மு. வரதராசன்

8

தலைவியும் தலைவனும் உடன்போக்கு மேற்கொண்டு போய்விட்டனர். தலைவியைப் பெற்றெடுத்த தாய் (நற்றாய்) இதுவரையிலும் தன் மகளைப் பிரிந்தறியாதவள். தன்னிடம் சொல்லவும் இன்றி 'எவனோ ஒருவன்' அழைக்க அவனுடன் போய்விட்டாளே அருமை மகள் என்ற ஏக்கம் அவளை அரிக்கிறது. மகளை நினைத்து நினைத்து அழுகின்றாள். அந்த அழுகையி னூடு ஒரு வெம்மையான சாபமும் பிறக்கிறது. 'என் மகளை நினைத்து நினைத்து நான் அழுவதைபபோல அவனுடைய தாயும் அவனை நினைத்து அழட்டுமே'—இது பெற்ற வயிற்றின் வேதனையில் பிறந்தது! முழுதும் எண்ணிப் பார்க்காமல் பிறந்ததுதான்... .........இவ்வளவு சினம் அந்த நற்றாய்க்கு ஏன் வந்தது? தலைவன் தலைவியை அழைத்துச் சென்ற வழி அவ்வளவு பொல்லாத வழி. அந்தக் கொடிய வழியைத் தெளிவிக்க நினைந்த புலவரின் நெஞ்சம் ஒரு படம் தீட்டியது. புலியால் துரத்தப்பட்ட முதிய ஆண்மான் ஒருவாறு அதனிட மிருந்து தப்பிக்கொண்டது. புலியினால் இனிமேல் தொல்லை இல்லை என்று திட்டமாகத் தெரிந்தபின் அந்தக் கிழட்டு மான் தன் பெண்மானை அழைக்கிறது. 'இத்தகைய கொடிய வழியிலே என் மகளை அழைத்துப் போனானே, அவனுடைய தாய்க்கும் என்போல் துயரம் வருக...............

*நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக*
*புலிக்கோள் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை*
*மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்*
*வெஞ்சுரம் என்மகள் உய்த்த*
*அம்புஅமை வல்வில் விடலை தாயே*

(ஐங். 373)

[கலிழும் : அழுகின்ற — புலிக்கோள் : புலியால் கொல்லப்படுதல் — கவைக் கோடு : பிரிந்துள்ள கொம்புகள் — மான்பிணை : பெண்மான்]

புலியிட மிருந்து தப்பிய பிறகு முதுகலையின் குரலிலே 'ஆண்மை சொட்டுகிறது' என்று சொல்லும்போது எள்ளலும் இரக்கமும் விரவி யுள்ளதைக் காணலாம். 'விடலை' என்ற சொல்லால் தலைமகனைக் குறிப்பிடுவதும் எண்ணத் தக்கது. இடுக்கண் வரின் எதிர்த்து நின்று தன் மகளைக் காப்பாற்றுவானோ மாட்டானோ என்ற அச்சமே நற்றாயை இவ்வளவு வேதனையோடு பேசச் செய்கின்றது. நற்றாய் ஒருத்தியின் பெற்ற மனத்தைச் சொற்சித்திரமாய்த் தீட்டி நமக்கு விருந்துபடைக்கிறார் ஓதலாந்தையார்.

கவிஞரின் அருள்நெஞ்சம் அவர் சொல்லோவியங்களில் வருகின்ற கொடிய விலங்குகளுக்கும் அமைந்திருப்பதைக் காணுகின்றோம். இயற்றுவோன் பண்பு இயற்றப்படும் பொருளிலும் சாரும்போலும்.

பிரிந்து சென்ற தலைமகன் மீண்டும் வந்துவிட்ட செய்தியைத் தோழி அறிந்தாள். தான் அறிந்த அந் நற்செய்தியினைத் தலைவிக்குக் கூறுகின்றாள். ''தலைவியே, உன் தலைவர் வந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். இனிமே லாயினும் கவலை நீங்கிடுக'' என்று சொன்னால், 'ஐந்தும் மூன்றும் எட்டு' என்று சொல்லும் தன்மையதா யிருக்கும். அறிவுடைய தோழியின் கூற்று அத்துணை 'வெள்ளையாய்' — நயமில் வறுங்கூற்றாய் — அமையாது. தலைவன் போனவன் மீண்டனன்; சுரங் கடந்து மீண்டனன். தலைவியின் பண்பு

நினைந்து மீண்டனன். தன்னையே நினைந்து துணை பிறர் இன்றி ஏங்கித் தவிக்கும் ஒரு பெண்ணுக்குத் தான் செய்யவேண்டிய கடமையை நினைந்து மீண்டனன். அவனுக்குத் தலைவியின் நினைப்பை ஊட்டியது எது? தன்னிடம் சார்ந்த உயிரினம் எதுவாயினும், அதனை வாட்டி வதக்கி உணக்கும் கொடிய பாலையிலே வாழ்கின்ற ஒரு செந்நாய் ஆடவன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய ஈர நாகரிகத்தைத் தலைவனுக்கு நினைவூட்டிற்று. அந்தச் செந்நாய் தன் அன்புக்கு உரிய பெட்டையோடு சேர்ந்து சென்றது. அது சென்ற வழியிலே ஒரு பெண் மான் இருந்தது. அது விரும்பியிருந்தால் ஒரே பாய்ச்சலில் அந்தப் பெண்மானைக் கொன்றிருக்கலாம்; கொன்று, தானும் உண்டு தன் துணைக்கும் தந்திருக்கலாம். ஆனால், அந்தக் கொடுமை நிகழ வில்லை. தன் பெட்டையோடு இயங்கிய செந்நாயின் உள்ளத்திலே கனிவு ஏற்பட்டது. அதன் கண்ணிலே பட்ட பெண்மான் தன் குட்டியோடு இருந்தது. அன்புடைய அந்தத் தாயே அந்தக் குட்டிக்கு முழு ஆதரவு. அன்பின் பொருளைத் தன் துணைச் சிறப்பால் உணர்ந்த செந்நாய்க்கு இது போதாதா? பெண்மான் பிழைத்தது; குட்டியும் பிழைத்தது. இவ்வாறு ஒரு காட்சியைப் பாலை வழியிலே தலைவன் கண்டால், அவன் நெஞ்சு உருகுவது இயல்பே அன்றோ? உருகாம லிருக்க அது கல்லா, அன்றி இரும்பா!—தோழியின் கூற்றிலே எழுவதாக ஓதலாந்தையார் தீட்டுகின்ற ஓவியம்:

*ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை*
*மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்*
*அரிய சுரன்வந் தனரே*
*தெரியிழை அரிவைநின் பண்புதர விரைந்தே*

(ஐங். 354)

[ஈர்ம் பிணவு புணர்ந்த : அன்புடைய பெட்டையோடு சேர்ந்த — ஏற்றை : ஆண் — மறி : குட்டி — மான்பிணை : பெண்மானை — கொள்ளாது : (கொன்று) உண்ணுமல்]

மற்றொரு பாடலிலும் ஒரு செந்நாய் அருளுணர்வு உடையதாய் வருகின்றது. கொடிய செந்நாயின் கண்ணிலே பட்டது ஒரு பன்றிக்குட்டி. ஆனால், குட்டியின் இளமைப் பருவம் என்ன நினைப்பை ஊட்டிற்றோ, அதனைச் செந்நாய் கொல்லாமல் தன் வழியே போய்விட்டது.*

இரண்டு பாடலுக்கும் உரிய சூழ்நிலையிலே வேற்றுமை உண்டு; கூற்றுக்கு உரிய வரும் வெவ்வேறு நிலையினர். முன்னது தலைமகனது வரவினை உணர்ந்த தோழி அந் நற்செய்தியினைத் தலைவிக்குக் கூறுமுகமாக எழுந்தது. பின்னது தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டு பின் தன் ஊர் மீளுகின்ற தலைவியின் கூற்றாய் அமைந்தது. இப்படி வெவ்வேறு உணர்ச்சிகளைத் தருகின்ற இரண்டு பாடல்களின் அடிப்படையிலோ ஒரே தத்துவம் தொழிற்படுகின்றது. கொடுமையே வாழ்வான செந்நாயின் உள்ளத்தில் தோன்றிய அருளுணர்வே இங்குக் காட்டிய இரண்டு ஓவியங்களுக்கும் மூலப் பொருளாக அமைந்துள்ளது.

அஃறிணை உயிர்களின் அருட் செயல்கள் மக்களுக்கு வழிகாட்டும் மாண்பினை இங்கே கண்டோம். மக்கள் தம் விருப்பத்தை அஃறிணை உயிர்களிடம் தெரிவித்துத் தம்

* *கவிழ்மயிர் எருத்தின் செந்நா யேற்றை*
*குருளைப் பன்றி கொள்ளாது கழியும்* —ஐங். 397.

ஆராமையை ஒருவாறு தணித்துக்கொள்வதும் உண்டு. இஃது உலக இயற்கை; இலக்கிய மரபு. செவிலித்தாய் காக்கையைப் பார்த்துப் பேசுவதாக ஒரு பாடல். இரக்கமற்ற இந்த உலகியல் அவளுடைய அருமை மகளை அவளிட மிருந்து பிரித்துவிட்டது என்ற துயர் போலும். அந்தத் துயரத்திலே எல்லோருமே இரக்கம் அற்றவர்கள் என முடிவு செய்துவிட்டாள். காக்கை ஒன்று வந்து அமர்ந்தது. 'ஏ காகமே! நல்ல ஊன் பெய்து சமைத்த உணவு உனக்கு இடுகிறேன். உனக்குமட்டும் என்று எண்ணிவிடாதே. நீயும் உன் சுற்றமும் நிறைய உண்ணுமாறு தருகிறேன். நல்ல பொன்னல் செய்யப்பட்டு அழகாக விளங்கும் பாத்திரத்தில் விருந்து படைக்கிறேன். உன் வாய் திறந்து ஒரு நல்ல சொல் சொன்னல் போதும். என் மகள் அவளுக்கு இனிய காதலனேடு வருவாள் என்பதற்கு அறிகுறியாகக் கரைய மாட்டாயா''என்று பேசாப் பொருளிடம் பேசுகிறது வளர்த்த பாசம்! மனிதர் பேச்சைக் காக்கை புரிந்துகொள்ளவா போகிறது! இல்லை. எனினும், பேசினும் மனங் கொள்ள முடியாத அந்தக் காக்கைககாவது இரக்கம் இருக்கும் என்று எண்ணி ஏங்குகிறது அந்தத் தாயின் உள்ளம்.

*மறுஇல் தூவிச் சிறுகருங் காக்கை*
*அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்*
*பச்சூன் பெய்த பைந்நிண வல்சி*
*பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ*
*வெஞ்சின விறல்வேல் காளையொடு*
*அம்சில் ஓதியை வரக்கரைந் தீமே*

(ஐங். 391)

[மறு இல் : குற்றம் இல்லாத — தூவி : இறகு — பச்சூன் : பக்குவமான தசை — பைந்நிண வல்சி : பக்குவமாய் அமைந்த கொழுப்புக் கலந்த உணவை — பொலம்புனை கலத்தில் : பொன்னல் அழகுபெறச் செய்யப்பட்ட கலத்தில் — விறல் : வெற்றி — அம் சில் ஓதி : அழகிய சிலவாகிய கூந்தலையுடைய மகள்]

ஐங்குறு நூற்றுள் ஓதலாந்தையார் பாடியுள்ள இளவேனிற் பத்துள்* ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று வரிகளே உள்ளன. அதிலும் ஒரு வரி,

*அவரோ வாரார் தான்வந் தன்றே*○

என்பதாகும். ஏனைய இரண்டு வரிகளில் இவர் தீட்டிக் காட்டும் இளவேனிற் பருவத்து ஓவியங்கள் பயில்வார் நெஞ்சில் இனிமையை ஊட்டி எழிலுற அமைந்துள்ளன. குயிலின் குரலும், சுரும்பின் ஒலியும் கேட்கலாம்; கருமண லொழுங்கில் சுரப்பதுபோல் காட்டி நுடங்கி ஒடுங்கி யொழுகும் நீரோட்டம் காணலாம்; நுணவமும் குரவமும் பாதிரியும் வெண்கடம்பும் மலர்தலால் பரவும் மணத்தை நுகரலாம்; புன்கின் தளிரும் வேப்பம் பூவும் தம் மென்மையால் நம்மை மகிழ்விக்கும்.........இவ்வாறு சில சொற்களிலே இளவேனிற் காலத்தைத் தீட்டிக் காட்டியுள்ள திறத்தை வறட்சியான வெற்று உரைநடையிலே தீட்டிக் காட்டல் இயலாது. ஒருகால் உரைநடையிலே இளவேனிலை உருவாக்கினுலும், இப்பாடல்

* ஐங். 341–350.

○ *'அவர் வரவில்லையே; அதற்குள் இது வந்துவிட்டதே'*

களில் உயிர்பெற் றுலவும் தலைவியின் ஏக்கம்நிறைந்த உயிரொலிக்கு நம் சொல் ஏலாது. இளவேனிற் பத்தைப் படிக்கும்போதே இயற்கைக் காட்சியைக் காண்பதுடன் தலைவியின் இதய ஒலியையும் நம்மால் தெளிவாகக் கேட்க முடிகின்றது.

விரைவொடு வீசலால் ஒலிகிளப்பிக் கோடையால் வெதும்பும் காற்று இலவ மரத்தினது செந்நிறப் பூக்களை உதிர்த்துவிடுகின்றது. அவ்வாறு ஒலிக்கும் காற்றால் உதிர்கின்ற செந்நிறப் பூவின் காட்சி, புலவர் என்றோ கண்ட இடியொடு தோன்றிய நெருப்பின் காட்சியை நினைவூட்டி விடுகின்றது. பழைய காட்சியைப் புதிய காட்சிக்கு உவமையாக்கிப் பாடுகின்றார்.*

இலவ மரத்தின் மற்றொரு காட்சியும் இவரால் தரப்பட் டுள்ளது. கோடைக் காலத்தில் இலவ மரத்தில் இலை ஒன்றுகூட இல்லை. இலை இல்லையே தவிர, மரம் நிறைய மலர் விரிந்துள்ளது. செந்நிறப் பூக்கள் மலர்ந்துள்ள இலவ மரங்களின் சூழல் பெற்ற மலையைத் தொலைவி லிருந்து பார்க்கிறார், புலவர். காட்டுத் தீப் பற்றிப் பரவத் தொடங்கி யிருப்பதுபோல் உள்ளதாக இக் காட்சியைப் பாடுகிறார்.+

மலையிலே பற்றி எரிந்து நீண்டு நீண்டு பரவும் காட்டுத் தீயின் காட்சி இவர் உள்ளத்தே நின்று நிலைத்து, மற்றொரு காட்சிக்கு உவமையாக அமைந்துள்ளது. கரிய மலையிலே நீண்டு கோடுபோல் பரவியுள்ள நெருப்புத் தொடர் செல்வர்களின் யானையைப் பிணித்துள்ள பொற்சங்கிலிபோல் உள்ளதென ஓர் இடத்தே பாடுகின்றார்.○

சில இடங்களில் இவரால் தீட்டப்படும் உவமைச் சித்திரங்கள் இவர்க்கே உரிய சிறப்பாகவும் சாலப் பொருத்தம் உடையனவாகவும் உள்ளன.

*மள்ளர் அன்ன மரவம் தழீஇ*
*மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்*

(ஐங். 400)

என்ற வரிகளில் மரத்தைச் சுற்றித் தழுவி நுடங்கும் கொடிகள் தம் கொழுநராம் வீரரைத் தழுவி ஆடும் மகளிர்போல் ஆடுகின்ற காட்சி எத்துணைப் புதுமையும் பொருத்தமும் உடையதாய் உள்ளது!

*எறும்பி அளையின் குறும்பல் சுனைய*
*உலைக்கல் அன்ன பாறை*

(குறுந். 12)

* முள்அரை இலவத்து ஒள்இணர் வான்பூ
முழங்கழல் அசைவளி எடுப்ப வானத்து
உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும் —ஐங். 320.

\+ இலையில மலர்ந்த ஓங்குநிலை இலவம்
மலையுறு தீயின் சுரமுதல் தோன்றும் —ஐங். 338.

○ செல்வர், யானை பிணித்த பொன்புனை கயிற்றின்
ஒள்ளெரி மேய்ந்த சுரம் —ஐங். 356.

என்ற வரிகளில் அகன்று தட்டையாய் உள்ள பாறையும் அதனிடத்து அமைந்த பல சிறு சுனைகளும் முறையே கொல்லன் களத்தமைந்த பட்டறையினையும் எறும்புப் புற்றின் தொளைகளையும் ஒத்தன எனப் பாடுகின்றார். நிறத்தாலும் தோற்றத்தாலும் பொருந்த அமைந்த இவ்வுவமைகள் மிகச் சிறப்பாக உள்ளன. இங்குக் காட்டிய இரண்டு பாடல்களிலும் இரண்டிரண்டு வரிகளில். இரண்டிரண்டு உவமைகள் அமைந்துள்ளதைக் கண்டோம். மாசற்ற சில சொல்லும் திறம் தெரிந்தவர் ஓதலாந்தையார்.

எத்துணையோ வகையான பாடல்களில் நம்மை இவர் திளைக்கச் செய்கின்றார். அவை பலவற்றுள்ளும் எக்காலும் நம் இதயத்தை விட்டு நீங்காத வகையில் சில குறிப்பிடத் தக்கனவாய் உள்ளன. கொடிய பாலையையே இவர் தம் சொல்லோவியங்களில் தீட்டினார். நிலம் வறண்டு போயினும் அங்கு வாழும் அஃறிணை உயிர்களிடத்தில்கூட நெஞ்சம் வறளவில்லை என்று இவர் காட்டும் ஈர நாகரிகம் எந்தக் கனகல்லையும் கரைக்கும் இயல்பினை உடையதாகும். படைக்கப்படும் கலையினூடு கலைஞனின் நெஞ்சமே வாழ்கின்றது என்பர். இவ்வுண்மையை மனங்கொண்டு நோக்குமிடத்து ஓதலாந்தையாரின் அருள் நெஞ்சினைப் பாலைத் திணைப் பாடல்களிலே காண முடிகின்றது. வெம்மைக்கும் தண்மை ஊட்டிய இச்சான்றோரின் நெஞ்சம் நமக்கும் வாய்க்க வேண்டும்.

**ஓரம்போகியார்*** ஐங்குறு நூற்றின் மருதத் திணைப் பாடல்களைப் பாடிய சான்றோர் இவர். இப் புலவர் பெருமானின் வேறு சில பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய தொகை நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடல் (புறம். 284), குறுந்தொகையுள் இரண்டு பாடல்கள் (குறுந். 70. 122) ஆக மூன்று பாடல்கள் தவிர ஏனைய யாவும் மருதத் திணைக்கே உரியவை.

மருத நிலத்தின் பல திறக் காட்சிகளை ஓரம்போகியாரின் பாடல்களில் நாம் காணலாம். மருதம் என்று நினைக்கும் போதே, ஏனோ புலவர்கள் எல்லோரும் எருமையைப் பற்றிப் பாடாமல் விடுவதில்லை. ஓரம்போகியாரும் சில பாடல்களில் எருமை பற்றிய ஓவியங்களைத் தீட்டிக் காட்டுகின்றார். கொம்புகளின் இடையே மிடைந்து கிடக்கும் பகன்றை மலர்க்கொடியொடு தோன்றும் எருமையை நம் அகக்கண் முன் அவர் நிறுத்துங்கால், சொற்களால் உயிரோவியம் தீட்டுதலில் அவர்க்குள்ள சதுரப்பாட்டினை நாம் உணர்கிறோம். இரண்டு இடங்களில் வருகின்ற எருமைக் காட்சியை ஈண்டுக் காணலாம்.

இரவெல்லாம் குழம்பாய்க் கிடக்கும் சேற்றிலே புரண்டுகிடந்து பொழுது புலர்ந்ததும் புறப்படுகிறது எருமை. அந்தச் சேற்றிலே கிடக்கும் வரால் மீன்கள் சிதையும்படி மிதித்துக்கொண்டு புறப்படுகின்றது அது. எங்கோ இருந்த பகன்றைக்கொடி எருமையின் 'வீரதீரத்தால்' அதன் கொம்பிலே சிக்கிப் பிணைந்து கிடக்கிறது. அந்தக் கொடியில் உள்ள மலர்கள் வெள்ளையாக உள்ளன. வெண்ணிறப் பகன்றைப் பூவைக் கொம்பிலே சூடிப் பெரும்போக்காக வருகின்ற எருமை, போர்க் களத்தில் புகும் வீரரைப்போல் காணப்படுகின்றது.

* *இச் சான்றோர் பாடியனவாக நாம் பெற்றுள்ள பாடல்கள் பற்றிய விவரம்: ஐங்குறு நூறு 1–100, அகம். 286, 316, குறுந். 10, 70, 122, 127, 384, நற். 20, 360, புறம். 284 — ஆக 110 பாடல்கள். இவற்றுள் குறுந். 70 குறிஞ்சித் திணைக்கு உரியது; குறுந். 112 நெய்தல் திணையது. ஏனைய 107 பாடல்களும் மருதத் திணைக்கு உரியவை. புறநானூற்றுப் பாடல் தும்பைத் திணையது.*

*ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்*
*தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்*
*பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து*
*குரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்*
*போர்ச்செறி மள்ளரின் புகுதரும்......*

(அகம். 316)

[ஈர்ந்தண் சுவல்படு : மிகக் குளிர்ச்சியான முதுகினை உடைய – எருமை முதுபோத்து : முதிய எருமைக் கடா – தூங்கு சேற்று அள்ளல் : மிக்க சேற்றின் குழம்பு – பொழுதுபட : பொழுது (சூரியன்) தோன்ற – பைந்நிண வராஅல் : வளமான தசையுடைய வரால்மீன் – குறைய : சிதையும்படி – குரூஉ : (வெள்ளை) நிறம் – மள்ளரின் : வீரரைப் போல]

'தும்பைப் பூப்போல் வெள்ளையா யிருக்கும் பகன்றை மலர் சூடி, எருமை ஊர்க்குள் நுழைந்தது' என்று தெளிவாகப் புலவர் பாடியிருக்கலாம். ஆனால், அவ்வாறு பாடாமல், நிறம் அமைந்த பகன்றைப் பூவைப் போர்வீரர் போலச் சூடி, அவர்களைப் போல் புகுந்தது என்று பாடுவதிலே ஒரு குறிப்பு உண்டு. ஆம்பல் மலரை மேய்ந்து இரவெல்லாம் சேற்றிலே திளைத்துக் கிடந்த எருமை, தன்னளவில் இன்பத்தின் எல்லையைக் கண்டுவிட்டது. மனச் செருக்கிய அந்நிலையில் வரால் மீனைச் சிதைக்கின்றோமே என்பதுபற்றிக்கூடக் கவலைப்படாமல், கொம்பிலே சிக்கிய பகன்றைக் கொடிபற்றியும் உணராமல் பெருமிதத்தோடு வருகின்றது எருமை. அதிரப் பொருவதன் அடையாளமாகத் தும்பை சூடி மனச் செருக்கும் உடற் செழிப்பும் தோன்றப் போர்முனைக்கண் செறிந்து சேரும் போர்வீரனின் நிலை ஒன்றுதான் பொருத்தமான உவமையாகப் புலவர்க்குத் தோன்றுகின்றது. 'போர்ச் செறி மள்ளரின்' என்ற சில சொற்களா லாகிய ஒரே உவமை வாயிலாக, அவர் அணியும் தும்பைப் பூப்போல் எருமையின் கொம்பினிடைச் சிக்கிய பகன்றை மலர் இருந்தது என்பதை உய்த்துணர வைக்கின்றார். மேலும், எருமையின் மனச் செருக்கும் உடற் கொழுப்பும் விளக்கமாகத் தோன்றும் வகையில் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு, அதே நிகழ்ச்சிகளைப் போர்வீரரின் செயல்களுக்கு ஏற்பக் கொள்ளுமாறு நம் சிந்தையைத் தூண்டுகின்றார். இவ்வாறு உவமையும் பொருளும் ஒன்றுக் கொன்று துணையாய் எழில் ததும்பும் உயிரோவியம் தீட்டியுள்ளார் ஓரம்போகியார். சொற் செட்டும் பொருள் நுட்பமும் ஒருங்கே பொலியும் இவ்வோவியம் புலவோரின் சிந்தனைக்கு நல்விருந்தாகும்.

எருமையைப் பற்றி ஓரம்போகியாரால் தீட்டப்பெற் றுள்ள மற்றோர் ஓவியம் சற்றே வேடிக்கையாக உள்ளது. தாய் எருமை தன் கொம்பில் சிக்கிய வெண்மலர்ப் பகன்றைக் கொடியொடு வந்து சேர்கின்றது. ஒருகால் பகன்றைக் கொடி நிறையச் சிக்கி எருமையின் முகமெலாம் மறைத்துத் தொங்கியது போலும்! ஆங்காங்கே வெண்புள்ளிகள் பெற்றுள்ள பசுமைத் திரள் ஒன்று அசைந்து வருவதுபோல் இருக்கின்றது தாய் எருமையின் வருகை. தாய் என்றும் உணர முடியாமல் அதன் கொம்பினைக் கண்டு எருமைக் கன்று அஞ்சுகின்றதாம். தாய் தன் சேயை அச்சுறுத்தும் நிலை, அதன் கொம்பிடைச் சிக்கிய பகன்றையால் ஏற்படுகிறது:

*பகன்றை வால்மலர் மிடைந்த கோட்டைக்*
*கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்*

(ஐங். 97)

[வால் : வெள்ளை – கருந்தாள் : கரிய காலினை உடைய]

மருத நிலத்து வாழும் நண்டு, முதலை, ஆமை முதலியவற்றினைப் பற்றிய நுண்ணிய விவரங்களை யெல்லாம் தெள்ளிதின் உணர்ந்தவர் ஓரம்போகியார். அவர் தெரிவிக்கும் சில செய்திகளை நோக்குமிடத்து, இச் சிற்றுயிர்களின் இயல்புகளையும் புறக்கணியாமல் போற்றித் தெரிந்துள்ளார் என நினைக்க இடனுண்டு. நண்டு பிறப்பதால் அதன் தாய் சாகும் கொடுமை ஒரு காட்சி;பிறந்த பார்ப்பினைப் பெற்ற முதலையே தின்னும் அன்பின்மை மற்றொரு காட்சி. தாய் சாகுமாறு பிறக்கும் நண்டும், தன் பார்ப்பினைத் தின்னும் முதலையும் ஒரே இடத்தில் வருகின்றன.

*தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு*
*பிள்ளை தின்னும் முதலைத்து அவன்ஊர்*

(ஐங். 24)

[புள்ளிக் கள்வன் : புள்ளிகளை உடைய நண்டு—முதலைத்து : முதலையை உடையது.]

நண்டு பிறப்பதால் அதன் தாய் சாகும் நிலை—தாயால் பெறலாகும் பிறப்பினைப் பெற்றபின் நண்டு தன் தாயைத் துறப்பதாகிய நிலை – தலைவி, பரத்தையர் ஆகியோரிடம் பெறலாகும் நலம் அழியும் வண்ணம் தலைவன் மாட்டுத் தோன்றிய பொய்யொழுக்கத்திற்குப் பொருந்துவதாயிற்று. அங்ஙனமே அடுத்த காட்சியும். தானே கருவினை ஓம்பிப் பெற்று வளர்த்த பார்ப்பினை முதலை வளர்த்தலே ஒழுங்கு; அந்நெறி மீறித் தன் குட்டியைத் தானே தின்னும் கொடுமை முதலையிடம் இருக்கின்றது. அதுபோல, காதல் பெற்றுக் காதல் ஊட்டி அருள் செய்த தலைவன் அப்பண்பு மாறுவண்ணம் தன்னால் அருள் செய்யப்பட்ட பெண்ணிடம் இருப்பதே முறை. அதனை மீறித் தலைவன் அருள் கொல்பவனாய் இருக்கும் நிலைக்கு தன் பார்ப்புத் தின்னும் முதலையின் நிலை பொருந்துவதாயிற்று. ஒன்றோடு ஒன்று முரண்பட்ட இரண்டு இயற்கைக் காட்சிகளைப் பண்பால் முரண்கொண்ட தலைவனின் இருமை நிலைக்கு ஏற்ப அமைத்த நலம் பெரிதும் பாராட்டத்தக்கது.

இன்னொரு பாடலிலும் தாய் முதலையின் கொடுமையை எடுத்துரைத்துள்ளார் இப் புலவர் பெருமான். 'தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை'* என்னும் இடத்திலும் தலைவனது அன்பின்மையே குறிக்கப்படுகின்றது.

தாயின் சாதற்குக் காரணமாகிய நண்டொடும், தன் பார்ப்பினைத் தானே தின்னும் முதலையொடும் முரணிய முறையில் மருதநிலத்தில் வாழும் உயிர் ஒன்றினையும் நமக்கு ஓரம்போகியார் நினைவூட்டுகின்றார். தன் தாயின் முகம் பார்த்துப் பார்த்து வளர்கின்றதாம் ஆமையின் இளம் பார்ப்பு:

*தீம்பெரும் பொய்கை யாமை இளம்பார்ப்புத்*
*தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாங்கு*

(ஐங். 44)

[தீம் : இனிய – யாமை : ஆமை – வளர்ந்திசினாங்கு : வளர்ந்தாற்போல]

இளைய யாமை வளர்தற்குத் தாய் ஆமையின் முகக் காட்சி இன்றியமையாதது என்ற

* ஐங். 41

குறிப்பு இப்பாட்லில் உள்ளது. அருளின் நிலைக்களனாய் அன்பின் களஞ்சியமாய் ஆமையின் முகம் அதன் பார்ப்புக்குத் தோன்றும் போலும்.*

இயற்கைக் காட்சிகளைக் காட்சிப் புலனாற் கண்டும் காட்டியும், கேள்விப் புலனால் கேட்டும் கேட்பித்தும், முகர்தற் புலனால் முகர்ந்தும் முகர்வித்தும் சொல்லோவியங்கள் அமைப்பது புலவர்தம் மரபு. ஓரம்போகியாரின் பாடல்களை நோக்குமிடத்து, இயற்கை அரங்கில் எண்ணற்ற வகையில் எழுந்து இன்பமும் துன்பமும் ஊட்டுகின்ற ஓசை நயங்களில் அவர் சிறிதும் கருத்துச் செலுத்தினா ரல்லர் என்றே தோன்றுகின்றது. அவர்தம் பாடல்களில் ஓரிடத்தேனும் ஓசைக்கு இடம்தரும் ஓவியம் காணப்பெற வில்லை. பாடல்வழி நோக்குமிடத்து, இயற்கை யரங்கில் ஒரு பெரும் மௌன நாடகம் நடிக்கப்படுவது போலவே தோன்றுகின்றது. அவ்வாறே நறுமணங்களின் குறிப்பும் இவர்தம் பாடலில் யாண்டும் இல்லை.

காட்சிப் புலன் கொண்டு ஓரம்போகியார் இயற்கையைக் கண்டுணர்ந்த திறம் எத்தகையது என ஆயுமிடத்து, இயற்கை யரங்கில் நிகழும் இயக்கங்களும், அவ்வரங்கில் கண்ணிறைந்து விளங்கும் கணக்கற்ற பொருள்களின் வடிவங்களும் ஓரம்போகியாரின் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்துள்ளன என்பதை அறியலாம். பொருள்களின் வடிவும் இயக்கமும் இவர் நெஞ்சில் இடம் பெற்ற அளவுக்கு, இயற்கையில் இலகும் பல நிறங்களின் பொலிவு இடம் பெறவில்லை.

ஓரம்போகியாரின் இயற்கை ஓவியங்களில் இயக்கம் பெரிதும் இடம் பெற்றுள்ளதைப் பின்வரும் சில எடுத்துக்காட்டுகளால் உணர லாகும். சிரற் பறவை ஒன்று இரால் மீனைத் தின்றுவிட்டுப் பறந்து சென்று ஒரு மருதமரத்தின் தாழ்ந்த கிளையில் உறங்குகின்றது.+ கயல் மீனை மேய்ந்த நாரை வைக்கோற் போரிலே சென்று தங்குகின்றது.○ நிலையியற் பொருளாம் வேழத்தில் பூத்த மலரில்கூட இயக்கமே காண்கின்றது புலவர்தம் உள்ளம். வேழ வெண் மலர் புதர்மீது ஆடிக்கொண் டிருந்ததாம்.△ மருத நிலத்தின் சேற்றில் விளையாடிய நண்டு முள்ளி வேரை ஒட்டிய வளையில் சென்று நுழைகின்றது.∞ மற்றொரு நண்டு செந் நெல்லின் கதிர் ஒன்றினை ஈர்த்துக் கொண்டு, நீர் நிறைந்த வயலில் தண்ணென்றிருக்கும் வளைக்குள் நுழைகின்றது.** ஈரமாயுள்ள நண்டு வளைகளிலே நெல்லின் 'மலர்'கள் சொரிந்து வளையின் தொளையை நிரப்புகின்றன.□ கரைகளில் ஓங்கி வளர்ந்துள்ளன மாமரங்கள். முதிர்ந்து பழுத்த பழங்களின் மணம் அந்தச் சூழலை நிரப்புகிறது. முதிர்ச்சியின் மிகுதியால் உதிர்கின்ற பழங்கள் நீர் நிறைந்த பொய்கையிலே துடுமென வீழ்கின்றன.≠

* இவ் வுவமைக்குரிய விளக்கத்தினைப் பழைய உரை பின்வருமாறு தருகின்றது: நின் மார்பாற் கொள்ளும் பயனன்றிக் காட்சி யெய்தவும் பெறுகின்றிலள் எனப் புலந்து (தோழி) கூறியவாறறிக.

+ இரால் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்கும்...... —அகம். 286.

○ கயலார் நாரை போர்வில் சேக்கும் — ஐங். 9.

△ புதல்மிசை நுடங்கும் வேழ வெண்பூ — ஐங் 17.

∞ அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேர்அளைச் செல்லும் — ஐங். 22.

** செந்நெலம் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
தண்ணக மண்அளைச் செல்லும் — ஐங். 27.

□ தண்ணக மண்அளை நிறைய நெல்லின்
இரும்பூ உதிர்க்கும் — ஐங். 30.

≠ நறுவடி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம் — ஐங். 61.

தந்தி: "கெங்கா—கோயமுத்தூர்" டெலிபோன்: 616.

# ஸ்ரீ கார்த்திகேயா ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 18,
சிங்காநல்லூர் போஸ்ட், கோயமுத்தூர்.

ரிங் கதிர்கள் : 17048
டபிளிங் : 760
கோனிங் : 120



*ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.*

உயர்ந்த ரக 40, 60, 80, ஒற்றை, இரட்டை,
முறுக்கு நூல்கள் தயார் செய்கிறோம்.
$40^{s}$ ஸ்டேப்பிள் நூல் கிடைக்கும்.

*விபரங்களுக்கு:*

**G. ராமசாமி நாயுடு,**
கவர்னிங் டைரக்டர்,
விலாசத்திற்கு எழுதவும்.

டெலிபோன்: நெ. 17. தந்தி: "ரங்க விலாஸ்"

# ஸ்ரீ ரங்க விலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

# வீவிங் மில்ஸ் லிமிடெட்.

*

(ஸ்தாபிதம்: 1922-ல்)

**ரிஜிஸ்தர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.**

| | | |
|---|---|---|
| மூலதனம் | ... | ரூ. 16,00,000 |
| வெளியிடப்பட்டு வசூலான | | ரூ. 15,02,500 |
| வேலைசெய்யும் மொத்த கதிர்கள்: | | 30,000 |

---

20 நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள்,
பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும்
கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

---

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு
கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

*

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

**பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,**

பூளைமேடு. —::— கோயமுத்தூர்.

*

**இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த
சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.**

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் உரமாகிய எக்ஸ்பெல்லர் திலக்கடலைப் புண்ணாக்கு தயார் செய்கிறோம். கணிசமான அளவில் எல்லோருக்கும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.




# ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்